பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 28 ஞாயிற்றுக்கிழமை (12.07.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 228

# உலக வங்கியின் நிதி உதவியுடன் யாழ். – வவுனியா ஏ–9 வீதி நவீனமுறும்

## தென்னிந்திய திருச்சபைப் பேராயரிடம் ஜனாதிபதி தகவல்

கொழும்பு, ஜூலை 12

யாழ்ப்பாணம் - வவுனியா ஏ-9 வீதி, நான்கு வழித் தடங்கள் கொண்ட நெடுஞ்சாலையாக நவீனமயப்படுத்தப்படும். இந்த அபிவிருத்திப் பணியைச் செய்வதற்கு உலக வங்கி நிதி உதவி வழங்குவதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளது. ஏ-9 வீதியூடாக மக்கள் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டதும், குறுகிய காலத்தில் அந்த வீதியை நவீன மயமாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தம்மைச் சந்தித்த தென்னிந்திய திருச்சபையின் பேராயர் வண. எஸ். தியாகராஜாவிடம் ஜனாதிபதி இத்தகவலைத் தெரிவித்தார்.

யாழ். - கொழும்பு ஏ-9 வீதியூடான மக்கள் போக்குவரத்து, படையினரின் வழித்துணையுடன் இன்னும் இரண்டொரு நாள்களில் ஆரம்பமாகிவிடும் என்றும் ஜனாதிபதி அப்போது தெரிவித்தார் என்று அறியப்படுகிறது.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## அகதி முகாம் மக்களுடன் மன்னார் ஆயர் சந்திப்பு

கொழும்பு, ஜூலை 12

மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை வவுனியா மற்றும் செட்டிக்குளம் ஆகிய இடங்களில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களைச் சந்தித்து வருகின்றார்.

அந்தந்த நலன்புரி நிலையங்களில்

(24 ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச்சுடர் நாளை

ஜி.சி.ஈ உயர்தர மாணவர்களுக்கான 2 பக்கங்கள் கொண்ட மாதிரிவினாத்தாள்கள்

## புதிதாக கொழும்பு – யாழ். விமான சேவை; விமானப்படை விரைவில் ஆரம்பிக்கிறது

கொழும்பு, ஜூலை 12

இரத்மலானைக்கும் பலாலிக்கும் இடையிலான பயணிகள் விமானசேவையை விரைவில் விமானப் படையினர் ஆரம்பிக்க உள்ளனர்.

விமானப் படைப் பேச்சாளர் ஜானக நாணயக்கார இத்தகவலை நேற்றுத் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

போர் முடிவடைந்ததால் விமானப் படை வசமுள்ள விமானங்களை பயணிகள் சேவைக்குப் பயன்படுத்த முடிவுசெய்யப்பட்டுள்ளது.

90 பேர் பயணஞ்செய்யக்கூடிய வசதி

(24 ஆம் பக்கம் பார்க்க)

## அனைத்துக் கட்சிக் குழுவின் இறுதி யோசனை இம்மாத இறுதியில் ஜனாதிபதியிடம்

கொழும்பு, ஜூலை 12

இனப் பிரச்சினைத் தீர்வுக்கான அனைத்துக் கட்சி தெரிவுக்குழுவின் இறுதி யோசனைகள் இம் மாத இறுதியில் நிறைவுசெய்யப்பட்டு அவை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும்.

அந்தக்குழுவின் தலைவரும் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண இதனைத் தெரிவித்தார்.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## 'வணங்காமண்' நிவாரணப் பொருள்கள் இன்று வவுனியா முகாம்களில் விநியோகம்

வவுனியா, ஜூலை 12

ஐரோப்பிய நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த மக்கள் போரினால் பதிக்கப்பட்ட தமது உறவுகளுக்கு வழங்கிய உதவிப்பொருள்கள் இன்று வவுனியா நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்கு விநியோகிக்கப்பட உள்ளன.

'வணங்காமண்' கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டு பலநாள் இழுபறியின் பின்னர்

(24 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை. அனுமதியில் தவறு கண்டோர் கல்வி அமைச்சிடம் முறையிடலாம்

### கல்வியமைச்சர் பிரேமஜயந்த சொல்கிறார்

கொழும்பு, ஜூலை 12

பல்கலைக்கழக அனுமதி வழங்கியதில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது எனக் கருதும் மாணவர்கள் கல்வி அமைச்சிடம் முறைப்பாடு செய்யமுடியும். அம்முறைப்பாடுகள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் பரிசீலனைக்கு முன் வைக்கப்படும்.

- இவ்வாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில் தெரிவித்தார்.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் மாவட்ட மட்டத்திலோ அல்லது அகில இலங்கை மட்டத்திலோ பெறப்படும் புள்ளிகளை அடிப்படையாக வைத்து பல்கலைக்கழக

(24 ஆம் பக்கம் பார்க்க)

## 'ராடர்'கள் பொருத்தப்பட்ட பின் குடாநாட்டு மீனவர் 35 அடி நீளப் படகுகளில் தொழில் செய்ய அனுமதி

யாழ்ப்பாணம், ஜூலை 12

கரையோர கடற்படைமுகாம்களில் 'ராடர்'கள் அமைக்கப்பட்ட பின்னர் 35 அடி நீளமான படகுகளில் குடாநாட்டு மீனவர்கள் ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்படும்.

யாழ். செயலகத்தில் நடைபெற்ற உயர் மட்ட மாநாட்டில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்காக இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். அரச அதிபர் கே.கணேஷ் மற்றும் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள், கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள், கடற்படை

(24 ஆம் பக்கம் பார்க்க)

## உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்கும் தகுதி அரசுக்கு உண்டு; எந்த நாட்டுக்கும் அடிபணியாது; சர்வதேசம் தலையிடக் கூடாது!

### பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா



கொழும்பு, ஜூலை 12

உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்கும் தகுதி எமது அரசுக்கு உண்டு. இலங்கை எந்த நாட்டுக்கும் ஒரு போதும் அடி பணியப் போவதில்லை. எங்கள் உள்நாட்டுப் பிரச்சினையில் சர்வதேசம் தலையிடக் கூடாது.

இவ்வாறு கடும் தொனியில் கூறியிருக்கிறார் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா.

இராணுவ வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஜோன் டி சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையிலேயே ரட்ணசிறி மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

சர்வதேச நாடுகளுடன் இலங்கை நட்புறவுடன் வாழவே விரும்புகிறது. எனவே உள்நாட்டு பிரச்சினையில் சர்வதேசம் தலையிடக்கூடாது.

(24 ஆம் பக்கம் பார்க்க)

### போரில் உயிரிழந்தோர், காயமுற்றோர்

## எண்ணிக்கையை மீளாய்வு செய்யுமாறு ஐ.நாவிடம் கோரவுள்ளார் அமைச்சர்

கொழும்பு, ஜூலை 12

வன்னிக் களமுனையில் போர் இடம் பெற்ற வேளையில் பொதுமக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் காயமுற்றோர் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள எண்ணிக்கையை மீளாய்வு செய்யுமாறு அதனிடம் கோரவுள்ளோம்.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கின் புனரமைப்புப் பணிகளுக்கு சீனாவின் பிரபல வங்கி நிதி உதவி

கொழும்பு, ஜூலை 12

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட வட பகுதியின் புனரமைப்பு பணிகளுக்கு நிதியுதவி வழங்க சீனாவின் பிரபல வங்கியான ஏற்றுமதி இறக்குமதி (எக்ஸிம்) வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை வெளியுறவு அமைச்சர் ரோஹித போகொல்லாகமவை நேற்று சந்தித்துப் பேசியபோது சீன எக்ஸிம் வங்கியின் தலைவர் லீ ரோகு இதைத் தெரிவித்தார்.

மேலும் இலங்கை வட பகுதியில் அரசு

(24 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கனரக வாகன சாரதிகள் தேவை

முன் அனுபவமுள்ள கனரக வாகனச் சாரதிகள் தேவை. தகுதியுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை (20.07.2009) ஆம் திகதிக்கு முன்பாக கீழ்வரும் முகவரியில் பின்வரும் ஆவணங்களுடன் நேரடியாக ஒப்படைக்கவும்.

1. செல்லுபடியாகும் கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம்.
2. கௌரவமான இருவரது நற்சான்றிதழ் பத்திரம்.
3. வயது எல்லை : 25-45 வயது

உதவி நிர்வாக முகாமையாளர், யூரோவில் 866, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.



## நிஷானந்தா ஜுவல்லறி இடமாற்றம்

இல.75 (121), கஸ்தூரியார் வீதியில் பல வருடங்களாக இயங்கி வந்த எமது ஸ்தாபனம் கடந்த 06.05.2009 முதல் இலக்கம் 6, கஸ்தூரியார் வீதி, (கபிலா பாட்டா அருகில்) என்னும் முகவரியில் புதுப்பொலிவுடன் இயங்கி வருகின்றது என்பதனை எமது நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

எமது புதிய முகவரி: "நிஷானந்தா ஜுவல்லறி இல.6, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (கபிலா பட்டா அருகில்). T.P.: 021 222 7985



## Study in India

அனுமதிக்கு முந்துங்கள் முன்பதிவுகள் ஆரம்பம் A/L முடித்த மாணவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

Admission to Universities in Channai + Bangalore

SRM Annamalai, Hindustan, Vel's - Channai

**Courses Offered**

MBBS | BDS | BBM Management | BCA Comp. App<sup></sup>

B.Sc Biotech, Micro Bio, Gene, Bioche, Vis comm, Fashion Design

LLB 3yrs/5yrs | B.Phar | BMLT | BSW Social Work

BE — BE Mech, E&C, EEE, Civil, Aerospace, Comp sci, Bio Tech, Biomedical, Telecom, Automob, BioInfo, IT Etc.

LAKSHAYA EDUCATIONAL CONSULTANT

108, கலைமகள் வீதி, கல்வியன்காடு, யாழ்ப்பாணம்.

077 9213789 | 077 5143866 | 077 9703866 | 021 2226465


## கண்ணீர் அஞ்சலி



கைதடி அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலையில் பரிசாரகராக கடமையாற்று க.கோபஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தை

### சின்னப்பொடியன் கந்தன்

அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்த கவலை அடைகிறோம். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலை, கைதடி. (86949) பணியாளர் நலன்புரிச் சங்கம்.

## 31 ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம் 19★04★1942 மறைவு 12★06★2009

திருமதி

### சின்னம்மா வேலுப்பிள்ளை

கடந்த (12.06.2009) அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (12.07.2009) ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் உள்ள தற்காலிக இல்லத்தில் நடைபெறுவுள்ளன.

இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய உணவிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன்.

வே.குணசீலன் (மகன்), [ஆசிரியர் - அச்செழு சைவப்பிரகாச வித்தி.] தொ.பே-0779491050

நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

### சீனியர் சண்முகநாதன்

[இளைப்பாறிய படவரைஞர் உதவியாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்]

கடந்த 12.06.2009 அன்று, எமது குடும்பத் தலைவரும், எம் ஆருயிர் நாயகருமாகிய சீனியர் சண்முகநாதன் இறைவனடி சேர்ந்த செய்தியறிந்து எமக்கு நேரிலும், தொலைபேசி மூலமும், தந்தி மூலமும், அனுதாபத்தை வழங்கியவர்களுக்கும், இறுதிக்கிரியையில் கலந்துகொண்டு உதவிய அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (12.07.2009) ஞாயிற்றுக்கிழமை வில்லூன்றி தீர்த்தக்கரையில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும், அதனைத் தொடர்ந்து வீட்டில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி!

உடுவில் கிழக்கு, சுன்னாகம். மனைவி, பிள்ளைகள்.

19 ஆம் பக்கத்தில் மூத்த கல்வியாளர் ஆ[illegible] அவர்களுடனான நேர்காணலின் முதலாவது பகுதி 19 ஆம் பக்கத்தில் பிரசுரமாகிறது.

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 12

வண.சிவன் சனசமூக நிலையம் நடத்தும் சிவன் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுவிழா இன்று பிற்பகல் ஒரு மணிக்கு வைத்தீஸ்வராக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக லீட்ஸ் நிறுவன திட்ட அலுவலர் பா.தீபனும், சிறப்பு விருந்தினர்களாக வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் என்.வன்னியசிங்கம், உள்ளூராட்சி திணைக்கள அதிகாரி திருமதி கிருஷ்ணதயாநிதி ஆகியோரும் கலந்து கொள்வர். (1)

* * *

மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்ட எம்.எஸ்.சி 2009 வெற்றிக் கிண்ணத்திற்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதி நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டு மைதானத்தில் மோகனதாஸ் சனசமூக நிலைய தலைவர் எஸ்.றொசான் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்டப் பிரதி அமைப்பாளர் குசைமுத்து அலெக்சாண்டர் சாள்ஸ்சும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் வே.சிவராஜலிங்கம், மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய அதிபர் மு.பாலசுப்பிரமணியம், மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை அதிபர் எஸ்.கிருஸ்ணன், சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.சாந்தகுமார, சாவகச்சேரி நுணாவில் 523 ஆவது பிரிகேட் படை அதிகாரி உட்பட பலர் கலந்து கொள்வர். (50-131)

* * *

யாழ்.தபாலக விளையாட்டுக் கழகம் அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், வங்கிகளுக்கு இடையே நடத்தும் மென்பந்து, கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

மென்பந்து சுற்றுப்போட்டி அரியாலை [illegible] நிலைய விளையாட்டு மைதா[னத்]தில் காலை 8.30 மணிக்கும் - கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி திருமகள் சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் காலை 9 மணிக்கும் - ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. (1)


## விற்பனைக்கு

கொழும்பாவணையிலுள்ள 88 Sri. CD 200 சிவப்பு நிற மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு :- 0774016828

## பெண் பணியாளர் தேவை

மூக்குக் கண்ணாடி விற்பனை நிலையத்திற்கு ஆங்கில அறிவுள்ள பெண் பணியாளர் தேவை. வயது 30க்கு மேல் இருத்தல் வேண்டும். யாழ். வண்ணார் பண்ணைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது. உங்கள் விண்ணப்பத்தை 15ஆம் திகதிக்கு முன்னர் முகாமையாளர் 86, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகத்துக்கு அனுப்பிவைக்கவும். (86939)

## விற்பனைக்கு

இயந்திரத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட கொங்கிறீற் கற்கள், வேலித்தூண்கள் விற்பனைக்குண்டு. கொங்கிறீற் பிளாட்டுக்களும் ஓடர்க்கு செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு - 021 222 8193

## தேவை

யாழ்.நகரப் பகுதியில் வங்கி ஒன்றின் தேவைக்கு 2000-2500 சதுர அடி அளவில் வாகனத்தரிப்பிட வசதியுடன் கூடிய கட்டடம் ஒன்று வாடகைக்குத் தேவை.

தொடர்பு - 077 3171530 (86560)


## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



தோற்றம் 21 ★ 03 ★ 1920 — மறைவு 24 ★ 06 ★ 2009

### திருமதி செல்லத்துரை பாக்கியம்

எமது தாயாரின் மரணச்செய்தியறிந்து வருகைதந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (12.07.2009) ஞாயிற்றுக்கிழமை நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெறவிருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.621, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். பிள்ளைகள், குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### அம்பலவி வேலாயுதம்

(ஓய்வுபெற்ற இ.போ.சபை நடத்துநர், பருத்தித்துறை சாலை)



கோயிற் கடவை, துன்னாலை மத்தி, கரவெட்டியைச் சேர்ந்த அம்பலவி வேலாயுதம் நேற்று (11.07.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சஞ்சீவி வாசா", கோயிற்கடவை, துன்னாலை மத்தி, கரவெட்டி. தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி தியாகராஜா கனகம்மா



அராலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தியாகராஜா கனகம்மா நேற்று முன்தினம் (10.07.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - பறுபதபத்தினி தம்பதியினரின் அன்பு மகளும், தியாகராஜாவின் அன்பு மனைவியும் சிவபாலன், சிவராஜன், சிவநேசன், சிவரஞ்சினி, சிவரஞ்சன், சிவகுமார் ஆகியோரின் அன்புத் தாயும், சுபத்திரா, சந்திரமலர், ஜெகதீஸ்வரி, Dr.சிறிபவானந்தராஜா, கலாஜினி, சுகந்தா ஆகியோரின் அன்பு மாமியும், அமரர் திருமதி கந்தையா இரத்தினத்தின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2009) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலட்டி மூலை, அராலி மத்தி, வட்டுக்கோட்டை. தகவல் ச.தியாகராஜா (கணவர்).

### கதிர்காமதம்பி தங்கராஜா J.P.

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்)



அல்வாய் மேற்கு, திக்கத்தைச் சேர்ந்த கதிர்காமதம்பி தங்கராஜா நேற்றுமுன்தினம் (10.07.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமதம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான வேலும் மயிலும் - பத்தினிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் ப.கந்தஞானியார் (மாதகல்) - காலஞ்சென்ற தங்கம் தம்பதியினரின் சம்பந்தியும் நகனேசம்மாவின் அன்புக் கணவரும் சுமதி - இளங்கோஞானியாரின் (ஆசிரியை, யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்) பாசமிகு தந்தையும் Dr.க.இளங்கோஞானியாரின் (யாழ். போதனா வைத்தியசாலை) மாமனாரும் இந்திராணி-சிறீரங்கன் (பிரதி அதிபர் யாழ்.மெதடிஸ்த பெண்கள் பாடசாலை, பருத்தித்துறை), காலஞ்சென்றவர்களான சீவரதி, வேலுப்பிள்ளை, விநாயகமூர்த்தி (அதிபர், றோ.த.க. பாடசாலை, அல்வாய் வடக்கு) மற்றும் மங்களேஸ்வரன், குகேஸ்வரன் ஆகியோரின் சிறிய தந்தையும் சிறீரங்கன், ஞானசெல்வி, விநாயக மூர்த்தி (கல்வியியலாளர், தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்), கெங்காதரன் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான நாகபூசணியம்மா, வேலுப்பிள்ளை மற்றும் நாகேஸ்வரி, வேலும் மயிலும், கணேசமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் ஞானமதூரி, கதிர்ஞானியார், சனந்கன், சிவோத்தமபூசணி, வித்தியாபூசணி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.07.2009) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ந.கனேசம்மா (மனைவி), Dr.க.இளங்கோஞானியார் (மருமகன்), திருமதி இ.சிறீரங்கன் (மகள்).

அல்வாய் மேற்கு, திக்கம். (87001)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்ட கலை கலாசார பேரவை நடத்தும்
# யாழ்.மாவட்ட கலைஞர் விவரத் திரட்டு – தொகுதி – I
# நூல் வெளியீட்டு விழா – 2009

**இடம்: இளங்கலைஞர் மன்றம், நல்லூர். காலம்: 12.07.2009 ஞாயிற்றுக்கிழமை காலை 09.30**

## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் ஆசிச்செய்தி



அன்புசார் பெருந்தகையீர்!

யாழ். மாவட்ட கலை கலாசாரப் பேரவை 'கலைஞர் விவரத் திரட்டு' என்னும் தொகுப்பு நூலினை வெளியிடு வதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். யாழ். மாவட்ட கலாசாரப் பேரவை தனது பணியின் ஊடாக இங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் கலைஞர்களை பெருமைப் படுத்தி சிறப்புச் செய்துகொண்டிருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சி. இப்பேரவை இசை, சிற்பம், ஓவியம், இலக்கியம் போன்ற கலைகளை வளப் படுத்திக் கொண்டிருக்கும் கலைஞர்களுடைய வர லாற்றை ஆவணப்படுத்தும் வகையில் இத்தொகுப்பு நூலை வெளியிடுவது இந்தநாட்டு மக்கள் அனைவருக்கும் பெருமையைத் தருகிறது. யாழ் என்னும் இசைக் கருவியை திறமையாக வாசித்த பாணனுக்கு பரிசாகக் கிடைத்ததினால் யாழ்ப்பாணம் எனப் பெயர் கிடைத்தது. உயிரினங்கள் அனைத்தும் சிறப்போடு வாழ இசையும் கலையும் பெரும் உதவியாகும். இதனையே 'இசையால் வசமாகா இதயம் எது' என்றான் கவிஞன். நம் இறைவனும் இசையாகவும் இசையின் பயனாகவும் விளங்குகின்றான். இப் பெருமையைக் கொண்ட கலையை நூல்வடிவில் ஆவணப்படுத்துகின்ற கலை கலாசார பேரவைத் தலைவரும் அரசாங்க அதிபருமான திரு.க. கணேஷ் அவர்களையும், முன்னாள் மேலதிக அரசாங்க அதிபரும் வடக்கு மாகாண பிரதம செயலாளருமான திரு.ஆ.சிவசுவாமி அவர்களையும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம். முதலாவது தொகுப்பு சிறப்பாக அமைந்து அனைவருக்கும் பயன்பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**'என்றும் வேண்டும் இன்ப அன்பு'**

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
நல்லை ஆதீனம்.

## மாவட்டக் கலை கலாசாரப் பேரவையின் கலைஞர் விவரத் திரட்டு நூல் வெளியீடு - வாழ்த்துரை



யாழ்.மாவட்டக் கலை கலாசாரப் பேரவை வெளியிடும் கலைஞர் விவ ரத் திரட்டு தொகுதி -1 நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மிகவும் மகிழ்வடைகின்றோம்.

சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம், இலக்கியம் என்பவை உட்பட கலைகள் காலங்களின் நியதிகள் வரையறைகளை உள்வாங்கி கருத்து வெளிப்பாடுகளை உடையனவாகக் கலைஞர்களால் படைக்கப்படுகின்றன. இக்கலைஞர்கள் தமது கலாரசனையுடனான நுண்ணறிவின் மூலம் தமது கடினமான உழைப்பினால் நமது கலை பண்பாட்டுப் பாரம்பரியங்களைக் கலைகள் மூலம் எமக்கு உணர்த்தி நிற்கின்றார்கள். இவர்கள் என்றென்றும் போற்றத் தக்கவர்கள். இவர்களின் சேவைகள், விவரங்கள் என்பவை ஆவணப்படுத்தப்பட வேண்டியனவும் உலகறியச் செய்யப்பட வேண்டியனவுமாகும்.

யாழ்.மாவட்ட கலை கலாசாரப் பேரவையினர் கலைஞர்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவர்களின் சிறப்புக்களையும் அவர்கள் பற்றிய தகவல்களையும் இந்நூலின் மூலம் வெளிக் கொண்டு வருவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ள்னர். இந்நூலின் உருவாக்கத்துக்கு இப் பேரவையின் தலைவரும் யாழ்.மாவட்ட அரசஅதிபருமாகிய க.கணேஷ் அவர்கள்வழங்கிய தலைமைத்துவமும் வாய்ப்பும் அவரது பங்களிப்பும் பேருதவியாக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பணியில் ஈடுபட எனக்கும் ஓரளவு வாய்ப்புக் கிடைத்தமைக்காக மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய கால கட்டத்தில் கலைத்துறைக்கு மிகவும் அவசியமான இந்நூலினை வெளியிடுவதற்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நன்றி கலந்த பாராட்டுதல்களைத் தெரிவிப்பதுடன் இந்நூல் வெளியீட்டு விழா சிறப்புற நடைபெறுவதற்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆ.சிவசுவாமி,
பிரதம செயலாளர்,
வடக்கு மாகாணம்.




## மௌலவி எம்.எச்.எஸ். அலவுதீனின் ஆசிச் செய்தி



எல்லாம் வல்ல இறைவனின் பெயரால் எழுதுகின்றேன்.

"இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி" இன்றைய சமூக சூழ்நிலையில் மலிந்து கொண்டிருக்கின்ற மனித இனத்தின் விடிவெள்ளிச் செயற்பாடாக கலை கலாசார நிகழ்வுகள் அமை தல் வேண்டும். அந்த வகையில் யாழ்.மாவட்ட செயலகம் மக்களது ஆக்கச் செயற்பாடுகளை வெளிக் கொணர்ந்து ஆவணப்படுத்தி வளரும் சந்ததியினருக்கும் கையளிக்கும் நல்ல விடயமாக கலைஞர் விவரத்திரட்டு தொகுதி - 1 நூலினை வெளியிடுவது பாராட்டப்பட வேண்டிய விடயம் ஆகும். வாழ்க்கைச் செலவு உச்ச நிலையில் இருக்கும் கால கட்டத்தில் மனித வலு, நிதி போன்றவற்றை செவ்வனே பயன்படுத்தி கலை கலாசார விழுமியங்களை மிளிரச் செய்கின்ற இம் மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பேருவகை கொள்கின்றேன்.

நபி(ஸல்) அவர்கள் உபதேசித்து அல்ஹதீஸ் "அநியா யம் செய்யும் நோக்கமோ அத்துமீறும் நோக்கமோ இன்றி எவரொருவர் ஒரு கட்டடத்தைக் கட்டினாரோ அல்லது ஒரு பயிரை நாட்டினாரோ இதனைக் கொண்டு ரஹ்மானுடைய படைப்புக்கள் நன்மையடையும் காலமெல்லாம் அவருக்கு நிலையான நற்கூலி கிடைத் துக்கொண்டே இருக்கும்".

இந்த வகையில் இந்த மலரினை பயனுள்ளவாறு வெளியிடும் யாழ்.பிரதேச செயலக கலாசாரப்பேரவை யினருக்கு எமது மனம் நிறைந்த பிரார்த்தனையையும் நல்ஆசியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மௌலவி எம்.எச்.எஸ் அலாவுதீன்
ஜும்மா பள்ளிவாசல், யாழ்ப்பாணம்.

## நூன்முகம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறு கலைத் துறைகளையும் சார்ந்து வாழ்கின்ற மற்றும் அமரத்துவம் அடைந்த வெளிநாடுகளில் வசிக்கும் ஏறத்தாழ ஐநூற்று ஐம்பது கலைஞர்களின் விவரங்களை உள்ளடக்கியதாக "கலைஞர் விவரத்திரட்டு" தொகுதி -1 நூல் வெளிவருகிறது.

இந்நூலிலே இடம்பெற்றுள்ள கலைஞர்களின் விவரங்கள் அனைத்தும் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைவாகப் பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்பட்டும் பிரதேச செயலக/உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் ஊடாகவும் கால வரையறை கொடுக்கப்பட்டு பெறப்பட்டன. ஒவ்வொரு கலைஞரின் விவரமும் அவரின் முழுப் பெயர், வயது ஈடுபாடுடைய துறை இத்துறைக்காற்றிய சேவைகள் இதன் மூலம் பெற்ற கௌரவிப்புக்கள், பட்டங்கள் விருதுகள் போன்ற விவரங்கள் மற்றும் கலைச் சேவையாற்றும் உறவுகள் பற்றிய விவரங்கள் உள்ளடக்கியதாக ஒவ்வாருவரின் தொகுப்பும் இடம்பெற்றுள்ளது. இவை இலக்கியம், இசை, நடனம், கட்புலக்கலை அல்லது காண்பியக்கலை, கைவினைக் கலை, தொழில் நுட்பக் கலைகள், ஏனைய கலைகள் என எட்டு இயல்களாக பிரிக்கப்பட்டு கலைஞர்களின் சொந்தப் பெயர்களின் அடிப்படையில் அகர வரிசை ஒழுங்கில் விவரங்கள் இடம்பெற்றுள்ளன.

யாழ். மாவட்டத்தைச் சார்ந்த பெரும்பாலான கலைஞர்களின் கலைச் சேவைகள் அவர்களின் விவரங்களை அறிந்து கொள்ளக்கூடிய வகையில் பயன்மிக்க ஒரு ஆவணமாக இக் கலைஞர் விவரத்திரட்டு தொகுதி - 1 விளங்குகிறதுஎனக் கூறலாம். இக் கலைஞர்கள் கலைத்துறைக் காற்றிய அரும் பெரும் சேவைகளை மீண்டும் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

கலை, கலாசாரப் பேரவை,
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

## யாழ்.ஆயரின் ஆசிச் செய்தி



கலையின் பிறப்பிடம், இதன் வாழிடம், போக்கிடம் எல்லாமே இயற்கை தான். இயற்கையில் இருக்கும் இந்த விலை மதிப்பற்ற கலைப்புதையலை, மனித உணர்வுகள் தரிசிக்கின்ற போது, கலை முழுமை பெறுகின்றது. அதனால்தான் மனிதன் எவனும் விதிவிலக்கின்றி ஆத்மார்த்தமாக நேசிக்கின்றான். இக்கலைகளைப் பட்டியலிட்டு 'ஆய கலைகள் அறுபத்து நான்கு' என்றனர் நம் முன்னோர்கள். இயந்திர உலகில் கவலைகளை மறக்கச் செய்யும் மருந்து. மனதை ஒன்றித்து ஆண்டவனிடம் அழைத்துச் செல்லும் அற்புதப் படைப்பு. இசைக் கலைக்கு இதிலோர் தனி இடமே உண்டு. பைபிளில், தாவீது பாடிய சங்கீதத்தில் 'வீணையே, யாழே விழித்தெழுங்கள்' என்கிறார். இப்படிப் பட்ட கலைகளின் காவிய நாயகர்களை வரலாற்றில் இடம்பெறச்செய்வது காலத்தின் தேவை. யாழ்.மாவட்டம் அதன் பாரம்பரியக் கலைகளுக்குப் பேர்போன மண். இன்று அவை மறைந்து வருவது வருத்தத்துக்கு உரி யது. இந் நிலையில் யாழ்.மாவட்ட 'கலைஞர் விவரத் திரட்டு தொகுதி - 1' என்ற நூல் வெளியீடு ஓர் அரிய முயற்சி. இதற்கு உருவம் கொடுத்த யாழ். மாவட்ட கலாசாரப் பேரவையைப் பாராட்டுவதோடு இந்நூல் வெளியீட்டுக்கு என் ஆசியையும் கூறி நிற்கின்றேன்.

பேரருட் திரு தோமஸ்
சவுந்தரநாயகம் ஆண்டகை,
யாழ்.ஆயர்.

## யாழ்.மாவட்ட கலை கலாசாரப் பேரவைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



ஒரு சமூகத்தின் கலை கலாசார விழு மியங்களே அச்சமூகத்தின் தனித்துவத்தை உலகிடை அடையாளப்படுத்தி நிற்கின்றன என்பது வரலாற்று உண் மையாகும். ஒரு சமூகம் காலத்திற்குக் காலம் வாழ்ந்த, வாழ்கின்ற வாழ்க்கை முறைமை களை கலை நயத்தோடு எடுத்தாண்ட போதே இயல், இசை, நாடகம், ஓவியம், சிற்பம் என்ற இன்னோ ரென்ன கலைகள் தோன்றலாயின. அவ்வழியில் எமது மண்ணின் பாரம்பரிய பண்பாடுகளைப் பிரதிபலிக்கும் வகையில், தமது இயல்பான கலை யாற்றல்களைத் கடும் உழைப்பினால் கலை வடிவில் வெளிக் கொணர்ந்த கலைஞர்களை இனங் கண்டு அவர் தம் சேவைகளை போற்றவும், அவர் கள் தொடர்பான விவரங்களை நாளைய சந்ததிக் காய் ஆவணப் படுத்தவும் வேண்டும் எனும் பேரு நோக்கில் 'கலைஞர் விவரத் திரட்டு தொகுதி -1' எனும் நூல் யாழ். மாவட்ட செயலக கலை கலாசாரப் பேரவையினால் வெளியிடப்படுவதில் நாம் பெரு மகிழ்வடைகின்றோம். மனதிற்கு மகிழ்வளிக்கும் கலைகளை நமக்களித்துவிட்டு மறைந்த கலைஞர்களுக்கு மதிப்பளிக்கவும், நம்மோடு வாழ் கின்ற கலைஞர்களை மகிழ்வித்து ஊக்குவிக்கவும் எமக்குக் கிடைத்த அரியதொரு வாய்ப்பே இம் முயற்சி எனலாம். ஏறத்தாழ ஐநூற்றி ஐம்பது கலைஞர்களின் விவரங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள இந்நூல் கலைஞர்களை இனங்கண்டு, மதிப்பளித்து உலகிற்கு அறிமுகம் செய்யும் முயற்சிக்கு முன்னோடியாய் அமைகின்றது. கலை கலாசாரப் பேரவையின் அயராத உழைப்பினால் ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கும் இப்பணியைத் தொடரும் பொறுப்பு எமது சமூகம் சார்ந்ததாகும். இந்நூல் வெளியீட்டின் வாயிலாக தொடங்கப்பெறும் இந் நற்பணி நன் முறையில் தொடர்ந்து நற்பலன் நல்க மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

க.கணேஷ்,
அரசாங்க அதிபர்/கலை,கலாசாரப்
பேரவைத் தலைவர்,
யாழ். மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கட்சிகளின் தலைவர்க
# பத்துக் கேள்விகளுக்கு அவர்க

**கேள்விகள்**

(01) புலிகள் இயக்கம் அழிக்கப்பட்ட பின் நடைபெறும் முதலாவது தேர்தல் இது. ஒரு பரீட்சார்த்த முயற்சியாகத் தமிழ்க் கட்சிகள் ஓரணியின் கீழ் களமிறங்க முடியாமல் போனதன் காரணம் என்ன?

(02) 13 ஆவது திருத்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட தீர்வுத் திட்ட யோசனை பற்றித் தங்களது கருத்து என்ன?

(03) இலங்கையில் இனி சிறுபான்மை, பெரும்பான்மை என இரண்டு இனங்கள் இருக்க முடியாது. தேசப்பற்றுள்ளவர்கள், தேசப்பற்று இல்லாதவர்கள் என்று இரண்டு பிரிவினர் தான் இருக்கமுடியும் என்ற ஜனாதிபதியின் கூற்றுப் பற்றித் தங்களது கருத்து என்ன?

(04) பதவிக்கு வருகின்ற கட்சியுடன் கூட்டுச்சேருவது என்ற யுக்தி வடகிழக்கிற்குப் பொருந்துமா?

(05) பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட பின்னரும் ஒரு லட்சம் பேரைப் படையில் சேர்த்துக் கொள்வது என்ற அரசின் அறிவிப்புப் பற்றித், தங்களது கருத்து என்ன?

(06) வடக்கில் ப... வர்த்தக நிலையங்... றிப் பேச்சு அடிப்ப... தொழிற்சாலைகள் ... சத்தில் தமிழர்களின் ... கூடிய ... என்று சிலர் கருத்... இதுபற்றி என்ன க... (உ தாரணம்: சீமெந்...



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை
**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா** சொல்கிறார்

பதில் (01) : ஐக்கியம் பற்றிப் பேசுவது இது முதல் முறையல்ல, கடந்த காலங்களில் பல தடவைகள் ஐக்கியம் பற்றிப் பேசப்பட்டது. 1977 இல் தமிழர் விடுதலைக் கூட்டணி, பின்னர் ஈழத்தேசிய விடுதலை முன்னணி, பின்னர் ஈரோஸ் - புலிகள் கூட்டு, 2004 இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இப்போது ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், த.வி.கூ. கூட்டமைப்பு. ஒற்றுமை பற்றிப் பேசுவோர் கடந்த காலங்களில் மக்களின் நலன்களை விடத் தமது தனிப்பட்ட நலன்களுக்கும் குழுவின் நலன்களுக்குமே முன்னுரிமை அளித்தனர். அதனால்தான் தொடங்குவதும் விடுவதுமாகக் காத்திரமின்றியிருந்தது. புலிகள் அழிந்த பின்னரும்

**செவ்விகண்டவர்: ந.பரமேஸ்வரன்**

இந்த நிலைதான் தொடர்கிறது. ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், த.வி.கூ. கூட்டினிடையே கூட ஒற்றுமையைக் காண முடியவில்லை. ரெலோவுக்குள் பிளவு, ஈ.பி.ஆர். எல். எவ்வுக்குள் பிளவு. ஆயினும் ஒற்றுமைக்கான சூழலை உருவாக்க ஈ.பி.டி.பி முயற்சிக்கிறது.

மக்களின் நாளாந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும். அரசாங்கம் உரிய விதத்தில் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். நாம் ஒரு பரீட்சார்த்த முயற்சியாக வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுகிறோம். வெற்றிலையுடன் சேர்ந்தால் என்ன நன்மை, சேராவிட்டால் என்ன நன்மை என்றுதான் பார்க்கவேண்டும். என்னை மிரட்டித் தவறான விடயங்களுக்குப் பணிய வைக்க முடியாது. விரைவில் ஜனாதிபதித் தேர்தல் வரப்போகிறது. ஜனாதிபதித் தேர்தல் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் பேரம் பேசுவதற்கான ஒரு களத்தை உருவாக்குகிறது. அப்போது நாங்கள் பேரம் பேசுவோம். 1977 இல் மக்கள் ஓரணியில் திரண்டனர். ஆனால், அரசியல் தலைவர்கள் இந்தியாவுக்கு ஓடி விட்டனர். 2004 இல் மக்கள் ஓரணியில் திரண்டனர். 22 பேர் நாடாளுமன்றம் போய் என்ன நடந்தது? தாங்களும் அழிந்து, மக்களையும் அழித்து, தங்களையோ மக்களையோ பாதுகாக்க முடியாதவர்களுக்கு என்ன தலை மைத்துவம்? நாங்கள் தெளிவாக இருக்கிறோம். ஒரு பரீட்சார்த்த முயற்சியாக எந்த வகையிலும் எமது தனித்துவத்தை விட்டுக்கொடுக்காத வகையில் தேர்தலில் போட்டியிடுகிறோம்.

பதில் (02) : 13 ஆவது திருத்தச்சட்டம் + என்பதை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார். சிலவற்றுக்குச் சர்வசன வாக்கெடுப்பு அவசியம். நாம் நடைமுறைச் சாத்தியமான விடயத்திலிருந்து ஆரம்பிப்போம். 13+ஆரம்பம்தான், அதை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்பதையே நாம் வலியுறுத்தி வருகிறோம். நிரந்தரத் தீர்வுக்கு இதற்கு அப்பாலும் போக வேண்டும்.

பதில் (03) : இது தென்னிலங்கை அர்சியல் சூழலுக்காகச் சொல்லப்பட்டது என்றே நான் நினைக்கிறேன். மற்றப்படி இலங்கை மக்கள் என்ற வகையில் கௌரவமாக, சமாதானமாக, சமத்துவமாக பிரச்சினை தீர்க்கப்பட்டால் சிறுபான்மை, பெரும்பான்மை என்ற பேதம் இருக்க மாட்டாது. ஆனால் ஒவ்வொரு இனத்தினதும் தனித்துவம் பேணப்படவேண்டும். உதாரணமாக இந்தியாவை எடுத்துக் கொள்ளுங்கள். இந்தியர்களைப் பொறுத்த மட்டில் முதலில் இந்தியன், பின்னர் தான் மொழி, அடுத்து மதம். கடந்த கால சிங்கள மற்றும் தமிழ் அரசியல்வாதிகளின் சுயலாப அரசியல் தவறுகளே இனப்பிரச்சினைக்குக் காரணம்; ஒரு மொழிக் கொள்கை போன்றன. ஜனாதிபதி உண்மையான நோக்கத்துடன் இதைக் கூறியிருந்தால் அது காத்திரமானதாக இருக்கும்.

பதில் (04) : ஏன் பொருந்த முடியாது? மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி. ஆட்சியில் உள்ள அரசுடன் கூட்டுச் சேர்ந்தால்தான் மக்களின் விடயங்களைக் கையாள முடியும்.

பதில் (05) : படைக்கு ஆள்சேர்ப்புச் செய்யும்போது இன விகிதாசாரப்படி தமிழர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டுமென நான் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கவுள்ளேன். படைக்கு ஆள் திரட்டுவது பிரச்சினையில்லை. இனி அதற்கு எந்தத் தடையும் இருக்க முடியாது. அவர்களின் உரிமைகளை வழங்கவேண்டும்.

பதில் (06) : எமது நிலம் பறிபோகாத வகையில், சுற்றாடலையும் பாதிக்காத வகையில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டும்.

பதில் (07) : நிச்சயம் விரைவில் மீள் குடியமர்த்தல் ஆரம்பிக்கப்படும்.

பதில் (08) : இதற்கு இரு காரணிகள் உள்ளன. இன்றைய இளைஞர்கள் வன்முறைச் சூழலுக்குள்தான் பிறந்து வளர்ந்துள்ளனர். மற்றையது வறுமை. அரசியல் ரீதியாக, சட்டரீதியாக, மனமாற்றம், பொருளாதார முன்னேற்றம் போன்றவற்றினூடாக இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணலாம்.

பதில் (09) : எனக்கு 15 வருடகால ஆயுதப் போராட்ட அனுபவமும் 20 வருடகால ஜனநாயக வழி அரசியல் அனுபவமும் உண்டு. அந்த அனுபவத்தின் ஊடாகத்தான் இதை நான் பார்க்கிறேன். என்னைப் பொறுத்த வரையில் இலங்கை -இந்திய ஒப்பந்தத்திற்கு முன் - பின் என இரு பிரிவுகளாக ஒப்பிட்டுப் பார்க்க விரும்புகிறேன். தமிழ்த் தலைமை சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தவில்லை என்றே நான் கூறுகிறேன். பிரேமதாஸ, சந்திரிகா, ரணில், மகிந்த எல்லோருடனும் வெளிநாடுகளில் எல்லாம் போய்ப் பேச்சுவார்த்தை நடத்தியபோது கிடைத்த சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்தவில்லை. ஆன்மீகக் குரு ரவிசங்கர் தமிழ்ச் செல்வனிடம் பிரபாகரனைச் சந்திப்பதற்கு அனுமதி கேட்டபோது, தமிழ்ச் செல்வன் அவருக்கு அனுமதி வழங்கவில்லை. இந்தப் பொன்னான வாய்ப்பைப் புலிகள் பயன்படுத்தவில்லை. மாவிலாறு, கிழக்கு, வடக்கு என ஒவ்வொன்றாகப் பறிபோனபோதும் யுத்த நிறுத்தம் செய்ய முன்வரவில்லை. மக்களையும் போராளிகளையும் பலி கொடுத்ததுதான் மிச்சம். தலைமை என்பது தன்னையும் பாதுகாத்து மக்களையும் பாதுகாக்க வேண்டும்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் ஒரு பொன்னான வாய்ப்பு. இதைப் புலிகளோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்வோ சரியாகப் பயன்படுத்தவில்லை.

பதில் (10) : அப்படி ஒன்றுமில்லை. வெற்றிடம் ஏற்பட்டுள்ளதாக நான் கருதவில்லை. தடைகள்

**சமகால அரசியற் பார்வை**

அகற்றப்பட்டுள்ளதேயொழிய வெற்றிடம் ஏற்பட்டுள்ளதாக நான் கருதவில்லை. ஜனநாயக வழித தலைவர்களை அழித்தவர்கள் புலிகள்தான். ஹிட்லர் போன்றவர்கள் மக்களையும் அழித்து, தாமும் அழிந்தது போன்றே புலிகளின் கதியும் இடம்பெற்றுள்ளது. எனினும் இதையிட்டு நான் சந்தோஷப்படமுடியாது. ஒருவருடைய மரணத்தில் இன்னொருவர் சந்தோஷப்படமுடியாது.

***************************



தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்
**வீ.ஆநந்தசங்கரி** சொல்கிறார்

பதில் (01): இதற்கு எனது விளக்கம் என்னவென்றால், காளான்கள் மாதிரி அரசியல் கட்சிகள் தோன்றியுள்ளன. இவற்றில் நச்சுக்காளான்களும் உள்ளன, நல்ல காளான்களும் உள்ளன. ஏற்கனவே சீல் குத்தப்பட்டவர்கள் யார் யார் எங்கே நிற்கிறார்கள் என்று எமக்குத் தெரியும்.

குறைந்த பட்சம் இந்தியா மாதிரி (மொடல்) தேவை. இந்தியாவில் சிறுபான்மையினருக்குக் கூடுதல் அரசியல் பாதுகாப்பு உண்டு. தமிழக மக்களும் தமக்குச் சமமான உரிமைகளை இலங்கைத் தமிழர்களும் அனுபவிப்பதாகச் சந்தோஷப்படுவர். தமிழ்நாடும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளும். இந்திய மத்திய அரசும் உதவிசெய்யும். எதிர்க்கட்சிப் பிரதித் தலைவர் கருஜெயசூரியா, கலைஞர், ஜெயலலிதா, வைகோ அனைவருடனும் நான் இது பற்றிப் பேசியுள்ளேன். நான் இதனைச் சொன்னதற்காக எனக்குத் துரோகி, வால்பிடி என்ற பட்டங்கள் சூட்டப்பட்டுள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒற்றுமை ஏற்படவிடாமல் தடுப்பதில் சிலர் ஈடுபட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் இப்போது அமைதிப்புயல்தான் வீசுகிறது. வசந்தம் வீசவில்லை. இதை நான் ஒரு சவாலாக ஏற்றுக் கொள்கிறேன். நடைபெறவுள்ள தேர்தல் தமிழ்த்தலைமையை யார் ஏற்பது என்பதைத் தீர்மானிக்கப் போகும் தேர்தல்.

தேர்தலுக்குப் பின்னர் தெரியும் வெள்ளாடு எங்கே கறுப்பாடு எங்கேயென்று. நான் எதையும் ஏற்கத் தயாராக உள்ளேன். ஒருபுதிய தலைமையை உருவாக்குவது தான் எனது நோக்கம்.

பதில் (02): இது தொடர்பாக 23.01.2008 அன்றே எனது கருத்தை நான் பகிரங்கமாகக் கூறியுள்ளேன். அந்தக் கூட்டத்தில் பலவெளிநாட்டுத் தூதுவர்கள், ஜனாதிபதி உட்படப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

13 ஆவது திருத்தச்சட்டம் காலங்கடந்த ஒன்று. அது வயிற்றுவலி மருந்து போன்றது. இப்போது வயிற்றுவலி முற்றி 'அல்சர்' வந்து விட்டது. நாம் பின்நோக்கிப்போக (Reverse gear இல்) முடியாது. 13ஆவது திருத்தச்சட்டம் அன்றே ஏற்கப்படாதது.

எமது நாடு சோல்பரியால் உருவாக்கப்பட்ட 29ஆவது பிரிவையே தூக்கியெறிந்தநாடு. 24மணித்தியாலயத்தில் சிங்களம் மட்டும் சட்டம் எனப் பிரகடனப்படுத்திய தலைவர்களைக் கொண்ட நாடு. மாவட்ட சபையிலிருந்துதான் மாகாணசபை தோன்றியது. நாம் பின்னோக்கிப் போகமுடியாது.

பதில் (03): நாட்டையும் நாட்டுமக்களையும் நேசிப்போர்தான் தேசப்பற்றாளர்கள். உண்மையில் நாட்டு மக்கள் அனைவரும் சமம். நாம் எல்லோரும் ஒரு தாய் பிள்ளைகள் என்ற நிலையை உருவாக்க முடியாதுள்ளது. சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் அனைவரும் சமம் என்ற நிலைவரும்வரை இதை ஏற்க முடியாது.

இந்தியாவின் சனத்தொகையின் இரண்டு விகித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை

## யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில்

## முகவர்கள்/ வியாபாரிகள்/ விநியோகத்தர்கள்

### விவசாய இரசாயனங்கள்

நெல், வெங்காயம், புகையிலை, திராட்சை மற் றும் வேறு எல்லாவித மரக்கறி பயிர் செய்கைக் கும் தேவையான சகலவிதமான விவசாய இரசாயனங்களுக்குமான விநியோகஸ்தர்கள் கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் தேவை.

### சக்தி பிறப்பாக்கிகள்/ டீசல் இயந்திரங்கள்

டீசல் ஜெனரேட்டர்கள், எல்விகேஸ் ஜென ரேட்டர்கள், டீசல் இயந்திரங்கள், டீசல் இயந் திரம் பொருத்தப்பட்ட தண்ணீர்க் குழாய்க ளுக்கான விற்பனை முகவர்கள், சேவை வழங்கு நர்கள் மற்றும் திருத்துநர்கள் தேவை.

### தந்தி தொடர்பாடல் பொருள்கள்

கைத் தொலைபேசிக் கோபுரங்கள், சக்தி இணைப்பு அலகுகள், யு.பி.எஸ்., மின்னல் தடுப்பு அமைப்புகளுக்கு விற்பனை முகவர்க ளும் சேவை வழங்குநர்களும்.

### மருந்தியல் பொருள்கள்

சகலவிதமான விஷேட மருந்தியல் பொருள்கள் Antibiotics, Dermatological, Alimentary Tract & Metabolism, Cardiovascular System, Antineoplastic agents முதலியவை உள்ளிட்டவைக்கான விநியோகஸ்தர்கள்.

### தொழிற்துறை இரசாயனங்கள்

குளோறின், நியோப்ரீன் றப்பர், சோடியம் பிக் கார்போனேட் மற்றும் அம்மோனியம் பைகாபர் னேட் முதலியவைகளை விற்பனை செய்யவும் விநியோகிப்பதற்கும் முகவர்கள் தேவை.

### பிளைவூட்-மெக்பிளை/லக்பிளை

பிளைவூட் கதவுகள் மற்றும் அலுவலகங்களுக்கான ஷீட்டுகள் மற்றும் வீடுகள் தொழில் நிலையங்களுக்குத் தேவையான ஷீட்டுக்கள் விநியோகிப்போர்.

### ஆய்வுகூட கருவிகள்/உபகரணங்கள்

PCR யந்திரங்கள், இரசாயன பகுப்பாயும் கருவிகள், சென்ரிபூஜ், மைக்ரோ கோப்ஸ், மைக் ரேப்பி பெட்ஸ், பிறேம் போட்டே, மீட்டர்கள் போன்றவற்றுக்கான வியாபாரிகள்.

### இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்

மரப் பொருள்கள் செய்யும் இயந்திரங்கள், துளைபோடும் கருவிகள், பற்றை வெட்டிகள், மின்சார மோட்டர்கள், லேத், மரம் அறுத்தல், இயந்திரங்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் அரைக்கும் யந்திரங்களுக்கான வியாரிகள்.

### மருத்துவ உபகரணங்கள்

அறுவை சிகிச்சை மேசைகள், டயதேர்மி யந்திரங்கள் OT வெளிச்சம், Suction units நோயாளிகளைக் கண் காணிக்கும் கருவிகள், ஊசி மருந்தேற்றிகள், இன்பூஷன பம்பிகள், ஆஸ்பத்திரி தள பாடங்கள், இரத்த அழுத்த மீட்டர்கள், ஸ்டெதஸ்கோப்கள், அறுவைச் சிகிச்சைக்குரிய கையுறைகள், ECG/CTG யந்திரங்கள், மயக்க மருந்து இயந்திரங்கள், டெபிப் ரிலேட்டர்கள், ICU படுக்கைகள் போன் றவை தொடர்பான வியாபாரிகள்.

### உணவுக்குத் தேவையான பொருள்கள் அடிப்படை மற்றும் நுண் இரசாயனங்கள்

மணமூட்டப்பட்ட மின்ட்கள், உணவு மண மூட்டிகள், சோர்பிட்டொல், டெக்ஸ் றோஸ், நீர் தன்மை கொண்ட குளுகோஸ், கோதுமைப்பசை, கொக்கோ, பட்டர், மரக்கறிநெய் விற்பனை முக வர்களும் விநி யோகஸ்தர்களும் தேவை.

### விவசாய இயந்திரம் மற்றும் உபகரணம்

நான்கு சக்கர விவசாய உழவு யந்திரங்கள், டில்லர்கள், டிஸ்க் கலப்பைகள், நெல்விதை தரப்படுத்திகள், நெல்விதை சுத்தப்படுத்தல் கள், ஈரப்பத மீட்டர்கள் போன்றவற்றுக்கான விற்பனையாளர்கள்.

### தேயிலை

தாழ்ந்த மற்றும் உயர் பிரதேச தேயிலை விநியோகத்தர்கள்.

பின்வரும் முகவரிக்கு ஜூலை 15 ஆம் திகதிக்கு முன் எழுதுங்கள்/மின் அஞ்சல் அல்லது தொலைநகல் செய்யுங்கள்.

MACKWOODS ESTD. 1841
Director Marketing
**Mackwoods Limited**
No.10, Gnanartha Pradeepa Mawatha, Colombo 8.
Tel : 0773-116611

Tel : 011 2687055
Fax : 011 2699454
Email : yatawara@mackwoods.com, info@mackwoods.com
Website : www.mackwoods.com

**Will be in Jaffna from 16th to 19th July for discussions**

---

# STUDENT VISA / VISIT & FAMILY VISA

## STUDENTS - UK / NEW ZEALAND

We assist students in selecting the Universities, Preparing Necessary Documentations and also we Arrange in obtaining Sponsors & Accommodations

## VISIT & FAMILY VISA

UK, USA, CANADA, NZ, AUSTRALIA, NORWAY, ITALY FRANCE, GERMANY, SWITZERLAND, HOLAND & DENMARK

Visit , Family Visa விண்ணப்பங்களை பூர்த்திசெய்தல், ஆலோசனை மற்றும் ஆவணப்படுத்தல் ஆகியவற்றுடன் நிராகரிக்கப்பட்ட Visa தொடர்பில் Reapply அல்லது Appeal செய்து தரப்படும்.



Call us: 0117 201 890 Email us: info@sensein.org

**SenseiN** Lawyers & Consultants

Reach us at: 14 A/1 Vajira Road, Bambalapitiya, Colombo - 04. Sri Lanka

---

# தேவை

## யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில்

### இணைந்து தொழில் புரிபவர்கள்

### விவசாய நிலங்கள்

பழச் செய்கை மற்றும் மரக்கறி விவசாயத்தில் இணைந்து செயற் படக்கூடிய விவசாய நிலங்களைக் கொண்டவர்கள்.

### காப்புறுதி

காப்புறுதி பொலிசிகளை விற்கும் முகவர்களும்/மற்றும் வளர்ச்சியில் இணைந்து செயற்படுபவர்களும்.

### உல்லாசப் பயணம்

யாழ்ப்பாணத்தில் தோட்டங்களுடன் கூடிய வீடுகள் வைத்திருக்கும் இணைந்து செயல் படுபவர்கள் தேவை. உடனடியாக கொள்முதல் செய்யப்படக்கூடியதாக அல்லது நீண்டகால குத்தகைக்கு எடுக்கக் கூடியதாக வீடுகள் யாழ்ப்பாணத்துக்கு அருகாமையில் அமைந்தி ருப்பதுடன் கவர்ச்சியான காட்சி பின்னணி கொண்டிருக்க வேண்டும்.

### கட்டுமானம்

வீதிகள், பாலங்கள் மற்றும் கட்டடங்கள் கட்டுவதில் இணைந்து செயற்படுபவர்கள்.

### வீடு மற்றும் சொத்து/றியல் எஸ்டேட்

றியல் எஸ்டேட் தொழில் துறையில் விற்பனை முகவர்களும் இணைந்து செயற்படுபவர்களும்.

### வேலைக்கு அமர்த்தல்

வியாபார முகவர்கள் / ஆள்களை நிலைப்படுத்தும் சேவையொன்றை உருவாக்குவதில் இணைந்து செயல்படுபவர்கள்.

### தகவல் தொழில் நுட்பக் கல்வி

தொழில் நுட்பக் கல்வி பின்னணியுடன் கூடிய கூட்டுத்தொழில் முனைப்பாளர் ஒருவர் தேவை. தொழில்நுட்ப கல்வி நிலை அமைக்கக் கூடியவராய் இருத்தல் வேண்டும். மென் பொருள் திட்டங்களை உருவாக்கி பல்துறை நடைபெறும் மென் பொருள் வளர்ச்சிகளை ஏற்படுத்தவும் அவுஸ்திரேலியா, இந்தியா, மலேஷியா, பிரிட்டன், சீனா, கனடா மற்றும் பிரெஞ்சு பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் இணைவதற்கான வகையில் கல்வியை வளர்த்தெடுக்கும் திறமை கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

பின்வரும் முகவரிக்கு ஜூலை 15 ஆம் திகதிக்கு முன் எழுதுங்கள் / மின் அஞ்சல் அல்லது தொலைநகல் செய்யுங்கள்.

MACKWOODS ESTD. 1841
Director Marketing
**Mackwoods Limited**
No.10, Gnanartha Pradeepa Mawatha, Colombo 8, Tel : 0773-116611

Tel : 011 2687055
Fax : 011 2699454
Email : yatawara@mackwoods.com info@mackwoods.com
Website : www.mackwoods.com

Will be in Jaffna from 16th to 19th July for discussions

---

# பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முன்னணிக் கணனிக் கல்வி நிறுவனம் ஒன்றுக்கு பகுதி/ முழுநேர விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள், பயிற்றுவிப்பாளர்கள் ஆகியோருக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தொலைபேசி இலக்கத்துடன் உங்கள் சுய விவரக்கோவையை 31.07.2009இற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**விளம்பர இல. 3918**

**சே/பா: உதயன், யாழ்ப்பாணம்.**

(அ/5595512)

---

A LIFE - TIME CHANCE

# STUDY MEDICINE

## முதலாவது கற்கை அணி ஜூலை 1ஆம் திகதி பெலாரஸ் வந்து சேர்ந்தது



முகம்மது சல்மான் பரீஸ் கொழும்பு.



இராசையா ராஜேந்திர மூர்த்தி சங்கரு மட்டக்களப்பு.



கேசவன் தேவராஜன் சென்.ஜோன்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம்.



விவேகானந்தன் தேனுகாந்த் மட்டக்களப்பு.



சதானந்தன் தனுசானந்தன் திருகோணமலை.



மாணிக்கருடராஜன் ஜனோஜன் கொழும்பு.

MBBS / MD Degree's - recognised by Medical Council's in Sri Lanka, Maldives, USA, UK, Australia WHO & worldwide.

| லிதுவானியா (Schengen & E.U.) | பெலாரஸ் (Eastern Europe) | நேபாளம் |
|---|---|---|
| **MD** | **MD** | **MBBS** |
| மருந்தியல் மருத்துவர் | மருந்தியல் மருத்துவர் | மருந்தியல் இளநிலை/அறுவை இயல் இளநிலை |
| கவுனாஸ் மருந்தியல் பல்கலைக்கழகம் | விற்றெப்ஸ் மாநில பல்கலைக்கழகம் | கத்மண்டு பல்கலைக்கழகம் |
| 6 வருடம் (ஆங்கிலமொழி) கற்கைநெறிக்கான கட்டணம் வருடாந்தம் 5500 யூரோ | 6 வருடம் (ஆங்கிலமொழி) கற்கைநெறிக்கான கட்டணம் வருடத்துக்கு 3800 டொலர் | 4½ வருடம்+ ஒருவருட உள்ளகப் பயிற்சி (ஆங்கிலமொழி) கற்கைநெறிக்கான கட்டணம் கிட்டத்தட்ட 750000 |

**PATHE ACADEMY** The People's Academy...

PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION

For Admissions contact 0773017883 (Tamil)

Overseas Student Placement Department
111- 1/2, Maya Avenue, Kirulapona, Colombo - 06. www.patheacademy.org

---

# மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், பூசம், 2ஆம் பாதம், பாவம் 41, 7இல் செவ்வாய் [குற்றமற்ற], வயது 34, பட்டதாரி ஆசிரியை; உத்தரட்டாதி, 4ஆம் பாதம், வயது 36, அரச முகாமை உதவியாளர்; திருவாதிரை, 3ஆம் பாதம், உதயத்துச் செவ்வாய், வயது 39 பட்டதாரி ஆசிரியை. வீடு மற்றும் சீதனம் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு: 0770868850.

---

# தேவை

## கையிருப்பாளர்கள் / விநியோகிப்பாளர்கள்

காகிதப்புத்தக (STATIONERY) உற்பத்தியில் நல்ல இலாபகரமான வியாபார நடவடிக்கைகளுக்கு:

## வட மாகாணத்திலிருந்து

கையிருப்பாளர், போக்குவரத்து வசதிகளையுடையவராயிருப்பது அவசியம். (மோட்டார் சைக்கிள்/ சிறிய வாகனங்கள் விரும்பத்தக்கது). மற்றும் தொழில் ரீதியான விற்பனைக்கு ஆள்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். குறைந்தது ரூபா 3,50,000/= இற்கு வங்கி உத்தரவாதம் முன்வைக்கப்பட வேண்டும். கடினமாக வேலை செய்ய விருப்பமுள்ளவர்கள் மற்றும் விற்பனையில் மற்றும் கணக்கியலில் அறிவுடையோர் விண்ணப்பிக்கவும்.

**தொடர்பு: ரஜீவன்**
**077-3946379**

பென்டெக்ஸ்டேஷனரி புரொடக்ஸ்,
இல. 545, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,
கொழும்பு-10.

ஈமெயில்:Penpal@eureka.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BROWNS

வர்த்தக பங்குதாரர்களுக்கு அழைப்பு

வடமாகாணம்

134 வருட கால அனுபவத் திறமை கொண்ட பிரவுண்ஸ் இலட்சக்கணக்கான இலங்கையர்களின் வாழ்வினில் தொடர்புகொண்டுள்ளது. சாதாரண எழுது கோலிலிருந்து மிகச் சிக்கலான சக்தி பிறப்பாக்கி வரையில் எல்லாவித வாழ்க்கைத் தரத்தினருக்கும் எல்லாவித தொழில் துறையினருக்கும் ஏற்றவகையில் பயன் அளிப்பதாக விளங்குகின்றது.

எமது உற்பத்திப் பொருள்களின் வரிசைக் கிரமமானது உழவு இயந்திரங்கள் (Tractors) விவசாயக் கருவிகள், தானியங்கி பற்றறிகள், கடற்கல இயந்திரங்கள், மின்கருவிகள், தண்ணீர் தொடர்பு பயன்பாட்டு சொலுஷன்கள் (Water Treatment Solutions), அலுவலக மற்றும் வீடுகளுக்குரிய இலத்திரனியல் பொருள்கள், சக்தி பிறப்பாக்கிகள் போன்றவற்றை உள்ளடக்குவதாகும்.

எதிர்காலம் பற்றிய தெளிவான தொலைநோக்குடன் புதிய பிரவுண் அன் கம்பனி PLC இன் முகாமைத்துவமானது நாட்டின் வடமாகாணத்தில் (குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில்) தனது வர்த்தகத் துறையினை விஸ்தரிப்பதற்கான திட்டமொன்றை வகுத்துவருகின்றது.

வட பகுதியிலுள்ள தொழில பங்குதாரர்கள், முகவர்கள், விநியோகத்தர்கள் அனைவரையும் எமது நிறுவனத்துடன் கைகோர்த்து எமது இந்த வெற்றியளிக்கும் கூட்டு முயற்சியில் சேர்ந்து கொள்ளும்படி அழைக்கின்றோம்.

எமது முதுநிலை முகாமைத்துவ அணியொன்று மிக விரைவில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து இதுவிடயமாக மேற்கொண்டும் ஆராயவிருப்பதுடன் அக்கறையுள்ள தரப்பினரை பின்வரும் தொலைபேசி எண்ணில் பிரவுண்ஸ் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளும் படியும் அழைப்பு விடுகின்றது.

திரு.ராதாகிருஷ்ணன் - 0777348375
அல்லது திரு.கென்னெடி - 0777355691

யாழ்.நகரின் வர்த்தக சுற்றுவட்டத்துக்குள் அலுவலகம் /காட்சி அறைக்கான இடத்தைத் தேடிக்கொண்டிருக்கிறோம். இதுபற்றிய முழுசொத்து விவரங்களுடன் மேற்படி தொலைபேசிகளில் தொடர்புகொள்க.

Brown & Company PLC
481, T.B Jaya Mawatha, Colombo-10.

## பயிற்சி நெறிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

முறைசாராக் கல்விப் பிரிவினரின் ஏற்பாட்டில் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் சிகை அலங்காரம், கேக் ஐசிங், சமையல் கலை போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள விரும்புவோரை கல்லூரி அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (203)

பெறுமதியான ஒரு காணி விற்பனைக்கு

கடவத்தை நகர எல்லைக்குள், கண்டி வீதியை அண்மித்ததாக 26 பேர்ச்சஸ் நாற்சதுரமான காணி ஒன்று அவசரத் தேவையின் நிமித்தம் விற்பனைக்கு உண்டு.
Tel: 0777-444 500

விநியோகஸ்தர்கள் தேவை

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு

எரிவாயு (Gas), சக்தி மீதப்படுத்தும் கருவிகள் (Energy saving Appliances) மின் உபகரணங்களுக்கான உள்நாட்டு மற்றும் சர்வதேச உற்பத்தியாளர்கள் பலரின் முகவர்களான எமக்கு, வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யும் பாரிய சவாலுக்குக் கைகொடுக்கும் வகையில்,

எரிவாயு, சீமெந்து, கூரைத்தகடுகள்

ஆகியவற்றை விநியோகிப்பதற்கான நம்பகமான, மதிப்பு மிக்க வியாபாரப் பங்காளர்கள் அல்லது விநியோகஸ்தர்கள் தேவைப்படுகின்றனர்.

தேவையான தகுதிகள்-
01. 900-1200 சதுர அடி அளவான களஞ்சிய வசதி
02. சில்லறைச் சந்தைப் போக்குப் பற்றிய அறிவு
03. நம்பகமான, உறுதியான நிதிப் பலம்
04. வங்கி உத்தரவாதம்

ஆர்வமுள்ளவர்கள், தமது தற்போதைய வியாபார முயற்சிகள், தொடர்பு விவரங்களுடன் ஏழு நாள்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

நேரடித் தொடர்பிற்கு:- இலக்கம் 0777575740 [சிறி]
The distribution Manager
Shinewell Marketing (Pvt) Ltd.
50, Vandervert Place, Dehiwala. Tel: 0777575740 (Sri)

கூரியர் சேவை

உலகின் சகல நாடுகளுக்கும் கடிதங்கள், பொதிகள், CD, DVD மற்றும் ஆவணங்கள் குறைந்த கட்டணத்தில் மிக விரைவாக பாதுகாப்பாக அனுப்பி கொள்ளலாம். (3 - 5 நாட்கள்)

உலக நாடுகள் சகலவற்றிலும் உள்ள உங்கள் அன்புக்குரியவர்களிடம் இருந்து பொதிகள், ஆவணங்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களை விரைவாக பெற்றுகொள்ளலாம். ( 8 நாட்கள்)

இலங்கையின் சகல பாகங்களுக்குமான கடிதங்கள், பொதிகள் CD, DVD மற்றும் ஆவணங்களை மிக விரைவாக அனுப்பி கொள்ளலாம். (1 நாள்)

ARRUL GLOBAL EXPRESS
T.P : 021 222 6113
இல. 01, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.

யாழ்.வைத்தியசாலை
மற்றுமொரு புதிய சேவை
லாப்பிரஸ்கோப்பி (LAPAROSCOPY)

இனிவரும் காலங்களில் இச்சத்திர சிகிச்சைகளுக்காக மக்கள் கொழும்பிற்குச் செல்லவேண்டியதில்லை

முறையிலான சத்திர சிகிச்சை கமரா மூலம் நோயாளிக்கு வலியில்லாமல் சிறு துவாரத்தினூடாக சத்திர சிகிச்சை செய்தல். இச்சிகிச்சை மூலம் கீழ்க்காணும் நோய்களுக்குச் சிகிச்சையளிக்கமுடியும்.




* பித்தப்பை அகற்றும் சத்திர சிகிச்சை (LAPAROSCOPIC CHOLECYSTECTOMY)
* குடல்வளரி அகற்றும் சத்திர சிகிச்சை (LAPAROSCOPIC APPENDICECTOMY)
* நோய் நிருணய சத்திர சிகிச்சை (DIAGNOSTIC LAPAROSCOPY)
* கர்ப்பப்பை, சூலகத்தில் இருக்கும் கட்டிகளை அகற்றுவது
* பெண்களின் மலட்டுத்தன்மைக்கான காரணத்தை கண்டறிதலும் சிகிச்சையளித்தலும்

குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை

மேற்படி சிகிச்சைகள் யாவும் பிரபல பெண் நோயியல் மகப்பேற்றுச் சத்திர சிகிச்சை நிபுணரினாலும்/பொது சத்திர சிகிச்சை நிபுணரினாலும் மேற்கொள்ளப்படுகின்றது.

NEW YARL HOSPITAL
315, PALALY ROAD, THIRUNELVELY, JAFFNA.
T.P.: 021 222 3533, 021 222 1011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவைக் கட்டுப்படுத்தவல்ல மூலிகைத் தாவரம் சிறுகுறிஞ்சா

# சிற்றுண்ணித் தாக்கத்தால் பாதிப்புறும் ஆபத்து நிலை




சிறு குறிஞ்சா என்னும் மூலிகைக் கொடி எல்லோருக்கும் ஒரு பழக்கமான தாவரமாக, மருந்தாக மாறிவிட்டது. அநேகமானவர்களது வாயினுள் முணுமுணுக்கப்படும் ஒரு சொல்லாகவும், மெல்லப்படும் இலை வகை மூலிகையாகவும் ஆகியிருக்கிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள அநேகமானவர்சள் வீட்டில் சிறுகுறிஞ்சாக் கொடி கட்டாயமாக வளர்க்கப்படவேண்டிய ஒரு காலத்திற்குள்ளும் நாம் வந்து கொண்டிருக்கிறோம் என்றால் பாருங்களேன். மூலிகை ஆய்வு செய்பவர்களுக்கும் அதனது மருத்துவக் குணத்தைக் கண்டறிய முனைபவர்களுக்கும் இக் கொடி ஒரு அதிசயம் தான். அட்சய பாத்திரம் தான். இறைவன் படைப்பில், இயற்கையின் செழிப்பில் இப்படியொரு விசித்திரம். நோயும் தந்து அதற்கொரு மருந்தும் உணவாகவே தருகிறார். ''உணவே மருந்து, மருந்தே உணவு''

### சிறு குறிஞ்சா என்னும் மகோன்னதமான மூலிகை

சிறுகுறிஞ்சா, பெருகுறிஞ்சா என மூலிகைச் சகோதரர்கள் இருவர். இதில் இலையின் அளவையும் அமைப்பையும் வைத்து சிறியவர் சிறுகுறிஞ்சாவாகவும், பெரியவர் பெருகுறிஞ்சாவாகவும் சுலபமாக இணங்காணப்படுவர். இருப்பினும் சிறு குறிஞ்சாவையே பொதுவாக "குறிஞ்சா'' எனச் செல்லமாக அழைப்பர். ஏனெனில் இதனது பயன்பாடு மிக அதிகம். சிறுகுறிஞ்சாவைத் தாவரவியலாளர்கள் இருசொற் பெயரீட்டின் மூலமாக ஜிம்னிமா சில்வெஸ்ரே (Gymnema sylvestre) என்று பெயரிட்டிருக்கிறார்கள். இதில் ஜிம்னிமிக் அமிலம் (Gymnemic acid ) செறிந்து காணப்படுகிறது. இந்த அமிலம் நீரிழிவைக் கட்டுப்படுத்தும் அல்லது குறைக்கும் ஒரு மருந்தாகத் தொழிற்படுகிறது. பதிய முறை இனப்பெருக்கத்தின் மூலமாக அதிகளவில் சிறுகுறிஞ்சாக் கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதனது காய் முதிர்வடையும் போது வெடித்து விதைகள் மெல்லிய இலகுவகை நீண்ட வெண்ணிறமான மயிர்களின் உதவியுடன் காற்றிலே பறக்க ஆரம்பித்து விடும். ''இலவு காத்த கிளி போல'' என்ற பழமொழி இங்கு பொருந்தும். காத்திருந்து காய் முற்றி வெடித்துப் பறக்கும் வரை கிளி போலப் பார்த்திராது அதற்கு முன்பே விதையைச் சேகரிக்க வேண்டும். விதையின் முளைத்திறனும் குறைவாக இருப்பது விதை மூலமான இனப்பெருக்கத்திற்கு இன்னொரு தடை. எமது நாட்டில் கொழும்பு வர்க்கம், யாழ்ப்பாண வர்க்கம் என இருவகைகள் உள்ளன.

சிறுகுறிஞ்சாவின் இலைகளைப் பறித்து அப்படியே வெறும் வயிற்றில் வாயில் போட்டுமென்றுண்ணும் பழக்கம் எம்மவர் பலரிடமும் குறிப்பாக நீரிழிவு நோயாளர்களிடம் உண்டு.

இன்னும் சிலர் இலையை அப்படியே வெட்டியரைத்து சம்பலாக ஆக்கி உண்ணுகிறார்கள். மேலும் சிலர் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி, கழுவி, பிட்டுடன் சேர்த்து அவித்து சிறுகுறிஞ்சாப் பிட்டாக உருமாற்றி உண்கிறார்கள். ''சிறுகுறிஞ்சாப் பிட்டு மா'' என ''Ready made'' மாவும் கடைகளில் விற்கப்படுகிறது. இவற்றை விட வர்த்தக ரீதியில் இலையைக் காயவைத்து, சுத்தம் செய்து அரைத்துப் பவுடராக்கி பைக்கற்றுக்களில் அடைத்து விற்பனையும் செய்யப்படுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக சிறுகுறிஞ்சா இலையைக் காயவைத்து, பவுடராக்கி அதிலிருந்து ஜிம்னிமிக் அமிலத்தைப் பிரித்தெடுத்து அதனைக் Capsule குளிகையுறையினுள் அடைக்கும் முயற்சியில் பேராசிரியர் பாலசுப்பிரமணியம் அவர்கள் முனைப்புடன் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். நீரிழிவு நோய் பீடித்தவர்களுக்கு கண்ணில் அதன் பார்வையில் பாதிப்பு ஏற்படும் என மருத்துவக் குறிப்புக் கூறுகின்றது. ஆனால் வயது முதிர்ந்தாலும் அதனால் கண்பார்வையில் ஏற்பட்ட மாற்றத்தினால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் இந்தப் பெரியவர், பேராசான் பாலா அவர்கள் சிறுகுறிஞ்சா Capsule தயாரிப்பதில் மிகுந்த அக்கறையுள்ளவராக இருப்பது சுதேச வைத்தியத்தை, அதன் மருந்துகளை மேலைத்தேய வைத்திய நிலைக்கு உயர்த்தும் ஒரு சிறந்த கைங்கரியம்.

### மூலிகை வளர்ப்பும் - அவைபற்றிய விழிப்புணர்வும்

எம்மவர் மத்தியில் சுதேச வைத்தியத்தில் பயன்படுத்தப்படும் மூலிகைகள் பற்றியதொரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலான கட்டுரைகள் அண்மைக்

# நோய்த் தாக்கத்தை இலகுவில் அடையாளம் காண இயலாது

# பச்சையாகவோ வேறு விதத்திலோ உட்கொள்வதில் அவதானம் தேவை

காலமாக யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் பத்திரிகையில் வெளியானதைத் தொடர்ந்து, ''மூலிகை பற்றி பேச்சு எம்மவரிடையே நன்றாகவே பரவி இருக்கின்றது. மூலிகைகளைச் சரியாக இனங்காண்பதிலும், வளர்ப்பதிலும், சேகரிப்பதிலும் மக்கள் அக்கறை காட்டத் தொடங்கியிருப்பது நல்லதொரு சகுனம். அதே வேளையில் மூலிகைத் தாவரங்களை வளர்ப்பதிலும் பதப்படுத்தி பயன்படுத்துவதிலும், அவற்றில் ஏற்படும் பிரச்சினைகளை எமது மக்களுக்கு அவ்வப்போது தெரியப்படுத்துவதில் விவசாயத்துறை சார்ந்த எமது பங்களிப்பை முடிந்தவரை செய்ய முயலுகிறோம். இது எமது கடமையும் கூட. பூனைக்கு இங்கொரு மணிகட்ட வேண்டி வந்து விட்டது.

### விவசாய உயிரியல் துறையில் சிறுகுறிஞ்சாவில் செய்த ஆய்வு

2009 ஆம் ஆண்டு இறுதியாண்டு விவசாய உயிரியல் சிறப்பு மாணவியான செல்வி அகல்யா சேகராஜா அவர்களது ஆய்விலே சிறுகுறிஞ்சாவில் ஏற்பட்ட பாதிப்புப் பற்றி ஆராயப்பட்டது. நீரிழிவு நோயாளர்களில் கணிசமானவர்களுடன் அவர்களது விருப்பிற்கிணங்க அளவளாவிய போது 85 - 90 விகிதம் வரையான நீரிழிவு நோயாளர்கள் ''சிறு குறிஞ்சா'' இலையை ஏதோ ஒரு வடிவில் பயன்படுத்துவது தெரியவந்தது. இந்த அளவுக்கு முக்கியத்துவம் பெற்றதாக விளங்கும் 'சிறுகுறிஞ்சா' மூலி கைக்கும் தலையிடியொன்று வந்து விட்டது. இது பற்றி எமது மக்களை கவனயீர்ப்பு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

### நீரிழிவு யாரை விட்டது?

ஆதிகாலத்திலிருந்தே சிறுகுறிஞ்சா இலை கீழைத்தேசம் மதுமேகம் என்றும் மேலைத்தேய நீரிழிவு (Diabetes) என்றும் கூறியழைக்கும் நோயைப் பதி கரணப்படுத்துவதற்கான பொருத்தமான மருந்தாகச் சுதேச மருத்துவர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இன்று அதனது பாவனை எம்மவர் மத்தியில் அதிகரித்துக் காணப்படுகின்றமை ஆச்சரியத்திற்குரியது. பாவனை அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாக வயது, பால் வேறுபாடின்றி இளவயது, விடலைப் பருவம், நடுத்தர வயதினர், முதியவர், அவர், இவர் என அனைவருக்கும் விரும்பியழைக்காது நீரிழிவு நோய் வந்துவிட்டது. பரம்பரை வியாதி என்று ஒருகாலத்தில் நம்பிக்கொண்டிருந்ததனை விஞ்ஞானம் சிறகடித்துப் பறந்து இப்போது எவர் என்றில்லாமல் அனைவருக்குமே வருகின்றதென்பதனை நிரூபித்தும் காட்டியிருக்கின்றது. நான் சுகதேகி எனக்கூறும் வீராப்பு எதுவும் இது விடயத்தில் எடுபடாது. அதிலும் உடற்பயிற்சி அதிகம் செய்யாத, மோட்டார் சைக்கிளிலும் கார், வான் போன்றவற்றிலும் அன்றாட தேவைகளுக்கு பயணித்து வருபவர்களுக்கு இவ் வியாதி இலகுவில் வந்துவிடும் என்கிறார்கள். ஆனால் உடற்பயிற்சி தினமும் செய்தால், தினமும் குறிப்பிட்ட தூரம் நடந்தால், இந் நோயைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கலாம் என்ற மருத்துவரின் குறிப்பு நோக்கத்தக்கது. இருப்பினும் உடற்பயிற்சியாளருக்கு நீரிழிவு குசலம் விசாரித்திருப்பது ஆச் சரியத்தையளிக்கிறது. இங்கே உடற்பயிற்சியுடன் உணவுக்கட்டுப்பாடு, தெரிவு, உண்ணுவதில் அளவு, இவற்றை விட வேலைப்பளு, அதனால் ஏற்படும் மனச்சோர்வு, மனவுளைவு எனப் பலதும் காரணமாக இருப்பதனால் அனைத்து விடயத்திலும் நாம் கவனஞ்செலுத்த வேண்டியிருக்கின்றது. பரம்பரைக் காரணங்களை இனியும் இலகுவான சாட்டாகக் கூறித்திரியாமல் அனைவரும் கவனமாக நீரிழிவு நோயின் அறிகுறிகளை தெரிந்து வைத்திருத்தலுடன் அடிக்கடி பரிசோதனை செய்தும் பார்க்கவேண்டும்.

அலட்சியப்படுத்தினால் அவஸ்தைக்குள்ளாக நேரிடும். நல்ல பொய் நாலு சொல்லி, திருமணம் செய்து வைக்கும் புரோகிதர்கள் இப்போதெல்லாம் மணமகனுக்கோ மணமகளுக்கோ நீரிழிவு நோய் இருப்பது, இல்லாதிருப்பது பற்றி தங்களது விளம்பரப் பட்டியலில் சேர்ப்பதில்லை. ஏனெனில் இது ஒரு பரம்பரை வியாதியென்றோ அல்லது தொற்று நோய் என்றோ காரணங்கூற முடியவில்லை. இப்படியும் நடந்தது. நீரிழிவு நோய் இருப்பதைக் காரணங்காட்டி அது பரம்பரை வியாதி எனத் தட்டிக்கழித்த ஒரு மாமனாரின் செல்ல மகளுக்கு வேறு ஒருவருடன் திருமணமானபின் வந்துவிட்டதாம் நீரிழிவு. நோயென்று ஒருவரையும் புறந்தள்ளலாகாது! முகஞ்சுழிக்கவும் கூடாது!

### சிறுகுறிஞ்சா இலையில் சிற்றுண்ணித் தாக்கம்

சென்ற வருடப் பிற்பகுதியில் சிறுகுறிஞ்சாக் கொடியில் இலைகள் வெளுத்துக் காணப்பட்டதனை அவதானிக்க முடிந்தது. ஆரம்பத்தில் இரு போதியளவு சத்து உள்ளிழுக்கப் படாமயிலான (Nutrient deficiency ) தாக்கம் எனப் பலரும் நம்பியிருந்தாலும், அவ்வாறு பாதிக்கப்பட்ட குறிஞ்சா இலைகளை ஆய்வுகூடத்தில் நுணுக்குக் காட்டியினுடாக அவதானித்த போது உண்மை புலப்பட்டது. இலை முழுவதும் மிகவும் சிறிய சிற்றுண்ணிகள் அங்கும் இங்கும் ஊர்ந்து செல்வதைக் காணமுடிந்தது. சிற்றுண்ணியின் அனைத்துப் பருவங்களும் நிறையவே இருந்தன. ஒவ்வொரு பருவமும் வளர்ச்சி நிலையில் புதியதற்கு மாறும்போது தோல் கழற்றலில் ஈடுபடுமல்லவா! பூச்சிகள், சிற்றுண்ணிகள் எங்களைப் போன்று தொடர்ச்சியான வளர்ச்சியைக் காட்ட முடியாதவை. அதனால் ஒரு பருவ நிலையில் இருந்து இன்னொரு பருவ நிலைக்கு அவை மாறுவதற்கு தமது தோலைக் கழற்றினால் மட்டுமே அது சாத்தியமாகும். அது வளர வசதி வரும். இவ்வாறாக கழற்றப்பட்ட தோல்கள் , முட்டை முன்னணங்கு (Protonymph) பின்னணங்கு (Deutonymph) நிறைவுடலி ஆகியனவும் ஒருங்கே காணப்பட்டன. இவற்றுடன் சிற்றுண்ணியினது எச்சங்களும் காணப்பட்டன.

இவ்வாறாகச் சிற்றுண்ணி ஒன்றின் வாழ்க்கை வட்டத்தில் காணப்படுகின்ற அனைத்துப் பருவ நிலைகளையும் அதிக எண்ணிக்கையில் அவதானிக்க முடிந்தது. இவற்றையெல்லாம் வெற்றுக் கண்ணால் காண்பது கடினம். இங்கே அவதானம் தேவை!.

ஒரு எளிய கைவில்லையின் உதவியுடன் ஓரளவுக்கு இவற்றை அவதானிக்கலாம். இலையின் கீழ்ப்பக்கத்திலேயே சிற்றுண்ணி காணப்படும். மேற்பக்கத்தில் வெண்ணிறப் புள்ளிகளாக அது இலையை உண்ட பகுதி காணப்படும். என்ன யோசிக்கின்றீர்கள்? ஒருவேளை இதனைக் கவனியாது இவ்வளவு காலமும் இலையை அப்படியே உண்டபோது இந்தச் சிற்றுண்ணியும் சேர்ந்து உள்ளே வந்திருக்குமா? என நீங்கள் கவலைப்படுவதும் தெரிகின்றது. என்ன செய்திருக்கும்? தெரியாமல் உண்டதனால் ஒருவேளை அதுவும் மருந்தாகியிருக்குமா? அது தவறு!

சிற்றுண்ணியின் உடலின் வெளிப்பகுதி மெல்லிய புரத வன்கோதுப்படையிலானது. இது கடினப்படுத்தலுக்கு (Sclerotization) உட்படுவதால் இலகுவில் எமது உடலில் சமிபாடடைய வாய்ப்பில்லை. சேர்ந்து கழிவாக அகற்றப்படுவதைத் தவிர வேறு வழியுமில்லை. உடலிலிருந்து அகற்றப்படாவிட்டால் உள்ளே போனவை ஒன்று சேர்ந்து அஜீரணக் குறைபாடு தொடக்கம் பல்வேறுபட்ட விளைவுகளையும் உபாதைகளையும் ஏற்படுத்திவிடும். நீரிழிவு நோயாளிக்கு இது இடிமேல் இடியாகவே இடிக்கும்.

### அவதானம் தேவை

சிற்றுண்ணியை வெற்றுக் கண்ணினால் அவதானிக்க முடியாவிட்டாலும், அதனது சேதமேற்படுத்திய மேற்பக்க இலையை உற்று நோக்கினால் இலகுவாக இனங்கண்டு கொள்ளலாம். மேலும் இதனது பரம்பலுக்கு வீசியடிக்கும் காற்றும், அதிகரித்த இனப் பெருக்கத்திற்குச் சுட்டெரிக்கும் வளிமண்டல வெப்பநிலையும், காரணங்களாக இருப்பதனால் சிறுகுறிஞ்சாக் கொடியில் இலைகளைத் தொடர்ந்து கண்காணித்து வரவேண்டும். சிற்றுண்ணித் தாக்கம் இருக்கின்றதா எனப் பாருங்கள்!

### ஏற்படும் தீங்கினை எப்படித் தவிர்ப்பது?

இலைகளைப் பச்சையாக மெல்ல விரும்பினால் நன்றாக இரு பக்கமும் நீரினால் கழுவ வேண்டும். உப்பு நீரில் தோய்த்தெடுத்துப் பின் நல்ல நீரில் கழுவினாலும் சிற்றுண்ணியின் பருவ நிலைகளைக் கழுவி அகற்றலாம். தாக்கத்துக்குள்ளான இலைகளை மெல்லுவதைத் தவிர்க்கவும். சிறுகுறிஞ்சாக்கொடி நிழலினுள் வளரும் போது சிற்றுண்ணியின் தாக்கம் மிகவும் குறைவு. தொடர்ந்து நீர் விசிறினால் இதனது பெருக்கத்தை மட்டுப்படுத்தலாம். எக்காரணம் கொண்டும் எந்த இரசாயன மருந்தையும் விசிறக்கூடாது என்பதனை நாம் மறக்கக்கூடாது. அப்படிச் செய்தால் மருத்துவ மூலிகை செயல்மாறி நஞ்சு மூலிகை ஆகிவிடும்.



***********

கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர், விவசாய உயிரியல்துறை,
விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






"இனி ஒரு கணம் கூட தாமதிக்க முடியாது. இந்த வாள் வேறொருவரின் கைக்குச் சென்ற மறுகணமே சுரங்கம் இடிந்துவிடும். இப்போது சுரங்கம் அதிர்ந்து முடிவதற்கிடையில் நாம் அனைவரும் பத்திரமாக வெளியேறிவிடவேண்டும். இல்லாவிட்டால் நாம் அனைவரும் இதற்குள்ளேயே சமாதியாக வேண்டியதுதான்'' என்று அந்தப் பேரோசையின் சூட்சுமத்தை அவசர அவசரமாக நாகசிம்மன் விளக்கினான். அடுத்தகணம் சுரங்கம் இன்னும் வேகமாக அதிரத்தொடங்கியது. இந்திரவர்மனும் சந்திரவர்மனும் மற்றைய இளவரசர்களையும், மணிமொழியையும் அழைத்துக் கொண்டு குகையை விட்டு வெளியே ஓடத்தொடங்கினார்கள். ஆயினும் குகையின் பாதை நீண்டுகொண்டே சென்றது. இவர்களின் ஓட்ட வேகத்தைப் போலவே சுரங்கத்தில் எழுந்த அதிர்வின் வேகமும் கணத்துக்குக் கணம் அதிகரித்தபடியே இருந்தது. மெல்ல மெல்ல குகையில் இருந்த சிறு'கற்கள் வேகமாகக் கீழ்நோக்கி விழத்தொடங்கின.

நீண்ட தூர ஓட்டத்திற்குப் பின்னர் குகையின் வெளிப்புற வாசலை இளவரசர்கள் எல்லோரும் அடைந்தனர். ஆயினும் அங்கும் அவர்களுக்கு துரதிஷ்டமே காத்திருந்தது. குகையின் வாசல் மிகப் பெரிய பாறாங்கல்லால் இறுக மூடப்பட்டிருந்தது. ஒருவருக்கும் என்னசெய்வதென்றே தெரியவில்லை. ஆயினும் எப்படியும் விரைவில் குகையை விட்டு வெளியேறவேண்டிய இக்கட்டான சூழ்நிலை. "அவ்வளவுதான் இனிமேல் மீட்சியே இல்லை. இந்தக் குகைக்குள்ளேயே நாம் அனைவரும் மடிய வேண்டியதுதான்'' என்று இளவரசர்கள் அனைவரும் எண்ணியபோது நாகசிம்மன் பாறாங்கல்லைத் தன் சுண்டு விரலால் தீண்டினான். அடுத்த கணம் பாறாங்கல் அகன்று வழி தெரிந்தது. ஆயினும் வெளியேற வழிகிடைத்த சந்தோசம் இளவரசர்கள் ஒருவரிடமும் இல்லை. ஏனெனில் குகைக்கு வெளியே இவர்களின் வருகையை கேலிகலந்த பார்வையோடும், தன் பரிவாரங்களோடும் பார்த்தபடி இருந்தாள் மந்திரக்கிழவி.

[தொடரும்]

## நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..............................

தரம் :-..............................

பாடசாலை :-..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.................... ....................

திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

## பொது அறிவுத் துளிகள்

1. தை 30 - மகாத்மா நினைவு தினம்
2. மார்ச் 08 - சர்வதேச மகளிர் தினம்
3. ஏப்ரல் 07 - சுகாதார தினம்
4. ஏப்ரல் 10 - சர்வதேச அன்னையர் தினம்
5. மே 31 - சர்வதேசபுகையிலைமறுப்புத் தினம்
6. ஜூன் 05 - சுற்றுச் சூழல் தினம்
7. ஜூலை 11 - உலக குடிசன தினம்
8. ஒக்ரோபர் 01 - சர்வதேச சிறுவர் தினம்
9. ஒக்ரோபர் 06 - ஆசிரியர் தினம்
10. டிசம்பர் 10 - சர்வதேசமனித உரிமைகள் தினம்

எம்.ஜங்கரன், தரம் - 8, யா/ விக்னேஸ்வரா வித்தி.




## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? -22

1. 15 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்று சாதனை படைத்துள்ள ரென்னிஸ் வீரர் யார்?
2. தானியங்களை மாவாக அரைப்பதற்கு நமது முன்னோர் பயன்படுத்திய வட்ட வடிவிலான கருவியின் பெயர் என்ன?
3. பொப் இசை மன்னனான மைக்கல் ஜாக்ஷன் மரணித்த நாள் எது?
4. அண்மையில் காலமாகிய ஈழத்தின் மூத்த தமிழ்க் கவிஞரின் பெயர் என்ன?
5. கவியரசர் கண்ணதாசனின் பிறந்த திகதி எது?

விடை தெரியுமா?

தெரிந்தால் 22.07.2009 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர் களுக்கு பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடை தெரியுமா? -20

சரியான விடைகள்

(1) உமர்குல் (பாகிஸ்தான்).
(2) அஸ்ரிடா புர்மன்.
(3) வலண்ரினா டெரஸ்கோவா.
(4) வில்வராயமுதலியார்.
(சின்னத்தம்பிப் புலவரின் தந்தை)
(5) ஜோன்வெஸ்லே.

இம்முறை எவரும் எல்லாக் கேள்விகளுக்கும் சரியான விடைகளை அனுப்பாததால் எவருக்கும் பரிசுகள் வழங்கப்படவில்லை

## பருவகாலம் கூறும் பழமொழிகள்



1. "தை'' பிறந்தால் வழி பிறக்கும்
2. "மாசிப்'' பனி மூசிப் பெய்யும்
3. "பங்குனி'' மாத வெயிலில் படையும் கலங்கும்
4. "சித்திரை'' மாதவெயில் பத்தரை மாற்றுத் தங்கம்
5. "வைகாசி'' மழையில் வாழை பெருகும்
6. "ஆனி'' அரை ஆறு, ஆடி முழு ஆறு
7. "ஆடி'' க் காற்று அம்மியையும் தூக்கும்
8. "ஆவணி'' மேகம் தாவணி போடும்
9. "புரட்டாதி'' வெயில் பொன்னுருககக் காயும் மண்ணுருகப் பெய்யும்
10. "ஐப்பசி'' அடைமழை "கார்த்திகை'' கனமழை
11. "கார்த்திகை''க்கு பின் மழையும் இல்லை. கர்ணனுக்குப் பின் கொடையும் இல்லை
12. "மார்கழி''ப்பனியில் பச்சையும் துளிர்க்கும்.

சு. பங்கஜா,
தரம் 8 A, யா/ விக்ரோறியாக் கல்லூரி.




★ எல்லோருடைய இடத்தையும் தாய் வகிக்க முடியும்.. ஆனால் தாயின் இடத்தை யாராலும் வகிக்க முடியாது.

★ சொர்க்கம் தாயின் இரு பாதங்களுக்கு அடியில் இருக்கின்றது.


★ துன்பம் பொறுமையையும் பொறுமை அனுபவத்தையும் அனுபவம் நம்பிக்கையையும் உண்டாக்குகின்றது.

★ சொர்க்கத்தில் என் தாயைச் சந்திக்க முடியாது போனால் சொர்க்கம் எனக்குச் சொர்க்கமாக இருக்க முடியாது.

★ உங்கள் கௌரவம் வேறெங்கும் இல்லை நாக்கு நுனியில் தான் உள்ளது.

போ.மரீனா, தரம் 9A,
யாழ்/புனிதர் சாள்ஸ் மகா வித்தியாலயம்.

## பழங்களும் அவற்றின் பிறப்பிடங்களும்



1) வாழைப்பழம் - தென் கிழக்காசியா
2) அன்னாசிப்பழம் - பிறேசில்
3) கொய்யாப்பழம் - மத்திய அமெரிக்கா
4) முந்திரிகைப்பழம்- பிறேசில்
5) நெல்லிப்பழம் - இந்தியா
6) மாம்பழம் - தென்கிழக்காசியா
7) எலுமிச்சை -இந்தியா
8) தோடம்பழம் - சீனா
9) பலாப்பழம் - இந்தியா
10) திராட்சை - கஸ்பியன் கடல் பகுதி

கி. சிவசோதிநாதன் சுகேசன்,
தரம் 4 B, யாழ்/உடுவில் மகளிர் கல்லூரி.


## மாணவர் தூரிகை



E. ரோஜிகாரன், தரம் -5, யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி.




வ.இந்துஜன், தரம் - 8 E, யா/இந்துக்கல்லூரி.



த.வேல்கஜா, தரம் - 5 B, யா/மேலைப் புலோலி சைவப் பிரகாசா.




இ.அபிநயா, தரம் -3, திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தி.




க.சாலினா, தரம் -5, யா/கொழும்புத்துறை இந்து ம.வித்தி.



ம.கோபிராஜ், தரம் -6 B, யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.



ஜெ.ஜெசுபாலினி, தரம் -8 F, யா/இந்து மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ARE YOU SERIOUS ?

When it comes to your higher studies




"We welcome you for grand opening of BCBS on 14th July 2009 in between 9.00 am to 5.00 pm"
A great opportunity for whoever registers with us on our opening day we would be giving a massive discount.

**Students can start their British Degree with G.C.E O/L**

6 மாதக்கால பாடநெறியை கொழும்பில்
முடித்த பின்பு இரண்டாவது வருட பட்டப்படிப்பை
பிரிட்டனில் தொடரலாம்

- Start your degree pathway with O/L
- British degree in 2,1/2 years
- Garanteed progression to top universities in UK

www.adinnovationslk.com

## Study areas

- Information technology
- Business Studies & Accounting
- Psychology
- All well recognized UK professional courses
- IELTS
- Business English

கொழும்பில் 6மாதம் தங்கிப்படிபதற்கான பாதுகாப்பான இடத்தில் ஒழுங்கு செய்துதரப்படும்

அழையுங்கள் - கல்வி ஆலோசகர்
**P.K. Suhanthan Msc-UK - 0777 209 446**

**EDUCATION WITH A DIFFERENCE SOON TO HIT COLOMBO ON THE 14TH OF JULY '09**

**BRITISH COLLEGE OF BUSINESS STUDIES**
No-298B, Dublication Road, Colombo 04.
Tel : 011-2555243 / 011-2555245 / 0772399600 / 0772399601



# Study in Cambridge, United Kingdom

September 2009 Intake

cric — *Your direct pathway to* **Anglia Ruskin University** — Anglia Ruskin University, Cambridge & Chelmsford

**Cambridge Ruskin International College (CRIC)**

CRIC is the associate college of Anglia Ruskin University which is based in Cambridge and allows you direct entry into various degree programs after completion of one of the following:

1. University Foundation Programme (Students can start the degree with G.C.E O/L)
2. 1st Year Degree Programme
3. Pre-Masters Programme

**Anglia Ruskin University (ARU)**

ARU was established 1853 and ranked in the Top 3rd of UK Institutes for:

- Art & Design
- Business
- Psychology
- Sociology
- Computer Science & IT
- Engineering
- Life Science
- Media Studies
- English
- Law

**Majors are available in CRIC college:**

- Architecture and Surveying
- Art and Design
- Computing and Technology
- Engineering
- Biological Science
- Business
- Film , Media and Communications
- Psychology, Sociology and Sports Science
- Law and Criminology

www.adinnovationslk.com

**Please email your certificate and contact numbers to pksuhanthan@yahoo.co.uk**

விசா பெறுவதற்கான ஒழுங்குகளை செய்யும் காலப்பகுதியில் (1 மாதம் முதல் 2 மாதம் வரை) கொழும்பில் தங்கிப்படிபதற்கான பாதுகாப்பான இடத்தில் ஒழுங்கு செய்துதரப்படும

**HELP LINE - 0777-209446**

**FREE ☑ CONSULTATION ☑ ADVICE GUIDANCE**

**Spot Admissions by University Representative Mr.Leigh Pulford**

**13th July 2009 4.00 pm to 6.00 pm**

KMS **KNOWLEDGE MANAGEMENT SYSTEMS**
Leading educational consultants and training providers

329, Galle Road,
Meewella Building 1st Floor,
Southern Wing, Colombo-04, Sri Lanka.
Tel: +94 11 2555243,
Fax: +94 11 2555244

www.britishstudylink.com

London Office
No. 38, Goodmayes Road,
Ilford IG3 9UR, United kingdom.
Mob: 00447905038050
Tel: 00442084702221





ஆண்டு ஒன்று சென்றாலும் எம்
மனங்களில் என்றும் நிலைத்திருக்கும்
எம் தந்தைக்கு எமது நினைவஞ்சலிகள்.


இன்று (12.07.2009) ஞாயிற்றுக்கிழமை
நடைபெறும் ஆத்மசாந்திப்
பிரார்த்தனை நிகழ்விலும்
மதியபோசனத்திலும் கலந்து
கொள்ளும் வண்ணம் உற்றார்,
உறவினர், நண்பர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

தீராவத்தை,
கரணவாய் மேற்கு, கரவெட்டி.

குடும்பத்தினர்.

(வி/559496)

# மரண அறிவித்தல்



## ஆறுமுகம் சங்கரப்பிள்ளை

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சங்கரப்பிள்ளை (ஓய்வுபெற்ற மின்சார உத்தியோகத்தர்) 10.07.2009 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் மற்றும் இராசலட்சுமியின் அன்புக் கணவரும் வசந்தராணி (கனடா), தேவிகா ராணி (யா/இராமநாதன் கல்லூரி ஆசிரியை), ரவீந்திரன் (கனடா), பவள ராணி, ஜெனார்த்தனி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஞானத்துரை (கனடா), லிங்கேஸ்வரன், சுதாமதி (கனடா), அகிலன், பாலகுமார் (லண்டன்) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற கணேசு, சரஸ்வதி (கனடா), காலஞ்சென்ற மார்க்கண்டு, தர்மலிங்கம், செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரரும் தங்கலட்சுமி (லண்டன்), நாகராசா, பாலசிங்கம், சிவபாலசிங்கம் (ஓய்வுபெற்ற மாகாணப் பணிப்பாளர்) ஆகியோரின் மைத்துனரும் பிரசன்ஜா (கனடா), மதன்ஜா (கனடா), கருஷன், டர்ஷன், கௌசிகன், தேனுஜா (கனடா), துளசிகா, சதுர்ஷன், திருமதுர்ஷன், டிலக்ஷன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மருதனார்மடம் பூகொட இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சோமராம் தோட்டம்,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

(86934)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

unite for children

unicef

# VACANCY NOTICE

UNICEF Sri Lanka, Country Office, invites applications from qualified nationals of the Republic of Sri Lanka for the following post.

**Post Title:** Administrative Officer
**Level:** NOB (Fixed Term Appointment)
**Duty Station:** Colombo

**V/No:** HR 09/07-02
**Closing Date:** 22 July 2009

**Purpose of the Post:**
Under the close supervision of the Chief of Operations, assists in the management of all administrative services for the Sri Lanka country office.

## Major Duties and Responsibilities:

- Responsible for the systematic review of office premises to ensure a good and secure working environment for all staff members. Undertake all actions necessary to arrange cleaning services, ensure procurement, maintenance and repair of equipment and supplies, in accordance with budgetary plans and allocation. Recommend and prepares estimates on office premises, supplies and equipment requirements for budget preparation purposes.
- Oversee transport services, ensure a schedule for use of Colombo vehicles, periodically review reports on use of petrol, mileage, driver overtime records, and maintenance services.
- Oversee all administrative arrangements for International and Local conference, meetings, workshops, seminars and visitors by assuring the coordination of transportation, and contracting of hotel accommodations, conference rooms and audio-visual equipment, as required. Liaise with Ministry of Foreign Affairs as required to facilitate travel of operations participant.
- Review all travel requests for budgetary provisions, undertake travel arrangements, (i.e., tickets, visas, hotels, per diem). Issue travel authorizations for local and international travel, confirming accuracy of information for signature of authorizing officer as per Table of Authority. Brief staff on all policies and procedures covering official travel.
- Brief and assist arriving and departing international staff and consultants on basic administrative procedures and requirements, (i.e., shipment and insurance of personal effects, liability claims, as well as in identification, arrangement and selection of staff housing), assure issuance of UN and Ministry of Foreign Affairs IDs, assure that visas are obtained and renewed as needed.
- Ensure the safekeeping, annual physical inventory, prepare reports, including cost analysis and recommends replacement/disposal of equipment and supplies. Reconcile physical inventory data with office records to ensure inventory taken is complete, and identifies discrepancies for corrective action. Assure that annual inventory reports on are prepared for Head Quarters on a timely basis. Participate as PSB member and assures formulation of recommendations to the PSB on disposal, donation, or sale of obsolete or superfluous equipment as needed.
- Assure the security of the Colombo office premises and maintenance of MOSS compliance. Recommend changes as needed and oversees the approved changes.
- Review all contractual arrangements with suppliers of administrative services such as office equipment maintenance and repair, canteen services, etc to ensure that the terms and conditions of all contracts are being adhered to by the suppliers of goods and services and that quality of services is good. Propose to the supervisor any changes that may be required.
- Supervise the timely and organized delivery, collection, registry, reproduction and transmittal (UNET, telex, fax, courier) of correspondence, documents, pouch services and administrative supplies.
- Keep the supervisor abreast of potential problem areas, and identifies and recommends solutions. Prepare reports and correspondence on administrative matters.

## Minimum Qualifications and Experience Required:

- University degree in Business Administration.
- Two years of practical professional work experience in the field of general office administration, especially in the areas of transportation management, travel, and protocol arrangements.
- Experience in an international organization is desirable

## Language:

Fluency in English and at least one local language (Sinhala/Tamil) is required.

## Specialized Training/Other Skills/Competencies:

- Good judgement, initiative, high sense of responsibility, organization, negotiating and analytical skills.
- Supervisory ability.
- Ability to conduct training.
- Computer skills, including internet navigation, and various office applications
- A positive and pleasant disposition towards work responsibility.
- Timely disposition to the tasks assigned.
- Proven ability to work both independently and as part of a team.
- Work harmoniously with colleagues and assist staff in the unit during peak loads, and in the absence of staff
- Demonstrated ability to work in a multicultural environment and establish harmonious and effective working relationships, both within and outside the organization.

An attractive salary will be offered to the selected candidate depending on qualifications and experience, plus a child allowance, if applicable. All emoluments are tax-free

Those who possess the required qualifications and wish to apply to the above post, must submit an application including ***1) cover letter, 2) CV, 3) duly completed and signed Personal History Form (P.11), 4) copies of most relevant academic qualification, and for UN candidates, 5) the last 2 Performance Evaluation Reports (PER)*** by specifying the Vacancy Notice number (V/No) either by email to srilankahrvacancies@unicef.org or by postal mail addressed it to the **Human Resources Specialist**, under **Confidential, cover by 22 July 2009**.

The P.11 can be downloaded from the following link ***http:www.unicef.org/about/employ/index_apply.html*** or obtained at the reception of our Head Office, 35 Balapokuna Road, Kirulapone, Colombo 5, Tel. 2768555

'UNICEF is committed to gender equality in its mandate and its staff'
'UNICEF is a non-smoking working environment.'
'Applications from qualified female candidates are strongly encouraged.'
**Only shortlisted applications will be acknowledged.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 106

# அழகினால் அல்ல

பாடசாலை மணி அடித்ததுதான் தாமதம்... தேவாரம் சொல்லக் கூடிச் சுட்டி நிற்கவில்லை. வெளியே ஓடி வந்து விட்டான். நேற்றும் இன்றும் அவனுக்குப் படிப்பில் நாட்டம் இருந்ததாகத் தெரியவில்லை. அவனுடைய நினைவுகள்.. அவனுடைய குடிசையின் தாழ்வாரத்திற் செம்பாட்டுப் புழுதியிற் புரண்டு கொண்டிருக்கும் கறுப்பி என்ற அந்தப் பெட்டை நாய் போட்ட ஏழு பெட்டைக் குட்டிகளையும் ஒரு கடுவன் குட்டியையும் பற்றித்தான்!

மிருதுவான அவற்றின் ரோமங்கள்... பூஞ்சிப் பூஞ்சிப் பார்க்கும் அவற்றின் அழகான சின்னஞ்சிறு கண்கள்... கொஞ்சம் நீண்டு மடிந்து தொங்கிக் கொண்டிருக்கும் செவிகள்? அவனுடைய சின்னஞ்சிறு இதயத்தில் அச்சாக அப்படியே பதிந்து விட்டன.

குடிசைக்கு வந்ததும் வராததுமாக புத்தகத்தைத் திண்ணையில் வீசி எறிந்துவிட்டுத் தாழ்வாரத்தை நோக்கி ஓடுகிறான் சுட்டி.

''சுட்டி... சாப்பிட வாவேன்ரா...''

தாயின் குரல் சுட்டியை இப்போ குடிசைக்குள் இழுக்கிறது.

''கறுப்பி! எங்கேயணை...''

அவன் கேள்வியின் தாபம் தாய்க்குப் புரியாமல் இல்லை.

''அதை ஏன்ரா சுட்டி பேசுவான்... காலையிலை நீ பள்ளிக்கூடம் போனாப் போலை... கறுப்பி றோட்டுக்குக் குறுக்காலை ஓடி வரேயுக்கை... பரமலிங்கத்தின்ரை கார் அடிச்சு....''

தாய் சொல்லி முடிப்பதற்குள் அவனுக்கு அழுகை வெடித்துச் சிதறுகிறது. கண்ணீர் பொல பொல என்று வழிகிறது. சினத்தால் சின்னஞ்சிறு பாதங்கள் தரையை உதைக்கின்றன.

''பரமலிங்கத்தின்ரை காருக்கு ஒளிச்சிருந்து ஒரு நாளைக்குக் கல்லெறிய வேணும்...'' சுட்டியின் மனதுக்குள் ஓர் ஓர்மம் உருவாகிறது.

''கறுப்பியை எங்கேயணை புதைச்சனி?''

வேதனையோடு, அவன் தாயின் முகத்தைப் பார்த்துக் கேட்கிறான்.

''தோட்டத்துக்கை.... வாழைக்கடியிலை புதைச்சுக் கிடக்கு... பேசாமல் சாப்பிடு...''

அவன் சொல்லிக் கொண்டே தட்டில் ஆவி பறக்கச் சோற்றைப் போட்டுக் கறியை விட்டு அவனுக்காகப் பிசைந்தும் விடுகிறாள்.

''குட்டியள் எங்கேயணை...? பாவங்கள்... பால்குடிக்க என்ன செய்யுங்கள்...?''

அவனுடைய கேள்வி அவளைக் கண் கலங்க வைக்கிறது.

''ஏழு பெட்டைக் குட்டியளுக்கும் இந்தப் பஞ்சகாலத்திலை ஆரடா காச்சி வைக்கிறது... கடுவன் குட்டியை விட்டுட்டு மற்றப் பெட்டைக் குட்டியளை அப்பு எங்கை பிடிச்சுக் கொண்டே விட்டாரோ தெரியாது....''

அவள் சொன்னதுதான் தாமதம்... சில நிமிடங்கள்வரை காய்ந்து போயிருந்த கன்னத்தில் மீண்டும் ஒரே கண்ணீர் வெள்ளம்! மனித சமூகத்தின் வக்கரித்த தன்மை அவன் பிஞ்சு நெஞ்சில் மெல்ல மெல்ல வேரூன்றுகிறது.

''எனக்குச் சோறு வேண்டாம்...''

அவன் சொல்லிக்கொண்டே, சொல்லிய அதே வேகத்தில் சோற்றுத் தட்டைக் கைகளால் தள்ளி விடுகிறான்.

''சாப்பிடடா...''

தாயின் வற்புறுத்தல்... அகப்பைக் காம்மைத் தூக்கியதோறு பயமுறுத்தலாக மாறுகிறது.

அழுதுகொண்டே வேண்டா வெறுப்பாகச் சாப்பிட்டு விட்டு அழுத களைப்பில்... ஒரு கட்டை விரலை வாயில் வைத்துச் சூப்பிக்கொண்டே அவன் திண்ணையில் படுத்துவிட்டான்.

அவனுடைய பாதங்களை நக்கிக் கொண் டிருக்கும் கடுவன் குட்டியின் மென்மையான ஸ்பரிச உணர்வு அவனை இப்போது விழிக்கவைக்கிறது. அவன் படாரென்று எழும்பிய அதிர்ச்சியில் கடுவன் குட்டி அஞ்சத்துடன் கொஞ்சம் ஒதுங்கிக் கொள்கிறது. அதன் தேகம் படபட என்று அடித்துக் கொள்வது அவனுக்குள் தெரிகிறது.

கடுவன் குட்டியின் பொன்னிற மேனி... பூஞ்சும் கண்கள் அழகாக நீண்டு மடிந்திருக்கும் செவிகள்... அதனுடைய வெளி அழகு எதுவுமே வெகுவாக அவனை இப்போது ஆகர்ஷிக்க வில்லை. அந்தக் கடுவன் குட்டியின் மீது அவன் தன் எல்லையில்லாத பாசத்தைச் செலுத்த விரும்புகிறான்... அது அநாதை என்ற ஒன்றுக்காக.

வாஞ்சையுடன் அவன் அதைத் தடவிக் கொடுக்கும் வாலை அது அழகாக ஆட்டுகிறது. சுட்டி இப்போது அதைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொள்கிறான். நாவாலே நக்கி... நக்கி... தன் நன்றியை அவனுக்கு அது தெரிவிக்கிறது.

என்ன பெயர் வைக்கலாமென்று யோசிக்கிறான்.

அவன் வகுப்பில் அவனோடு படிக்கும் பணக்காரப் பையன்கள் தங்கள் தங்கள் வீட்டு நாய்களுக்கு வைத்த பெயர்களை ஒரு தடவை வரிசைப்படுத்தி மனத்தளத்தில் நிறுத்துகிறான். எல்லாப் பெயர்களும் படிக்காத... அவனுடைய தாய் தகப்பன் வாயில் நுழையமுடியாத ஆங்கிலப் பெயர்களாகவே இருக்கின்றன. செத்துப் போன கறுப்பியின் நினைவாகக் ''கறுப்பன்'' என்று வைத்தால் என்ன என்று ஒரு தடவை யோசிக்கிறான்.

பெயர் கவர்ச்சியாக இல்லை...

உண்மைதான்.

நிறமும் பொருத்தமான இல்லை.

அதனால் என்ன...

கவர்ச்சியான ஒரு பெயரை அந்த நாய்க் குட்டிக்கு அவன் சூட்டுவது முக்கியமல்லவே... கவர்ச்சியும் மண்ணாங்கட்டியும் என்று புறுபுறுத்துக் கொண்டு கறுப்பன் என்று அதை அன்போது கூப்பிட்டே விட்டான்!

சுட்டிக்கு அவனுடைய தாய் பின்னேரம் கொடுத்த பால் கலந்த தேநீரைத் தும்பு இல்லாத சிரட்டை ஒன்றை எடுத்து அதற்குள் ஊற்றி விடுகிறான். வாலை ஆட்டி ஆட்டி அது நக்கி நக்கிக் குடிக்கும் அழகும்... குடிக்கும்போது அது ஏற்படுத்திய சல... சல... என்றொரு சப்தம் அவனுக்கு ஒரே உற்சாகத்தைக் கொடுக்கின்றன.

''சுட்டி... புஸ்தகத்தை எடுத்து வைச்சுப் படியேன்ரா...''

தாயின் குரல் அவனை அப்போது தலை நிமிர வைக்கிறது.

''கொஞ்சம் பொறணை கொஞ்சம் பொறு...''

இருள் கவிந்ததும்,

அவன் கைவிளக்கையும் தூக்கித் திண்ணையில் வைத்து விட்டுக் கறுப்பனுடன் குதித்துக் கூத்தாடுகிறான். இரவு படுக்கைக்குப் போகும்போது கூடக் கறுப்பனை அவன் கைவிடவே இல்லை!

''மணி! ஒருமாசமா என்ரை கறுப்பனுக்கு நல்ல நல்ல விளையாட்டெல்லாம் காட்டிக் குடுத்திருக்கிறேன்... பார்... பார்... பள்ளிக்குடத்தாலை போற நான் வாசலுக்கு அங்காலை நிண்டு ஒரு இருமல் இருமினாலே போதும் எங்கை நிண்டாலும் ஓடிவந்து என்ரை காலுக்கை நிக்கும்....''

சுட்டி கறுப்பனைப்பற்றி அவனுடைய ஒரு பள்ளித் தோழனுக்கு அளந்து தள்ளிக்கொண்டு வருகிறான்.

''டே... சுட்டி...! பந்தை எறிஞ்சால் அதைக் கறுப்பன் கௌவிக்கொண்டு வருமோடா...?''

ஆர்வத்துடன் மணி கேட்கிறான்.

''ஓ... வருமே!''

சுட்டி உற்சாகத்துடன் பதில் கொடுக்கிறான்.

''நீந்தத் தெரியுமோடா...?''

மணியும் விடுவதாக இல்லை.

''ஓ... நீந்துமே...''

சுட்டியும் விட்டுக் கொடுக்க மாட்டான்.

இருவரும் கதைத்துக் கொண்டு சுட்டியின் குடிசை வாசலுக்கு வந்துவிட்டார்கள்.

சுட்டி வாசலுக்கு வந்ததும் இருமுகிறான். உதடுகளைக் குவித்துவைத்து அழகாக இரண்டு மூன்று தடவைகள் சீட்டி அடிக்கிறான். கறுப்பன் வரவில்லை. சுட்டிக்கு அவமானமாகப் போய் விட்டது. மணி வேறு ஏளனத்துடன் பார்க்கிறானே!

''கறுப்பா... டேய் கறுப்பா....''

அவன் ஆத்திரத்தில் வாய்விட்டு கறுப்பனைக் கூப்பிடுகிறான். கறுப்பன் வரவில்லை. சுட்டிக்கு எரிச்சல் எரிச்சலாக வருகிறது.

(14 ஆம் பக்கம் பார்க்க...)



1970துகளின் ஆரம்ப காலகட்டத்தில் ஈழத்துத் தமிழ்ப் புனைகதைத் துறையில் தடம் பதித்த மு.திருநாவுக்கரசு குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டவர். சமாதான நீதவான், மற்றும் திடீர் மரண விசாரணை அதிகாரி போன்ற பதவிகளை வகித்தவர்.

ஏறத்தாழ 50 வரையான சிறுகதைகளைப் படைத்துள்ளார். இவரது சிறுகதைகள் சுதந்திரன், தினகரன், ஈழநாடு போன்ற பத்திரிகைகளிலும் வேறு பல சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன. இலங்கை வானொலியிலும் ஒலிபரப்பாகியுள்ளன.

சிறுகதைகள் தவிர 15 க்கும் மேற்பட்ட நாடகங்களை ஆக்கி அவற்றை மேடையேற்றி நெறிப்படுத்தியுமுள்ளார்.

1975 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ''இவர்களும் மனிதர்கள்'' என்ற இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி சாகித்திய மண்டலப் பரிசில் பெற்றது. 1999 ஆம் ஆண்டில் இரண்டாவது பதிப்பாகவும் வெளிவந்தது.

அமரராகி விட்டார்.

'அழகினால் அல்ல...'' என்ற அவரது சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.

# விதியும் மதியும்

திருஞான சம்பந்தருடைய தேவாரங்களை உற்று நோக்கும்போது வினைப் பயன்களை அசைவற்ற பக்தியினால் வெல்ல முடியும் என்பது புலப்படுகிறது.

அவ்வினைக்கிவ்வினை ஆம்என்றே சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாது இருப்பதும் உந்தமக்கு ஊனமன்றோ,
கைவினை செய்தெம் பிரான் கழல் போற்றுதும் நாமடியோம்,
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம்!

புத்த சமயம் ஆசை, கோபம், மோகம் ஆகியவையே தீவினைக் காரணிகள்; ஆகையால் உடனடியாகப் பற்றைத் துறந்து விடு என்று போதிக்கிறது. இளம் இளவரசியான மனைவியையும், கைக்குழந்தை ராகுலனையும் நாட்டு மக்களையும் அவர்களுக்குத் தாம் ஆற்றவேண்டிய கடன்களையும் எண்ணாது சித்தார்த்தர் துறவு பூணுவதற்கு இந்த ஞானமே வழிகாட்டியது. இறந்த குழந்தையைத் தனது காலடியில் கொண்டு வந்து வைத்துக்கதறிய பெண்ணுக்கு இறப்பே நடக்காத ஒரு வீட்டைக் கண்டு பிடிக்கும் வேலையை அளிப்பதன் மூலம், யாக்கை நிலையாமையை உணர்த்த முற்படுகிறார். அது அவர் அறிந்த உண்மை.

ஆனால், பெற்றோருக்கும் தெரியாமல் தான் நம்பி வந்தவனை நடுவழியில் விஷம் தீண்டியதால் இழந்து கதறிய பெண்ணுக்கோ, தனது அசையா நம்பிக்கையால் அவனது உயிரையே மீட்டுத் தந்து வாழ்வளிக்கிறார் ஞானசம்பந்தர். விஷம் தீண்டி இறந்தவன் மீண்டும் உயிர் பிழைக்கும் விதி இருந்ததால் தானே அவன் தப்பினான் என்று பட்டிமன்றம் போட்டு நாம் வாதாடலாம். உண்மை இறைவனுக்கே வெளிச்சம். இறைவனுடைய வழிகளை விவரிக்கமுடியாது என்று மகாத்மா காந்தி தமது சத்தியசோதனையில் கூறுகிறார். எது எப்படி இருந்தாலும், புத்தர் காட்டிய மனித உணர்வுக்கும், சம்பந்தர் காட்டிய உணர்வுக்குமிடையே உள்ளதே இந்த இரு சமயங்களுக்குமிடையே உள்ள வித்தியாசம். பற்றை அறு என்று இரு மதங்களிலுமே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இரு மதங்களையும் தீவிரமாகப் பின்பற்றுவோர்களில் எத்தனைபேர் உண்மையில் பற்றை அறுத்துக் கொண்டு வாழ்கிறார்கள்?

தாம் செய்கின்ற காரியங்களில் வெற்றி வரும்போது அது தமது வெற்றியே என்று மார்தட்டிக் கொள்வதும், தோல்வி வரும் போது யார் மீதாவது அல்லது விதிமேலாவது பழியைப் போடுவதும் மனிதவாழ்வில் இயல்பாகிவிட்டது.

நானெனக்குஎன்று ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டதும் அது எந்த அளவுக்கு நடைமுறைச் சாத்தியமானது. நான் வாழுகின்ற உலகம் அதனை எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளும். அது மனித உணர்வுகளுக்கும், தன்னைச் சுற்றியுள்ள மக்களுக்கும் பொருத்தமாக அமையுமா, தான் வாழும் சமூகம் அதற்கு ஒத்துழைப்புத் தருமா, உலகம் தனது வழிகளை எப்படி நோக்கும்? என்பவற்றோடு தனது கொள்கைகளை நடை முறைப் படுத்துவதற்காகத் தான் எடுக்கும் நடவடிக்கைகள் எந்த அளவுக்கு மனித நேயத்தோடு ஒத்துப்போகும்? அப்படி ஒத்துப் போகாவிட்டால் அதுவே எதிரிக்கு சாதகமாக அமையாதா? என்பவற்றைச் சீர் தூக்கிப் பார்க்காமல், இதுதான் தனது முடிந்த முடிவு இதற்காகத் தான்பாடுபடப்போகிறேன் என்று ஒரு வேலையில் இறக்கி விட்டு பிறகு மூக்கு உடைபட வைப்பதும் விதியின் செயலே.!

II

எது சரி, எது பிழை என்பதை உணர்ந்து கொள்வதும், படிப்படியாக எதுவும் வேண்டாத நிலையை அடைவதுமே வாழ்க்கையின் நோக்கமாக அமைய வேண்டும் என்பதே வேதாந்தங்களின் சாராம்சமாக உள்ளது. அவை விதிப் பயன்களின் விளைவை மறுக்கவில்லை. ஆனால் விதியின் கைப் பொம்மையாக இருக்க வேண்டும் என்றும் எங்கேயும் கூறப்படவில்லை.

விதியின் கைப்பொம்மையாக நாம் இருப்பதைத் தவிர்க்க வேண்டுமானால் நாம் என்ன செய்யவேண்டும்?

சரியானது எது என்பதை உணர்ந்து அதைச் செய்ய ஆரம்பிக்கும்போதுதான் விதியை வெல்லும் முயற்சி ஆரம்பிக்கின்றது. உண்மையை அடைவதே நமது குறிக்கோளாக இருக்க வேண்டுமே தவிர, நமது நிலைப்பதையும், நம்புவதையும் உண்மையென்று உலகத்தை நம்ப வைக்கவோ வற்புறுத்தவோ திணிக்கவோ முடியாது. இலட்சியங்கள் உண்மையை, யதார்த்தங்களை அடிப்படையாகக் கொள்வதோடு மனித நேயத்துக்கும் மதிப்பளிக்கப்பட வேண்டும்.

தவறான காரியத்தைச் செய்வதற்கு வாய்ப்பிருந்தாலும், அதனால் வரக்கூடிய அதிக லாபங்களிலும் பார்க்க, சரியானதைச் செய்து குறைந்த லாபத்தைப் பெற்றுக்கொள்பவனுக்கு விதியின் விளையாட்டை முறியடிக்கும் வல்லமை உருவாகின்றது. இதனால் அவனுடைய பிறவிகளின் தொகை குறைய வாய்ப்பு ஏற்படுகிறது.

மறுபிறவி என்பது மறுக்கமுடியாத உண்மை. அது இருக்கிறது என்று உணர்பவர்களும், இல்லையென்று மறுப்பவர்களும் இருக்கிறார்கள். இறைவனுடைய திருவிளையாடல் என்று அடிக்கடி கேள்விப்படுகிறோம். நல்லவனாக வாழ்பவன் சில சமயங்களில் தீய பயன்களை அனுபவிக்க வேண்டியும் நேரிடுகிறது. இது அந்தத் திருவிளையாடலின் ஒரு பகுதியே ஆகும்.

தனி மனிதர்களுடைய ஆசைகள், அவாக்கள், எண்ணங்கள், வெறிகள் எல்லாம் உயர்ந்த இலட்சியங்கள் ஆகிவிடமுடியாது. இலட்சியங்களாகக் கொள்ளத்தக்கவை நெறி நூல்களில் வகுக்கப்பட்டிருக்கின்றன. எனவேதான் மனிதர்களே விழித்தெழுங்கள்! உங்கள் விதி எப்படி வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் உங்கள் வாழ்வில் உயர்ச்சி அடைய முயலுங்கள். அடுத்த பிறவியிலாவது உன்னத நிலையை அடைய முயலுங்கள். உண்மைகளை உணருங்கள் என்று திரும்பத் திரும்பக் கூறி வந்திருக்கிறார்கள்.

இந்த உலகத்தில் நல்லவர்கள் ஏராளம் பேர் இருக்கிறார்கள். ஆனால் சில சமயங்களில் அவர்கள் தமக்கு வரும் பதவி, பணம், குடும்பப் பிரச்சினைகள் மற்றும் பல்வேறுவித சந்தர்ப்பங்கள் காரணமாகத் தவறான செயல்களைப் புரிய வைக்கப்படுகிறார்கள். அது விதியின் விளையாட்டு என்பதை அவர்கள் உணர்ந்து தம் வழிகளை மாற்றிக் கொள்ளவார்களாயின் அவர் எதையிட்டும் அஞ்ச வேண்டி வராது.

இளையபாண்டவன்

சிறை வாசத்தின் துன்ப நாள்கள்
எனை வந்து சாய்க்கிறதே
மொத்தமாய் நானும்
சாகிறேன் தினமுமே.

பத்துமாத கருவறைக்குள்
பக்குவமாய் நான் இருந்தேன்
வெளியுலகம் கண்ட பின்பு
ஏன் எனக்குள் சிறைவாழ்வு.

கதறுகிறேன் நான் இன்று
கேட்கவில்லை யாருக்கும்
புரிந்துகொள்ளும் பாஷைகளை
எங்கே என்று தேடுவது.

விளக்கேற்ற வழியின்றி
இருளுக்குள் வாழ்கின்றேன்
விடியலின் திருமுகம்
எப்போது கிடைக்குமோ.

**வே.அகிலேஸ்வரன்,**
நலன்புரி நிலையமொன்றிலிருந்து.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

unite for children

unicef

# VACANCY NOTICE

**This position is a re-advertisement which appeared on the Sunday of 15th March'09 under V/No. 09/02-06, therefore, applicants who have already applied for this position need not apply again.**

UNICEF Sri Lanka, Country Office, invites applications from qualified nationals of the Republic of Sri Lanka for the following post.

**Post Title:** Education Officer
**Level:** NOB (Fixed Term Appointment)
**Duty Station:** Kilinochchi (position will be based in Vavuniya with provision to transfer)
**V/No:** HR 09/07-04
**Closing Date:** 22 July 2009

**Purpose of the Post:**
Under the overall guidance of the Head of Zone Office, and Chief, Education and in cooperation with the Government, NGOs and other development partners, the incumbent of the post is responsible for planning, monitoring and implementation of the Education Programme under an assigned geographical area.

**Major Duties and Responsibilities:**

- Based on guidelines agreed upon within the Education Section, provide technical support for the planning, development, implementation and monitoring of the Annual Work Plan with the responsible Zonal Directors of Education, ensuring that the Annual Work Plan is developed along results based principles and that it includes a clear monitoring and evaluation framework.
- Assume accountability for effective implementation and monitoring of the Annual Work Plan to achieve programme results, with due consideration of agreed targets and processes involved. Focus specifically on integration of strategies and approaches to ensure full ownership of the process by the Zonal Director of Education (ZDE).
- Identify partner systems and capacities in need of strengthening; provide follow up technical assistance to the ZDE to implement agreed plans developed during capacity reinforcement training sessions for effective improvement in implementation of specific aspects of the Education Programme.
- Coordinate with a network of development partners (Zonal Director of Education, Provincial Director of Education, NGOs, Development Agencies, Civil Society) and ensure that programme planning, implementation and monitoring is carried out in a collaborative manner so as to capitalize on the comparative advantage of each player.
- Strengthen synergy with related sectors (including within the UNICEF Zonal office) and partners; identify important areas in need of advocacy, develop and implement advocacy strategies for mainstreaming innovative education approaches at zonal level and among partners.
- Conceptualize and coordinate the organization of social mobilisation activities and specific events to ensure optimal participation of school communities; ensure adequate documentation in various forms of programme processes and activities for advocacy and information dissemination.
- Monitor logistical planning, distribution and end use of materials and ensure that programme implementation falls within agreed objectives and budgetary allocations: prepare all internal documents (including Cash Requisitions, Programme, Admin and Special Accounts (PGMs), contracts etc..) related to the timely implementation of the work.
- Prepare situation analysis, donor reports, annual reports, proposals and other programme documents and ensure the production and compilation of accurate information including through the use of well as in identification, arrangement and selection of staff housing), assure issuance of UN and Ministry of Foreign Affairs IDs, assure that visas are obtained and renewed as needed. computerised programme systems, using the latest IT for programming, planning and monitoring, including Programme Management Systems (ProMS). Develop & carry out specific studies and evaluations which will be used to support project development.

**Minimum Qualifications and Experience Required:**

- University degree, preference will be given to qualifications specifically related to education.
- Two years progressively responsible work experience in the social development field, preferably in education.
- Analytical skills and report writing ability are essential. Experience in design and implementation of social sector programmes, in working with donors as well as alliance building and networking among Government Agencies, NGOs and Civil Society is n advantage.

**Language:**
Fluency in English and at least one local language (Sinhala/Tamil) is required.

**Specialized Training/Other Skills/Competencies:**

- Proficiency in the use of computers and especially in word processing, spreadsheets, graphics
- Up-to-date with the latest developments in the education sector
- Aware of and sensitive to child rights and gender issues, and to the necessity to mainstream them in all programme activities
- Excellent writing skills
- Proven capacity for team work.
- Commitment, drive for results, embracing diversity, integrity, self awareness and self-regulation and teamwork.
- Demonstrated ability to work in a multi-cultural environment and establish harmonious and effective working relationships, both within and outside the organization.

An attractive salary will be offered to the selected candidate depending on qualifications and experience, plus a child allowance, if applicable. All emoluments are tax-free

Those who possess the required qualifications and wish to apply to the above post, must submit an application including ***1) cover letter, 2) CV, 3) duly completed and signed Personal History Form (P.11), 4) copies of most relevant academic qualification, and for UN candidates, 5) the last 2 Performance Evaluation Reports (PER)*** by specifying the Vacancy Notice number (V/No) either by email to or by postal mail addressed it to the **Human Resources Specialist**, under **Confidential, cover by 22 July 2009**.

The P.11 can be downloaded from the following link ***http:www.unicef.org/about/employ/index_apply.html*** or obtained at the reception of our Head Office, 35 Balapokuna Road, Kirulapone, Colombo 5, Tel. 2768555

'UNICEF is committed to gender equality in its mandate and its staff'

'UNICEF is a non-smoking working environment.'

'Applications from qualified female candidates are strongly encouraged.'

**Only short-listed applications will be acknowledged.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

unite for children

unicef

# VACANCY NOTICE

UNICEF Sri Lanka, Country Office, invites applications from qualified nationals of the Republic of Sri Lanka for the following post.

**Post Title:** Finance Officer
**Level:** NOB (Fixed Term Appointment)
**Duty Station:** Colombo
**V/No:** HR 09/07-03
**Closing Date:** 22 July 2009

**Purpose of the Post:**
Under the general supervision of the Chief of Operations, assists in the area of accounting control, recording, reporting of assets, liabilities and income. Monitor the appropriate disbursements of funds and payments of accounts in accordance with the rules, regulations and established budgetary limits.

## Major Duties and Responsibilities:

- Control and operate bank accounts in accordance with UN/UNICEF financial rules and regulations and local banking practices. Provide up-to-date information on the cash position or status of such accounts. Reconcile bank statements, keeps abreast of all procedures and regulations regarding the maintenance of bank accounts, exchange and interest rates, etc.
- Certify the appropriate, accurate and timely processing and recording of disbursements and payments, (e.g., Medical Insurance Plan, travel claims, pension fund, insurance, advances to government), in accordance with established rules, regulations and systems, and within budgetary limits. Also ensure recovery of advances and accounts receivable.
- Monitor financial transactions and accounting reports, and reconciliation of accounts, to ensure accurate and up-to-date financial information. Prepare required reports and statements for the Head of Office and HQ.
- Manage Programe Management System (ProMS), provide training and orientation to staff on its use and coordinates with IT on technical adjustments or irregularities to meet local conditions. Supervise timely maintenance of computerized accounting and finance system.
- Control petty cash fund, disbursements, recording and accounting.
- Review budget expenditures by codes against approved allotments, and verifies compliance with reports received from Head Quarters.
- Prepare and analyze financial data for budget estimates and financial planning.
- Brief the staff on the application and interpretation of UN/UNICEF accounting and financial rules, regulations, procedures and policies.
- Undertake visits to sub-offices to provide accounting and finance training and support, establish and/or review systems and procedures for compliance with the rules and regulations, and prepare reports and recommendations.
- Be responsible for the safekeeping of cash and cheques.
- Assistant dumonious and effective working relationships, both within and outside the organization.

## Minimum Qualifications and Experience Required:

- University degree in Accounting, Finance or Business Administration.
- Two years of professional work experience in finance and accounting. Experience in an international organization desirable.

## Language:
Fluency in English and at least one local language (Sinhala/Tamil) is required.

## Specialized Training/Other Skills/Competencies:

- Good judgement, initiative, high sense of responsibility, organization, negotiating and analytical skills.
- Supervisory ability.
- Ability to conduct training.
- Computer skills, including internet navigation, and various office applications
- A positive and pleasant disposition towards work responsibility.
- Timely disposition to the tasks assigned.
- Proven ability to work both independently and as part of a team.
- Work harmoniously with colleagues and assist staff in the unit during peak loads, and in the absence of staff
- Demonstrated ability to work in a multicultural environment and establish harmonious and effective working relationships, both within and outside the organization.

An attractive salary will be offered to the selected candidate depending on qualifications and experience, plus a child allowance, if applicable. All emoluments are tax-free

Those who possess the required qualifications and wish to apply to the above post, must submit an application including ***1) cover letter, 2) CV, 3) duly completed and signed Personal History Form (P.11), 4) copies of most relevant academic qualification, and for UN candidates, 5) the last 2 Performance Evaluation Reports (PER)*** by specifying the Vacancy Notice number (V/No) either by email to srilankahrvacancies@unicef.org or by postal mail addressed it to the **Human Resources Specialist**, under **Confidential, cover by 22 July 2009**.

The P.11 can be downloaded from the following link ***http:www.unicef.org/about/employ/index_apply.html*** or obtained at the reception of our Head Office, 35 Balapokuna Road, Kirulapone, Colombo 5, Tel. 2768555

'UNICEF is committed to gender equality in its mandate and its staff'

'UNICEF is a non-smoking working environment.'

'Applications from qualified female candidates are strongly encouraged.'

**Only short-listed applications will be acknowledged.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகினால் அல்ல...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

''உன்ரை நாய் செவிட்டு நாய்...''

மணி சொல்லிக் கொண்டு போவதைக் கேட்கக் கேட்கச் சுட்டிக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வருகிறது. சுட்டிக்கு அழுகை... ஆத்திரம்... அவமானம்.... எல்லாம் ஒன்றுசேர அவன் உள்ளத்தை, வேதனை அறுக்கத் தொடங்குகிறது. ஒரு பூவரசந்தடியைக் குழையோடு முறித்துக்கொண்டு சினத்துடன் தாழ்வாரப் பக்கமாக ஓடுகிறான்.

கறுப்பனைக் காணவில்லை!

ஓடிப்போய் கட்டில்லாத தோட்டக்கிணரை எட்டிப் பார்க்கிறான். கிணற்றுக்குள்ளும் கறுப்பன் இல்லை.

கறுப்பனைக் கூப்பிடுகிறான்.

''கறுப்பா... டேய் கறுப்பா...''

அவனது குரல் பலமாக எதிரொலிக்கிறது.

கூப்பன் கடையிலிருந்து வரும் தாயின் முந்தானையில் தொங்கிக் கொண்டு,

''அம்மா... அம்மா கறுப்பன் எங்கேயணை....?''

அவன் விசும்புகிறான்.

விழிநீர் கசிகிறது.

அவனுடைய கேள்விக்குப் பதில் சொல்லமுடியாமல் தவிக்கும் தாயின் பரிதாபமான தோற்றம் அவனுடைய சின்னஞ்சிறு இதயத்தை என்னவோ செய்து கொண்டிருக்கிறது.

''எங்கேயெண்டு சொல்லேனணை....''

நாய்தானே என்று ஒதுக்கிவிடும் நிலையில் அவன் இல்லை;

''சுட்டி; கறுப்பன் கனகசபை வீட்டிலையடா''

அவள் சொல்லிவிட்டுச் சோகமான பெருமூச்சு ஒன்றை விடுகிறாள்.

கனகசபை பெரிய நிலப்பிரபு. சுட்டி இருக்கிற இந்த வளவு, சுட்டியின் தகப்பன் பாடுபடுகிற அந்தத் தோட்டம் எல்லாமே அவருக்குத்தான் சொந்தம்.

''கனகசபை வீட்டை கறுப்பன் ஏனணை போனது''

ஏக்கத்துடன் சுட்டி தாயைப் பார்த்துக் கேட்கிறான்.

அவளுக்கு அழுகை அழுகையாக வருகிறது.

அவளுடைய கண்ணீர் உள்மனதோடு மட்டும்தான்.

''சுட்டி! பட்டணத்துக்குக் காரிலை படிக்கப்போற கனகசபையின்ரை பேரப் பெடியன்..., நீ காலம்புற பள்ளிக்குடம் போனாப்போலை கனகசபையோடை வந்து... கறுப்பனைக் கண்டிட்டு கறுப்பன்தான் வேணும் எண்டு சிணுங்க கனகசபை கறுப்பனைக் காவிக்கொண்டு போட்டாரடா...''

அவள் சொல்லிமுடிப்பதற்குள் அவன் கதறி அழத் தொடங்கி விட்டான்.

''என்ரை கறுப்பனை... நீ ஆரைக் கேட்டுக் குடுத்தனி...?''

எரிச்சலில் அகப்பட்ட சாமான்களையெல்லாம் தூக்கி எறிந்து கொண்டு அவன் அழத்தொடங்கிவிட்டான்.

''எனக்குக் கறுப்பன்தான் வேணும்... எனக்குக் கறுப்பன்தான் வேணும்...''

அவன் அழுகை ஓயவில்லை.

அவளுக்கு எரிச்சல் எரிச்சலாக வருகிறது, அகப்பைக் காம்பால் சுட்டியின் முதுகில் இரண்டு அடிகள் போட்டுவிட்டு... அவன் வலிதாங்க மாட்டாமல் துடித்துத் துடித்து விழ, அவளும் விம்மி வெடிக்கிறாள்.

கொஞ்சம் கொஞ்சமாக அவன் அழுகை ஓய்கிறது.

''ஏனணை கறுப்பனைக் குடுத்தனி...? தரமாட்டேனெண்டாப் பிடிச்சு விழுங்கிப் போடுவினமோ....?''

ஏக்கம் நிறைந்த அவனுடைய குரல் மெல்லக் கரகரக்கிறது.

''அவங்கள் கேட்டு அதை நாங்கள் இல்லையெண்டு சொன்னா அவங்களுக்குக் கோவம்வந்திடுமடா...''

அவளுடைய பதில் அவனுடைய மனதுக்குத் திருப்தி அளிக்கவில்லை.

''ஏனணை - கனகசபை வீட்டை நான் வந்து... எனக்கு அது வேணும் இது வேணும் எண்டு உன்னைப் பாத்துச் சிணுங்கினா... நீ வேண்டித் தந்திடுவியோ?''

அவன் தாயைப் பார்த்து மிக அமைதியாகக் கேட்ட கேள்வி அவளை மலைக்க வைத்து விட்டது.

சமூக அமைப்பின் தன்மையை அந்தத் தாய் தன் ஏழை மகனுக்கு மெல்ல மெல்லப் புரிய வைக்கிறாள்.

கறுப்பியைக் காரால் நெரிச்சுக் கொன்ற பரமலிங்கத்தில் அவன் இவ்வளவு நாளும் வைத்திருந்த ஆத்திரமும் ஆவேசமும் பணக்காரக் கனகசபை மீது திரும்புகிறது.

''ஓ...ஓ... அவையிட்டைப் பணம் இருககிறபடியாலை தானே எங்களாலை எதிர்த்துப் பேசமுடியாமல் இருக்கு....''

சொல்லிக்கொண்டே திண்ணையில் இருந்தவன் வெளி முற்றித்தில் காறித் துப்புகிறான்.

அந்தத் துப்பல் வெளி முற்றத்தில் மட்டும் விழவில்லை.

சமூகத்தைச் சுரண்டிப் பிழைக்கும் ஒவ்வொரு பணக்காரனின் முகத்திலும் அந்தத் துப்பல் விழுகிறது.

ஒரு மாதத்திற்குப் பிறகு இன்றைக்குத்தான் சுட்டிக்கு கனகசபை வீட்டிற்குப் போவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. வாழைக்குலை ஒன்றைச் சுமந்து கொண்டு கனகசபை வீட்டுக்கு அவன் போகிறான். கனகசபையின் வளவுக்குள் நுழைந்தவன் வாழைக்குலையைக் கனகசபையின் மனைவியிடம் கொடுத்துவிட்டுக் கனகசபையின் பேரப்பெடியன் ரவி இருக்கும் போர்ட்டிக்கோ அறைப் பக்கமாக வருகிறான்.

போர்ட்டிக்கோவில் ரவியின் குரலும் கறுப்பனின் உர்.. என்ற உறுமலும் மாறி மாறிக் கேட்கின்றன. சுவர் விளிம்பு ஒன்றில் காலை வைத்து ஏறி ஜன்னலினூடாக உள்ளே பார்க்கிறான்.

ரவியை வெளியே வரும்படி அவன் கையைக் காட்டுகிறான்.

கறுப்பனைப் பார்க்கும் கொள்ளை ஆசை அவனுக்கு.

''ரவி... ரவி... கறுப்பனை எனக்கொருக்கா நல்லாக் காட்டிறியா....?''

வெளியே வந்த ரவியிடம் சுட்டி தன் ஆசையை வெளிவிடுகிறான்.

''கறுப்பன்... சீ... சீ... என்ற அசிங்கமான பேர்....''

ரவி ஏளனமாகச் சிரிக்கிறான்.

அவனுடைய பணக்காரச் சிரிப்பு சுட்டியின் உள்ளத்தைச் சுடுகிறது.

''டேய்... உன்ரை கறுப்பனுக்கு லூயி எண்டு பேர் வைச்சிருக்கிறேன். லூயி... ஆ எவ்வளவு அழகான பெயர்...''

அவன் சொல்லிக் கொண்டே லூயி.... லூயி.... என்று கத்துகிறான்.

வாயிலே ஒரு பந்தை வெகு லாவகமாகக் கௌவிக்கொண்டு சுட்டியின் - கறுப்பன்.... ரவியின் லூயி- ஓடி வருகிறது. சுட்டிக்குக் கறுப்பனைப் பார்க்கப் பிரமிப்பாக இருக்கிறது. பணக்காரச் சாப்பாட்டில் அது கொழுத்து விட்டது. அழைத்து விளையாட அவன் கைகள் துடிக்கின்றன. லேசான ஒரு உறுமலுடன் சுட்டியின் பாதங்களை அது நக்கி நக்கி அவனைக் கண்ட ஆனந்தத்தில் அது துள்ளிக் குதிக்கிறது. அவனும் அதை வாஞ்சையோடு தடவிக்கொடுக்கிறான். அவன் நாயில் தொடுவது ரவிக்கு எரிச்சலாக இருக்கிறது.

''டேய்... டேய்... நீ அசுத்தம்.... லூயியிலை உன்ரை கை படப்படா... போடா... அங்காலை....''

சொல்லிக் கொண்டே கழுத்துப்பட்டையில் பிடித்து நாயைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு ரவி ஓடுகிறான்.

சுட்டியின் பிஞ்சு நெஞ்சம் வெம்புகிறது.

சுட்டி வழக்கம்போல அன்றைக்கும் பாடசாலையிலிருந்து மனச் சோர்வுடன் வருகிறான். கறுப்பனைப் பறிகொடுத்த பிறகு அவனுக்கு மன உளைச்சல் அதிகம். சமூக அமைப்பின் தன்மை அவன் நெஞ்சில் ஒரு சம்மட்டி அடியாக விழுந்து விட்டது. நேரே புத்தகப் பையை உள்ளே கொண்டு போய் வைத்துவிட்டு முற்றத் துக்கு வந்த சுட்டி திகைத்தேவிட்டான்.

அவனுடைய கண்களை அவனால் நம்பமுடியாமல் இருக்கிறது. அவனுடைய கால்களுக்குள் விழுந்து வாலைக் குழைத்து பலவீனமான குரலை எழுப்பி அவன்மேல் பாய்ந்து குதிக்கிறது. அவன் வாஞ்சையுடன் அதைத் தடவிக்கொடுத்து, நெஞ்சோடு அதை அணைக்கிறான். மீண்டும் அவன் மனதில் ஒரு புதிய உற்சாகம் பொங்கிப் பெருகுகிறது.

''டே சுட்டி... கறுப்பனிலை தொடாதையடா. அஃக்குக் குட்டை பிடிச்சிருக்கு... குட்டை பிடிச்ச நாயால்தான் கனகசபை அதை [illegible] கலைச்சிருக்கிறார்.

தாய் சொல்லிக் கொண்டே வருகிறாள்.

அவன் இப்போது கறுப்பனைப் புரட்டிவிட்டு அதன் அடிவயிற்றைப் பார்க்கிறான். அம்மா சொன்னதுபோல கறுப்பனுக்கு அடிவயிற்றில் குட்டை....

அவன் முகத்தைச் சுளிக்கவில்லை.

கல்லை வீசி அதன் மீது எறியவில்லை.

கனிந்த இதயத்துடன் தன்னுடைய கறுப்பனைத் தூக்குகிறான்.

''டேய் சுட்டி... அதை விட்டிடு, குட்டை பிடிச்ச நாயிலை ஏனடா அளைகிறாய்?''

தாயின் குரல் எதிரொலிப்பதை அவனால் பொறுக்க முடியவில்லை.


''எனக்குக் குட்டை பிடிச்சா எனக்குக் கிட்ட வரமாட்டியோ? கறுப்பனுக்குக் குட்டை பிடிச்சா எனக்கென்ன?''

அவன் உறுதியாகச் சொல்லிவிட்டு மேலும் மேலும் கறுபபனை இறுக்கிப் பிடிக்கிறான். அவனுடைய இறுக்கமான அன்புப் பிடிக்குள் கிடந்து அது நசிபடுகிறது.

கறுப்பனை அவன் நேசிப்பது அதன் அழகில் அல்லவே! அது யாருக்குத்தான் புரியும். ✱

*(நன்றி: 'இவர்களும் மனிதர்கள்' - சிறுகதைத் தொகுதி)*

## சொற்சிலம்பம் - போட்டி இல:69



அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### மேலிருந்து கீழ்

1. இந்துக்களின் திருநாள் ஒன்று.
2. பகுபத உறுப்புக்களில் இறுதியானது.
3. விவாதம் செய்தல்.
4. நான்.
6. ஒரு நிறம்.
10. உடலை விற்கும் துர்தடத்தை
11. காலில் அணிவது.
13. பெருக்கல் குறி.
14. ஒன்றின் விளக்கம்.
15. இணக்கம் தெரிவி.
16. அசைய.
18. சிறிய தடி/கம்பு
21. கருமை/ மேகம்

### இடமிருந்து வலம்

1. மிதவாதி அல்ல.
5. அதிக.
7. திரவத்துக்கும் திண்மத்துக்கும் இடைப்பட்ட நிலை
8. தர்மத்தில் ஒருவகை. ஈகை, கொடை வகையிலும் அடங்கும்.
9. வசிக்கும் ஸ்தானம்.
11. ஒன்றுக்கு அதிகம்: ஆனால் பலவல்ல.
12. இதுபோனால் சொல்லும் போகுமாமே.
13. புனித இடம்.
14. வெளிநாட்டுக்குச் செல்லத் தேவைபடும் அனுமதி
15. மாலை
16. ஒன்பது விதமான குணாம்சங்களை வெளிப்படுத்தும் பாவனை.
17. உட்செல்
19. கை.
20. பெரிய
22. மேல்நாட்டுக் குடிவகையொன்று.
23. திடீரென ஏற்படுவது/ கிட்டுவது, உடலாலும் உணராமல் உள்ளத்திலும் ஏற்படலாம்

## போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*

*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*

*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*

*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*

*5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*

*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 69**

*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 22.07.2009ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.*

*7. சொற்சிலம்பம் போட்டி இல. 68 இல் வெற்றிபெறுவோர்களது விவரம் 26.07.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ **சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 67 இற்கான சரியான விடைகள் வருமா று:**

**இடமிருந்து வலம்**

(1)சமத்துவம் (6) துணி (7)வட (8)முன் (9)கரம்பற்று (11)புதினம் (13)திறம் (14)கதி (15)நலம் (16)மதி (17)சாரம் (19)தாவும் (20)நடு (21)குருதி (22)புருவம்

**மேலிருந்து கீழ்**

(1)சதுப்பு (2)மணி (3)துவரம் (4)வடம் (5)என்றும் (8)முற்றம் (9)கனதி (10)பதிகம் (12)திகதி (15)நரம்பு (16)மக்கு (17)சாவு (18)கூடும் (19)தாதி (20)நவ

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 67 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**வை.சந்திரபாலன்,**
மணியகாரன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

**2 ஆம் பரிசு**
**விக்னேஸ்வரன் ஜெயதீபா,**
2 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

**3 ஆம் பரிசு**
**து.நவரட்ணவேல்,**
பி.பொ.மு (வட) அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
யாழ்ப்பாணம்.

பரிசில் பெறுவோருக்கான பணம் காலக்கிரமத்தில் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) **க.சுதா[illegible],**
வைத்திய[illegible] வீதி,
சங்கானை.

(2) **எஸ்.துளசிதா,**
இணுவில் தெற்கு, இணுவில்.

(3) **[illegible] அரியரட்ணம்,**
இல.16, சோமசுந்தரம் அவெனியூ, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.


(4) **பா.பிரதீபன்,**
சாளம்பை, புலோலி மேற்கு, பருத்தித்துறை.

(5) **வி.இராகவன்,**
மே/பா சி.சிவப்பிரகாசம்,
தொல்புரம் மத்தி, சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டுப் பணம் துரிதமாகவும், பாதுகாப்பாகவும் இலங்கை வங்கி மூலம் உங்கள் கைகளில்...

உங்கள் உறவினர்களும், நண்பர்களும் வெளிநாட்டில் உழைக்கும் பணத்தை **அதிக பாதுகாப்பு, அதிகூடிய செலாவணி மாற்று வீதம், அதிக நம்பிக்கையுடன்** இலங்கை வங்கியின் துரித பணப்பரிமாற்றுச் சேவை மூலம் இலங்கையின் எப்பாகத்திலும் உடனடியாகப் பெற்றுக் கொள்ளலாம்.



**இந்தத் தகவலை இன்றே வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர்கள், நண்பர்களுக்கு தெரிவியுங்கள்.**

- இலங்கையின் மிகப்பெரிய ஒன்லைன் வங்கி வலையமைப்புடன் இணைந்த 700 க்கு மேற்பட்ட சர்வதேச வங்கிகள் மற்றும் BOC e - Cash உடன் தொடர்புபட்ட இணையத்தள வங்கி வசதி (Internet Banking).
- மத்திய கிழக்கு, இத்தாலி, இஸ்ரேல், தென் கொரியா, ஜப்பான், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளிலுள்ள இலங்கை வங்கியின் முகவர்கள் மூலம் துரிதமாகப் பணம் அனுப்பும் வசதி.
- பிரித்தானியா, மாலைதீவு, இந்தியா ஆகிய நாடுகளிலுள்ள இலங்கை வங்கிக் கிளைகள் மூலம் பணம் அனுப்பும் வசதி.
- வெளிநாட்டுப் பண பரிமாற்றுச் சேவைகளான - BOC e - Cash, X-press money, MoneyGram, Coinstar, Ez-Remit மற்றும் Telemoney மூலம் பணம் அனுப்பும் வசதி.
- உலகிலுள்ள எந்தவொரு வங்கிக்கும் பணத்தை SWIFT ஊடாக - BCEYLKLX (SWIFT Code) இலத்திரனியல் முறை மூலம் பரிமாற்றம் செய்யும் வசதி.
- மேற் கூறப்பட்ட வழிகளில் மிகச் சுலபமாக இலங்கை வங்கிக்கு வெளிநாட்டுப் பணத்தை அனுப்ப முடியும். வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள எந்தவொரு இலங்கை வங்கிக் கிளைகளிலும் இப் பணத்தை உடனடியாகப் பெறும் வசதி.
- வெளிநாட்டு நாணயக் கணக்கில் பணத்தை வைப்பிலிடும் போது கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டா.
- இலங்கையின் மிகப்பெரிய அரச வங்கியின் 100% பாதுகாப்பு.

உங்கள் வெளிநாட்டுப் பணத்திற்கு இலங்கை வங்கி வழங்குகின்ற இன்னும் பல வசதிகளைப் பெற்றுக் கொள்ள இன்றே இலங்கை வங்கியில் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

**மேலதிக விபரங்கள் :**
இலங்கை வங்கியின் கிளைகளில் அல்லது பிரதான அலுவலகத்தில் 2345841, 2447831, 2203870-2 என்ற தொலைபேசி இலக்கங்களில் ரசிகா, இசன்கா, அனுஷ்காவுடனும் மற்றும் டக்ளஸ் - 077 3613349, அமல் - 077 3650219, நிலங்க - 077 3721503 ஆகியோருடனும் தொடர்பு கொள்க.
எமது 24 மணிநேர அழைப்பு நிலையம் (Call Centre) +94 112204444

NRFC ACCOUNT | இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்



# MAXIMISE YOUR POTENTIAL

ACCA



Gain a professional qualification in accountancy and a UK degree without doubling the workload.

ACCA SRI LANKA
# 424
R A De Mel Mawatha,
Colombo 03.
2301920 / 2301923
info@lk.accaglobal.com

www.accaglobal.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள வங்கி/ நிதி நிறுவன மொன்றிற்கு இடம் தேவை.

தொடர்பு:
தொ.பே:0777399799. E.Mail: Penpal@eureka.lk

START THE WORLD RECOGNISED ADVANCED DIPLOMA IN

## ஹோட்டல் விடுதி முகாமைத்துவம் உல்லாசப்பயண முகாமைத்துவம்

@ PATHE ACADEMY SRI LANKA (Full-time or Part-time)
OFFERED BY CONFEDERATION OF TOURISM & HOSPITALITY (CTH) UK



CTH

GUARANTEED ADMISSION TO

**UK**
இரண்டாவது அல்லது இறுதியாண்டு பவுன்மவுத் பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் இளநிலைப்பட்டம் (BA) சர்வதேச விருந்தோம்பல் மற்றும் உல்லாசப் பயணமுகாமைத்துவம்
Ranked No.1 for Tourism Management by the Guardian British University Guide 2008.

**AUSTRALIA**
இரண்டாவது அல்லது இறுதியாண்டு கிறிபித் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் வர்த்தகத்தில் இளநிலைப் பட்டம்
(Hotel, Tourism, Event, Real Estate & Property and Sport)

**SINGAPORE**
போஷ்ரனில் இரண்டாம் நிலை
பணம் செலுத்தி நடைமுறைப் பயிற்சிகளைப் பெறலாம்

* Hospitality sector staff from companies registered with Tourism Board/ IATA or relevant government authorities are offered **25 % discount on course fee. (Offer valid till 31st August, 2009)**
* First 5 student registering for CTH before Sep 31st will be offered a scholarship of 500£ on Admission to West London College UK.

Colombo Ads: 0777442475

Hotline : 0773 171 300

PATHE ACADEMY
*The People's Academy...*
PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION
111-1/2, Maya Avenue, Kirulapona, Colombo 06. Tel : 2586418.
www.patheacademy.org

## டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகலவிதமான மோட்டார் சைக்கிள் வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் அனைத்தும் சிறந்த முறையில் மீள் திருத்திக் கொடுக்கப்படும்.
இல.06, கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி
K.K.S.றோட். T.P.: 021 222 8680

## வீடு வளவு விற்பனைக்கு

யாழ்.பல்கலைக்கழக வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-தொ.பே: 0775277333

## பகுதி வீடு வாடகைக்கு

வண்ணார்பண்ணை மேற்கு, ஆறுகால் மடத்தடியில் நேர்மையுள்ள, கௌரவமான இரண்டு / மூன்று பெண்கள் வசிப்பதற்குப் பகுதி வீடு (Annex) வழங்கப்படும்.
C/O உதயன், விளம்பர இல:- 3917

## வீடு வாடகைக்கு

கச்சேரிக்கு அருகில் 80, கண்டி வீதியில் அமைந்துள்ள 200 சதுர அடிக்கு மேல் வசதியான வீடு, நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடப்படும்.
விவரங்களுக்கு:- 021 222 2710 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி, சிவன் அம்மன் கோயில் வீதியில் 1 1/4 பரப்புக் காணியில் அமைந்த சகல வசதிகளுடன்கூடிய புதிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:-S.S.நாதன்,
16/3, விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0776146434

## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுய தெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெளிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த - சுயதெரிவுமுறை முன்னோடி- தனிமனித நிறுவுநர் - சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்புகொள்க.
கொழும்பு நேரடித் தொலைபேசி:
2360488, 2360694, 4873929.

# OPPORTUNITY IN THE NORTHERN REGION

BROWNS GROUP BG ESTD 1875 **Browns**

BROWNS - a name of repute in the highest echelons of business and amongst househo'ds for over 130 years, is fast re-emerging as a modern day leader under a dynamic, young management team. The Browns Group of Companies, consisting of nine divisions and eight subsidiaries, representing sixty two world renowned brands, seek to further strengthen their human resource base with young, vibrant, talented and career conscious personalities for the following position.

## Area Sales Manager

Applicants should have a good educational and professional background with a flair for sales and dealer management, the ability to achieve sales targets and work under pressure in achieving company goals in market share and product mix.

Candidate should be between 30 – 35 years of age with a minimum of 3 years sales experience in the agro based machinery /hardware industry. Preference will be given to those who have been employed in a similar position in the northern territory.

He should be a team player with excellent people handling skills and confident in using his own initiatives and working with minimum supervision. An impeccable track record in personal integrity with commitment to a career in sales is an essential prerequisite.

**Walk-in interviews will be held at BASTIAN HOTEL on 16TH July 2009 by the visiting delegation from Browns Group from 9.00 am to 4.00 p.m. Call 0777348375 to get an appointment or just walk-in.**

General Manager - Group Human Resources
**Brown & Company PLC**
481, T. B. Jayah Mawatha, Colombo 10
E-mail: recruitment@brownsgroup.com

BROWNS GROUP BG ESTD 1875 **Browns**
Brown & Company PLC. Co.Reg. No. PQ25


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 25.07.1923
உதிர்வு: 12.07.2006

**LATE REV. SR. M. ANTONINA. A.C**

வருடங்கள் மூன்று கவலையில் கழிந்தாலும்
அருந்தவச் செல்வி உன் அளப்பரிய சேவைதனை
கருதியே இறைவன் தன் பாதம் அரவணைப்பான் என
விரும்பியே வேண்டி வந்தோம் அனுதினம் மறவாமல்

புலோலி. - குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
23 * 04 * 1942



இறைவன் அடியில்
16 * 07 * 2008

**திருமதி மேரி திரேசா ஜோஜீனா விமலதாஸ்**

(இளைப்பாறிய உப அதிபர், யாழ்.கன்னியர்மடம் மகா வித்தியாலயம்)

எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
ஆறாது எம் துயரம்
உடலில் உயிர் உள்ளவரை
மறந்திடுமா உங்கள் நினைவு.

இவரின் ஆன்ம சாந்திக்காக யாழ்.மரியன்னை பேராலயத்தில் 15.07.2009 அன்று 6 மணிக்கும் அடைக்கல மாதா ஆலயத்தில் (O.L.R) 16.07.2009 அன்று 6 மணிக்கும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

***உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.***

நீங்காத நினைவுகளுடன்......

**கணவர், பிள்ளைகள், சகோதரன், சகோதரிகள்.**

## நன்றி நவிலலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



தோற்றம் : 12.12.1943
மறைவு : 21.06.2009

அமரர்
**அய்யாத்துரை முத்துக்குமாரசாமி**

விரோதி வருடம் ஆனி மாதம் 07 ஆம் நாள் 21-06-2009 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அய்யாத்துரை முத்துக்குமாரசாமி அவர்கள் நோயுற்ற வேளையில் வைத்திய உதவி புரிந்தோருக்கும், உடனிருந்து உதவி புரிந்தவர்களுக்கும், இறைபதம் எய்திய வேளையில் அன்னாரின் உடலை இல்லத்திற்கு எடுத்துவர பல வழிகளிலும் உதவியவர்களுக்கும், எம் துயர் துடைக்க உதவிய அன்பு உள்ளங்களுக்கும், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி, தந்தி மூலம் தொடர்பு கொண்டு அனுதாபச் செய்தி தெரிவித்தோருக்கும், மலர்வளையம் வைத்தும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், சமயத் தலைவர்கள், மத குருமார்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றோம். நாளை (13.07.2009) திங்கட்கிழமை அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எமதில்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் அனைவரும் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மணியகாரன் வளவு,
கைதடி தென்கிழக்கு, கைதடி. - குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிக்கடி மக்களைப் பயமுறுத்தி வரும் அசுர டெங்கு

# அதனைக் கட்டுப்படுத்த அறிமுகமாகிறது புதிய தொழில்நுட்பம்

இலங்கையில் கடந்த சில வருடங்களாக மலேரியா நோயின் தாக்கம் வெகுவாக க் குறைந்திருந்த போதிலும் டெங்குநோய்த் தாக்கம் தொடர்ந்தும் அச்சுறுத்தலாகவே இருந்து வருகின்றது. கடந்த ஆறு மாதங்களில் மாத்திரம் இந்நோயால் 12000 இற்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டும் 160 இற்கும் மேற்பட்டவர்கள் மரணமாகியும் உள்ளனர். மலேரியா, டெங்கு ஆகிய நோய்கள் நுளம்புகளினாலேயே காவப்பட்டாலும், இவ்விரு நோய்களும் வெவ்வேறு நுளம்புகளினால் காவப்படுகின்றன. இவ்விரு நுளம்பு வகைகளும் அவற்றின் உயிரியல், சூழலியல், நடத்தையியல் என்பவற்றில் வேறுபடுவதன் காரணமாக வெவ்வேறு வகையான நுளம்புக்கட்டுப்பாட்டு முறைகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. குறிப்பாக டெங்கு நோயைக் காவும் *Aedes aegypti, Aedes albopictus* நுளம்புகள் சிறியளவில் நீர்தேங்கும் கொள்கலன்களில் (சூழலில் அநாதரவாக வீசப்பட்ட வெற்றுப் பாத்திரங்கள், சட்டிகள், பூச்சாடிகள், தேங்காய்ச் சிரட்டைகள், கோம்பைகள், பிளாஸ்டிக் பேணிகள்...)

இனம் பெருகுவதனால் இந்த நுளம்புகளின் குடித்தொகையின் அளவுப் பெருக்கம் கிராமப்புறங்களிலும் பார்க்க நகரப் புறங்களில் உயர்வாகக் காணப்படுவதுடன் டெங்குநோயின் தாக்கமும் அதிகமாக உள்ளது.

பொதுவான டெங்கு நுளம்புக் கட்டுப்பாட்டு முறைகளாக நீர் தேங்கி நிற்கும் கொள்கலன்களை அகற்றுதல், பூச்சிநாசினி விசிறுதல், குடம்பிக் கொல்லிகளைப் பயன்படுத்துதல், சூழல் முகாமைத்துவம் என்பவற்றுடன் தனிநபர் பாதுகாப்பு முறைகளும் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு பல்வேறு முறைகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்துவது ஒரு சவாலாகவே அமைகின்றது. இச்சவாலுக்கு முகங் கொடுப்பதற்கு பொதுவான நுளம்புக் கட்டுப்பாடுகளுடன் புதிய தொழில் நுட்பங்களை உள்வாங்குவதும் காலத்தின் தேவையாகும்.

**மரபணு மாற்றுத் தொழில் நுட்பம்**

மூலக்கூற்று உயிரியல் (Molecular biology), உயிரியல் தொழில்நுட்பம் (Bio technology) ஆகிய துறைகளின் அந்த வளர்ச்சி சுமார் இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் 'சாத்தியமில்லை' என்ற நிலைப்பாட்டை 'சாத்தியம்' என்னும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. நவீன தொழில்நுட்பத்திற்கூடாக நுளம்புகளின் பிறப்புரிமையியல் மாற்றப்பட்டு அவை

1. நோய்க்காரணியைக் காவும் தன்மையற்றவையாகவோ அல்லது

2. தம் குடித்தொகைகளைத் தாமே கட்டுப்படுத்துவனவாகவோ மாற்றப்படுகின்றன. டெங்கு நுளம்புக் காவியில் அதன் மரபணுவில் ஏற்படுத்தப்பட்ட மாற்றத்தின் மூலம் அதன் குடித்தொகை குறைக்கப்பட்டு நோய்த்தாக்கம் கட்டுப்படுத்தத் தக்கதாகப் புதிய அணுகுமுறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. சில தசாப்தங்களுக்கு முன்னர் மனிதனுக்குப் பொருளாதார ரீதியாகப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பீடைப் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கு கதிர் வீசலின் மூலம் ஆண் பூச்சிகள் மலடாக்கப்பட்டு சூழலில் விடப்படுவதன் காரணமாக பூச்சிப் பீடைகளின் எண்ணிக்கை பொருளாதார சேதத்தை ஏற்படுத்தும் மட்டத்திலும் பார்க்க குறைக்கப்பட்டது. இக் கட்டுப்பாட்டு முறையில் மலடாக்கப்பட்ட ஆண் பூச்சியுடன் இயற்கையில் காணப்படும் பெண் பூச்சிகள் இனம் கலக்கும் போது, வளமான சந்ததிகள் உருவாக்கப்பட மாட்டாது. இருந்த போதிலும் நுளம்புகளின் கட்டுப்பாட்டில் கதிர்வீசல் மூலம் மலடாக்கப்பட்ட ஆண் நுளம்புகள் சூழலில் விடப்பட்ட போதும் வெற்றிகரமானதாக அமையவில்லை. இதற்குப் பிரதான காரணங்களாக

1. கதிர்வீச்சுக்கு உட்படுத்தப்பட்ட ஆண் நுளம்புகள் சூழலில் இயற்கையாகக் காணப்பட்ட ஆண் நுளம்புகளுடன் இனக் கலப்புக்கான போட்டியில் வினைத்திறனுடன் செயற்பட முடியாமல் போய்விட்டது.


2. குடம்பி நிலையில் ஆண், பெண் நுளம்புகளை வேறாக்குவது கடினமானதாக அமைந்தது.

தற்போது மரபணு மாற்றுத் தொழில் நுட்ப முன்னேற்றம் காரணமாக நவீன நுளம்புக் கட்டுப்பாட்டில் புதிய தொழில் நுட்பங்கள் உருவாக்கப்பட்டு இயற்கையில் (சூழலில்/களத்தில்) பரிசோதனை ரீதியாக அவற்றின் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**நிபந்தனையின் கீழ் இறப்பை ஏற்படுத்துதல்**

கதிர் வீசல் அல்லது இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்தி ஆண் நுளம்புகளை மலடாக்குவதற்குப் பதிலாக, அதே தத்துவத்தின் அடிப்படையில் மரபணு ரீதியில் மாற்றப்பட்ட ஆண் நுளம்புகள் சூழலில் விடப்படுகின்றன.

இவ் ஆண் நுளம்புகள் சூழலில் இயற்கையாகக் காணப்படும் பெண் நுளம்புகளுடன் இனம் கலக்கும்போது, வழித்தோன்றும் பெண் சந்ததிகள் குடம்பி அல்லது கூட்டுப்புழு நிலையில் இறந்து விடுகின்றன. இதன் மூலம் நோயைக் காவும் நுளம்புக் குடித்தொகைகளின் எண்ணிக்கை



ஈடிஸ் இஜிப்ரி

குறைக்கப்பட்டு நோயின் தாக்கம் மட்டுப்படுத்தப்படுகின்றது. இங்கு அதிக எண்ணிக்கையில் ஆண் நுளம்புகள் உயிரியல் தொழிற்சாலையில் உருவாக்கப்பட்டு சூழலில் விடப்படுவதன் காரணமாக நோய்ப் பரம்பல் அதிகரிக்கப்படுவதற்கான சாத்தியம் தவிர்க்கப்படுகின்றது. ஏனெனில் ஆண் நுளம்புகள் மனிதரைக் கடிப்பதில்லை. குருதியை எடுப்பதுமில்லை. இதன் காரணமாக அவை நோய்ப் பரம்பலில் பங்கு வகிப்பதில்லை.

இப் புதிய தொழில் நுட்பத்தில் கொல்லும் தன்மை கொண்ட ஆட்சியான பரம்பரை அலகு (Dominant lethal) நுளம்புகளின் மரபணுவுடன் இணைக்கப்படுகின்றது. இவ் ஆட்சியான கொல்லும் தன்மை கொண்ட பரம்பரை அலகின் வெளிக்காட்டல் குறிப்பிட்ட நிபந்தனையின் கீழ் கட்டுப்படுத்தப்படும். இந்நிபந்தனை இல்லாவிடத்து அது வெளிக்காட்டப்பட்டு அங்கி இறக்கும். இங்கு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், இக்கொல் தன்மை கொண்ட நிலை பெண் அங்கிகளிலே மட்டும் வெளிக்காட்டப்படும்.

இங்கிலாந்தைச் சேர்ந்த Oxicetec நிறுவனம் இவ் ஆட்சியான கொல்தன்மை கொண்ட பரம்பரை அலகை மரபணு மற்றும் தொழில்நுட்பம் மூலம் உட்செலுத்தப்பட்டு முக்கிய டெங்குக் காவி நுளம்பான ஈடிஸ் இஜிப்ரி (*Aedes aegypti*) உருவாக்கியுள்ளது. இவ் ஆண், பெண் நுளம்புகள் ஆய்வு கூடத்தில் வளர்க்கப்பட்டு அவற்றின் சந்ததி தொடர்ச்சியாகப் பேணப்படும். ஆனால், தோன்றும் குடம்பி சந்ததிகள் கொல் தன்மை கொண்ட பரம்பரையலகின் வெளிக்காட்டலின் மூலம் இறப்பதைத் தடை செய்வதற்காக குடம்பிகளுக்காக வழங்கப்படும் உணவுடன் 'றெற்றாசைக்கிளின்'(Tetracyclin) சேர்க்கப்படுகின்றது. 'றெற்றாசைக்கிளின்' இருக்கும் நிலையில் இவ் ஆட்சியான கொல் தன்மை கொண்ட பரம்பரை அலகு வெளிக்காட்டப்பட மாட்டாது. இச் சிறப்பான அம்சம் காரணமாக ஆண் நுளம்புகளை மட்டும் பெற்று அவற்றை சூழலில் விடப்படுவதற்கு முன்னராக உயிரியல் ஆய்வு கூடங்களில் 'றெற்றாசைக்கிளின்' வழங்கப்படுவது நிறுத்தப்படும். இதன் காரணமாக எல்லாப் பெண் குடம்பிகளும் இறக்க, ஆண் நுளம்புகள் மட்டும் அதிக எண்ணிக்கை பெறப்பட்டு சூழலில் விடப்படும். இவ் ஆண் நுளம்புகள் இயற்கையில் காணப்படும் பெண் நுளம்புகளுடன் இனம் கலக்கும்போது தோன்றும் பெண் சந்ததிகள் ஆட்சியான கொல் தன்மை கொண்ட பரம்பரை அலகின் ஒரு பகுதியைப் பெற்றுக் கொள்ளும். இப் பெண் சந்ததிகள் குடம்பி நிலையில் காணப்படும்போது அவை வாழும் நீர்ச் சூழலில் 'றெற்றாசைக்கிளின்' இல்லாத காரணத்தினால் கொல்தன்மை கொண்ட பரம்பரை அலகு வெளிகாட்டப்பட (இக் கொல் பரம்பரை அலகு) பெண் குடம்பிகள் இறந்துவிடுகின்றன. இவ்வாறு தொடர்ச்சியாகப் பெண் நுளம்புகள் சூழலில் இருந்து அகற்றப்படுவதன் காரணமாக டெங்கு நுளம்பின் குடித்தொகை விரைவாகக் குறைக்கப்படும்.

இவ்வாறு மரபணு மாற்றீடு செய்யப்பட்ட ஆண் நுளம்புகள் இயற்கையில் விடப்படும்போது இயற்கையில் காணப்படும் ஆண் நுளம்புகளைப் போன்று உயிரியல் ரீதியாகவும் நடத்தையியல் ரீதியாகவும் செயற்படுவதை ஆய்வுகூடப் பரிசோதனைகள் நிரூபித்துள்ளன. அண்மையில் மலேசியாவில் மேற்கொள்ளப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட களப் பரிசோதனைகளின் முடிவுகள் இத்தொழில்நுட்பத்தின்

## நகரப் புறங்களில் அந்நோய் தீவிரமாகப் பரவுவதற்குக் காரணம் சுற்றுச் சூழல் சுகாதாரம் மந்த நிலையில் உள்ளமையே



நோக்கத்தை உறுதிப் படுத்துவனவாக அமைகின்றன. எனினும் இன்னமும் திறந்த கள நிலையில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவில்லை.

**இத் தொழில்நுட்பத்தின் நன்மைகள்**

ஏனைய நுளம்புக் கட்டுப்பாடுகளுடன் ஒப்பிடும்போது இத்தொழில் நுட்பம் சிறப்பான அம்சங்களைக் கொண்டுள்ளது.

1. நுளம்பைக் கொல்லுவதற்காக அல்லது குடம்பிகளைக் கொல்லுவதற்காக இரசாயனப் பதார்த்தங்கள் (பூச்சி கொல்லிகள்) பயன்படுத்தப்படும்போது - அவை நுளம்புகளை மட்டுமன்றி ஏனைய உயிரங்கிகளையும் பாதிப்பதுடன் சூழல் நஞ்சாக்கத்தையும் ஏற்படுத்துகின்றது. ஆனால், இப்புதிய தொழில் நுட்பம் குறித்த நுளம்பினத்தை மட்டும் கட்டுப்படுத்துவதுடன் சூழல் நஞ்சாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை. இதன் காரணமாக பூச்சி நாசினிகளின் பாவனை வெகுவாகக் குறைக்கப்படுகின்றது.

கலாநிதி எஸ்.என்.சுரேந்திரன்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
விலங்கியற்றுறை, விஞ்ஞான பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

2. ஆண் நுளம்புகள் சூழலில் விடப்படுவதால் நோய்ப் பரம்பல் அதிகரிக்கப்படுவதில்லை.

3. தற்செயலாக ஆய்வு கூடங்களில் இருந்து பெண்நுளம்புகள் தப்பி சூழலுக்குச் சென்றாலும் நிபந்தனைக்கு உட்பட்ட கொல்தன்மை கொண்ட மரபணுவைக் கொண்டிருப்பதால் இவற்றில் இருந்து உருவாக்கப்படும் சந்ததிகள் சூழலில் உயிர் வாழாது அழிந்து விடும்.

4. ஏனைய நுளம்புக் கட்டுப்பாட்டு முறைகளுடன் இணைந்ததாக இத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தலாம்.

**எதிர்பார்க்கப்படும் பிரதி கூலங்கள்**

இன்னமும் உறுதி செய்யப்படாத விடத்தும் பின்வரும் பிரதி கூலங்களைச் சிலர் முன்வைக்கிறனர்.

(i) உதாரணமாக ஒரு பிரதேசத்தில் டெங்கு நோயைக் காவும் நுளம்பினங்களான (*Aedes aegypti*) ஈடிஸ் இஜிப்ரி (*Aedes albopictus*) ஈடிஸ் அல்போபிக்ரஸ் காணப்படும்போது முன்னையதின் சந்ததி குறைக்கப்பட பின்னையதின் அளவு அதிகரித்து நோய்ப்பரம்பல் தொடரலாம். இதனைத் தவிர்ப்பதற்கு இரண்டு நுளம்பினங்களையும் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஒரே நேரத்தில் மேற்கொள்ள வேண்டும்.

(ii) இக் கொல்தன்மைப் பரம்பரை அலகு, ஏனைய உயிர் அங்கிகளுக்குக் கடத்தப்படலாம். இவ் எதிர்பார்ப்பு நடைபெறுவதற்கான சாத்தியம் மிக மிக அரிதாகும். ஏனெனில் மூலக்கூற்று உயிரியல் அடிப்படையில் இவ்வாறு புகுத்தப்பட்ட மரபணு நகர முடியாதவாறு அமைக்கப்பட்டுள்ளது.

(iii) குறித்த ஒரு அங்கி (இந்நுளம்பு) சூழலிலிருந்து வெகுவாகக் குறைக்கப்படும் போது உணவுச் சங்கிலி பாதிக்கப்பட்டு சூழலில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். இப் பிரதிகூல எதிர்பார்ப்பை ஓரளவு ஏற்றுக்கொண்டாலும் ஒரு குறித்த நுளம்பு மட்டும் (ஏனைய பல்வேறு வகை நுளம்புகள் இருக்கும்போது) சூழலில் குறைக்கப்படும் போது, எவ்வாறு உணவுச் சங்கிலி பாதிக்கப்பட்டு, சூழலில் தாக்கங்கள் ஏற்படலாம் என்பது ஆய்வுக்குரிய விடயமாகும்.

**இலங்கையில் இத் தொழில்நுட்பத்தின் சாத்தியப்பாடு**

மரபணு மாற்றப்பட்ட உயிரங்கிகளோ அல்லது உணவுகளோ பயன்படுத்தப்படும்போது அல்லது சூழலில் விடப்படும் போது, அவை தொடர்பான திட்டவட்டமான சட்ட அமுலாக்கங்கள், உயிரியல் பாதுகாப்பு நடைமுறைகளும் அவற்றைக் கண்காணித்தலும், சமூக கலாசார அங்கீகாரங்களும் அவசியமாகும். மரபணு மாற்றப்பட்ட அங்கிகள் தொடர்பாக அவற்றை ஏற்றுமதி செய்தல் மற்றும் இறக்குமதி செய்தல் பற்றி சர்வதேச நடைமுறை ஒன்றுள்ளது. இது 'காட்டகெனா' நடைமுறை (Cartagena protocol) எனப்படும். இலங்கையும் இந் நடைமுறையில் கைச்சாத்திட்டுள்ளது. இந் நடைமுறைக்கு அமைய மரபணு மாற்றப்பட்ட அங்கிகள் பயன்படுத்தப்படும் போது, இந்நடைமுறைக்கமைவாக சில ஒழுங்கமைப்புகளை மேற்கொள்ள வேண்டும். இதன் அடிப்படையில் இலங்கையில் தேசியரீதியில் உயிர்ப்பாதுகாப்புத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கூறிய மரபணு மாற்றப்பட்ட டெங்கு நுளம்பை ஆய்வு கூடத்திலோ அல்லது வரையறுக்கப்பட்ட களத்திலோ முதற்கட்டமாக ஆய்வு செய்வதற்கு தேசிய ரீதியிலும் பல்கலைக் கழகங்களில் அல்லது ஆராய்ச்சி நிலையங்களில் பல்வேறு கட்டமைப்புக்கள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

குறிப்பாகப் பல்கலைக்கழகங்களில் அல்லது ஆராய்ச்சி நிலையங்களில் உயிர்ப் பாதுகாப்புக் குழுக்களும், தேசிய ரீதியில் மரபணு மாற்றப்பட்ட பூச்சிகளின் பாவனையை அங்கீகரிப்பதற்கும் கண்காணிப்பதற்கும் குழுக்கள் அமைக்கப்பட்டு உரிய சட்டமூலங்கள் இயற்றப்படுதல் வேண்டும்.

நவீன தொழில்நுட்பங்களை உள்வாங்கி மனித மேம்பாட்டிற்கு அவற்றைப் பயன்படுத்துவதற்கு நாம் ஆயத்தமாக இருத்தல் அவசியமாகும். மலேசியா, இந்தியா, தாய்லாந்து போன்ற ஆசிய நாடுகள் தமது நாடுகளில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கூறிய தொழில்நுட்பத்தைப் பரீட்சித்துப் பார்க்கத் தயாராகிவிட்ட இவ் வேளையில், முக்கிய பொதுச் சுகாதாரப் பிரச்சினையாக விளங்கும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த எம்மை நாம் தயார்ப் படுத்துதல் காலத்தின் தேவையாகும். ***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிமிர்கிறார் நமீதா

தமிழ்த் திரையுலகில் கவர்ச்சிக் கன்னியாக வலம் வந்த நமீதாவுக்கு அண்மைக் காலமாகப் போதிய பட வாய்ப்புகள் கிடைக்கவில்லை. இவர் நடித்த படங்கள் வரிசையாக தோல்வியைத் தழுவியதால் ராசியில்லாத நடிகை என்ற முத்திரை நமீதா மீதும் விழத் தொடங்கியது. எனினும் அவற்றை எல்லாம் அலட்சியம் செய்துவிட்டுத் தொடர்ந்தும் தான்தான் தமிழில் கவர்ச்சிக் கன்னி என்று நிரூபிக்கும் முயற்சிகளில் முழுமூச்சாக இறங்கிவிட்டார் நமீதா. இதன் ஒரு படியாகவே 'இந்திரவிழா' படத்தில் அசத்தலான நடிப்பை அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். அதனைத் தொடர்ந்து இன்னும் பல படங்களில் நடிக்க நமீதாவைத் தேடி வாய்ப்புகள் குவிகின்றன. ★




# திரைவிமர்சனம்

சசிக்குமார், பரணி, ஜெயப்பிரகாஜ், கஞ்சாக்கறுப்பு, அபிநயா போன்றோரின் நடிப்பில் சமுத்திரக்கனியின் இயக்கத்தில் வெளிவந்து வெற்றி நடைபோட்டுக்கொண்டிருக்கும் திரைப்படம் 'நாடோடிகள்'.

சசிக்குமார், பரணி, சந்திரன் ஆகிய மூவரும் நண்பர்கள். நட்புக்காக எதையும் செய்யத் துணிந்தவர்கள். எதிர்காலத்தில் வாழ்க்கையில் உயர் நிலையை அடைவதற்கான தேடலில் இவர்கள் இருக்கும் பொழுது இவர்களின் புதிய நண்பனாகச் சரவணன் இணைகிறான். சரவணனும் அவனது காதலியும் இணைவதற்கு அவர்களின் பெற்றோர் எதிர்ப்புக் காட்டுகின்றனர். இந் நிலையில் தம்மைச் சேர்த்து வைக்க உதவுமாறு காதலர்கள் இருவரும் கெஞ்ச, நண்பர்கள் மூவரும் அதற்கான முயற்சியில் இறங்குகிறார்கள். இதன்போது மூவருக்கும் உ ல் ஊனம் ஏற்படுகிறது. அப்படி இருந்தும் காதலர்களை சேர் து வைக்கின்றனர். ஆனால் சில மாதங்களின் பின்னர் தமது உடற் தேவை தீர்ந்ததும் காதலர் இருவரும் பிரிந்துசென்று வாழ்வதை அறிந்த நண்பர்கள் அவர்களுக்குப் பாடம் கற்றுக் கொடுக்கத் தீர்மானிக்கின்றனர்.




மீண்டும் புறப்படுகிறார்கள் நண்பர்கள். அவர்கள் கற்றுக் கொடுத்த பாடம் என்ன என்பதைக் கூறுகிறது 'நாடோடிகள்' திரைப்படம். வித்தியாசமான கதைக் களத்தில் புகுந்து விளையாடி இருக்கிறார் இயக்குநர் சமுத்திரக்கனி. தமிழுக்கு இன்னொரு திறமையான இயக்குநர் கிடைத்திருக்கிறார்.


'சுப்பிரமணியபுரத்தில்' கலக்கிய சசிக்குமார் 'நாடோடி'களிலும் தன் பங்கைச் சரிவரச் செய்து முன்னணி நாயகர்களுக்குச் சவால் விடுகிறார். கஞ்சா கறுப்பு வழக்கம்போல நகைச்சுவைக் காட்சிகளில் பின்னி எடுத்திருக்கிறார். சுந்தர் சி பாபுவின் இசை படத்திற்குப் பலம் சேர்க்கிறது.

'நாடோடிகள்' மாபெரும் வெற்றியை நோக்கிய ஒரு கூட்டுப்பயணம். ★



# சோதனை மேல் சோதனை

வால்மீகி படத்தில் கதாநாயகியாக நடித்தவர் மீராநந்தன். படத்தின் கதையில் மிகுந்த நம்பிக்கை கொண்டதால் தன்னுடைய பள்ளிப் படிப்பையும் பாதியிலேயே உதறிவிட்டு நடிக்க வந்தவர். ஆனால் அவர் எதிர் பார்த்தது போல வால்மீகி திரைப்படம் வெற்றிப் படமாக அமையவில்லை. எனவே மீண்டும் படிப்பைத் தொடர விரும்பினார் மீரா நந்தன். ஆனால் பாடசாலையிலும் இவருக்குச் சோதனை காத்திருந்தது. படத்தில் நடித்ததால் படிக்க வரவேண்டாம் என்று பாடசாலை நிர்வாகம் கண்டிப்பாகக் கூறிவிட்டது. எனினும் பலரின் தீவிர முயற்சியால் மீண்டும் மீரா நந்தனுக்குக் கல்வியைத் தொடரப் பாடசாலை அனுமதித்திருக்கிறது. ★



# வருமா? வராதா?

பருத்திவீரன் படத்திற்குப் பின்னர் கார்த்தி நடித்துவரும் திரைப்படம் ஆயிரத்தில் ஒருவன். இப் படத்தைச் செல்வராகவன் இயக்குகிறார். எனினும் செல்வராகவனின் திரைப்படங்களில் வழமையாக இருக்கின்ற காதல் கதை இதில் இல்லை. இது ஒரு இதிகாசம் சார்ந்த புதிய முயற்சி என்று செல்வராகவன் கூறி வருகிறார். இந்தக் கூற்றே படத்தின் விற்பனைக்கு ஆப்பாக அமைந்துவிட்டது. செல்வராகவன் படத்தில் காதல் காட்சிகள் இல்லாவிட்டால் எப்படி நாங்கள் படத்தை வாங்குவது என்று விநியோகஸ்தர்கள் தயங்குகிறார்கள். இதனால் வெளியீட்டுக்குத் தயாரான நிலையில் எப்போது வருமென்று நிச்சயமாகக் கூறமுடியாததாக ஆயிரத்தில் ஒருவன் திரைப்படம் அந்தரித்துக் கொண்டிருக்கிறது. ★



# படத் தயாரிப்பில் முருகதாஸ்

ஹிந்தியில் அமிர்கானை வைத்து 'கஜனி' என்ற திரைப்படத்தை இயக்கியதன் மூலம் ஹிந்திப் பட உலகின் முன்னணி இயக்குநராக ஒரே நாளில் உயர்ந்துவிட்டார் இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸ். இதனால் இவரோடு இணைந்து படம் செய்வதற்குப் பல ஹிந்தி நிறுவனங்கள் போட்டா போட்டி போடுகின்றன. இந்நிலையில் தற்போது ஆங்கிலத் திரையுலகில் பிரபல்யமான 'ருவென்ரியெத் செஞ்சரி' நிறுவனத்தின் இணை நிறுவனமான 'ஸ்ரார் பொக்ஸ்' என்ற நிறுவனம் ஏ.ஆர்.முருகதாஸின் 'ஏ.ஆர்.முருகதாஸ் புரடக்ஷன்' நிறுவனத்துடன் இணைந்து படத் தயாரிப்பு வேலைகளில் இறங்கவுள்ளது. இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு மிக விரைவில் வெளியிடப்படும் என்று கூறுகிறார் இயக்குநர் முருகதாஸ். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனையோலைக் குட்டான்களில் வீடுகளில் சேர்க்கும் பிடியரிசி ஆசிரியர்களின் சம்பளமாக இருந்த காலத்தில் பயின்றேன்

*கேள்வி: வணக்கம். 81 வயதினை நிறைவு செய்துள்ளீர்கள். நம்ப முடியாமல் உள்ளது. அநேக விடயங்களை ஞாபகத்தில் வைத்து கோர்வையாக வெளிப்படுத்துகிறீர்கள். உற்சாகமாக மூன்றாம் தலைமுறையினரை வழிப்படுத்துகிறீர்கள். உங்கள் வயதை ஒத்த ஏனையவர்களிடம் இதைக்காண முடியாது. நீங்கள் இவ்வாறு உருவானதற்கு உங்களது குடும்பத்தவர், பெற்றோர் எவ்வாறு உதவியிருக்கின்றனர் எனக் கருதுகிறீர்கள்?*

*பதில்:* எனது தந்தையார் வைரமுத்து ஆறுமுகம் நாரந்தனையைச் சேர்ந்தவர். நாவலர் பாடசாலையில் படித்தவர். நாவலர் பாடசாலையில் படித்தமையால் அசைவ உணவை உண்ணும் பழக்கத்தை கைவிட்டு சைவ போசனத்துடன் சைவப் பின்னணியில் வளர்ந்தார். நாவலரின் சீடராக இராமேஸ்வரம் ராக்கப்பிள்ளை என்பவர் இருந்தார். அவரின் தொடர்பினால் அவரது கடையில் வேலையிற் சேர்ந்து பணியாற்றினார். சிறிது காலத்தின் பின்னர் ராக்கப்பிள்ளை அவர்கள் இவரைத் தனியாக ஒரு தொழிலைத் தொடங்க ஊக்குவித்து உதவினார்.

முன்னர் நாரந்தனைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து தலைச் சுமையில் பொருள்களைக் கொண்டு வந்து தான் வியாபாரம் செய்வார்கள். வழி வழியே அமைக்கப்பட்டுள்ள சுமைதாங்கிகளில் சுமையை இறக்கி வைத்து, இளைப்பாறி இளைப்பாறியே பயணம் நடக்கும். எனது தந்தையர் வண்டிலில் வைத்து வியாபாரம் செய்தார்.

முதலாம் உலக யுத்த காலத்தில் மூன்று வண்டில்கள் வைத்து அரிசி, நெல், மரக்கறி வியாபாரம் செய்தார் அப்போது பர்மா அரிசி ஒரு மூடை 15 ரூபா, றோஸ் அரிசி 14 1/2 ரூபா, சம்பா அரிசி 18 ரூபா சந்தையில் இருந்து மரக்கறி வந்தால் தான் இங்குள்ளவர்கள் சமைக்கலாம் என்ற நிலை அன்று இருந்தது. எனவே தந்தையாரின் வண்டிலில் மரக்கறி வருவதை மக்கள் எதிர் பார்த்திருப்பார்கள். தந்தையார் தோத்திரத்திரட்டு, ஞானக் கோவை போன்றவற்றை வைத்திருந்தார். ஓய்வு கிடைக்கும் போது அவற்றைப் படிப்பார். ஞானக்கோவையை இறுதிக்காலம் வரை தொடர்ந்து படிப்பதை நான் கண்டிருக்கிறேன். தாயார் அன்னம்மா, உடுவில் மகளிர் கல்லூரியில் படித்தவர். பூப்பெய்தியதும் பெரியபிள்ளையாகி விட்டாள் என படிப்பை நிறுத்தும் அக்கால வழக்கப்படி அவரது படிப்பு நின்று போனது. அவர் நிறையக் கதைகளைத் தெரிந்து வைத்திருந்தார். சாப்பிடும் போதும், படுக்கைக்குச் செல்லும் போதும் கதைகளைக் கூறுவார். பெரிய எழுத்துப் பாரதக்கதை நான்கு புத்தகங்களும் 16 ரூபா தான். பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதையும் இருந்தது. இவற்றை எனது சதோரிகள் படித்து எனக்கும் கூறுவார்கள். அப்படித்தான் வாசிக்கும் பழக்கம் என்னில் தொற்றிக் கொண்டது. வாசிப்பில் இருந்த ஆர்வமே இன்றளவும் என்னைத் தேடவும், தேடிய விடயங்களை ஞாபகத்தில் வைத்திருந்து மற்றவர்களுக்குச் சொல்லவும் வாய்ப்பளித்திருக்கிறது. எனது குடும்பமே அதற்கு அடிப்படையாக இருந்தது.

*கே: உங்களது பிறப்பு, ஆரம்பக் கல்வி பற்றிக் கூறுங்கள்?*

*ப:* நான் 1928 ஆண்டு ஒக்ரோபர் 30 ஆம் திகதி பிறந்தேன். எனது தந்தையார் இருதார மணம் முடித்தவர். நான் முதல் தாரத்தின் ஏழு பிள்ளைகளில் கடைக்குட்டி. வீட்டில் சகோதரிகளுக்கு நான் செல்லப் பிள்ளையாக இருந்தேன்.

ஆரம்பக் கல்வியை நாரந்தனை ஸ்ரீ கணேசா வித்தியாசாலையில் பெற்றேன். பாடசாலையில் சேர்ந்ததும் ஒரு சுவையான சம்பவம் தான். அந்தக் காலத்தில் சில பிள்ளைகளைச் சேர்த்து ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிப்பார்கள். பிள்ளைகள் சேர்ந்த எண்ணிக்கைக்கு ஏற்பத்தான் ஆசிரியர்களுக்கு



சம்பளம் கிடைத்தது. ஒரு நாள் பக்கத்து வீட்டுப் பையன் ''வாத்தியார் உடனே வரட்டாம்'' என்று கூறி என்னைப் பாடசாலைக்கு அழைத்துச் சென்றான். அது தான் நான் பாடசாலையில் சேர்ந்த நாள். நல்ல நாள் என்று எதுவும் பார்க்கவில்லை. மண்டைதீவு மாணிக்கம் அவர்கள் அதிபராக இருந்தார். அவரது மனைவி கெங்கமுத்து அவர்கள் தான் எனது ஆசிரியர். நான் நான்காம்

சாலையில் ஆங்கிலமொழி மூலம் கற்பதற்காகச் சேர்ந்தேன். அங்கே செல்வி பொன்னம்மா அருளம்பலம் (திருமதி குலசேகரம்) ஆங்கிலம் கற்பித்தார். அவர் கொழும்பு ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் ஆசிரிய பயிற்சி பெற்றவர்வார். முன்னாள் பிரதமர் தஹநாயக்கவும் அவருடன் ஒன்றாகப் பயிற்சி பெற்றிருந்தார். ஆங்கில இலக்கியத்தை நயத்துடன் கற்பிப்பதில் அவர் தேர்ந்தவர். ஆறாம் வகுப்பு வரை இங்கே அவரிடம் படித்தேன். ஏழாம் வகுப்பில் கரம்பன் சண்முகநாத வித்தியாசாலைக்குப் படிக்கச் சென்றேன். அங்கு அதிபராக பொ. இரகுபதி அவர்கள் இருந்தார். நான் கனிஷ்ட தராதரப் பத்திர வகுப்பில் படித்துக் கொண்டிருந்த போது, செல்வி அருளம்பலம் அதிபர் பதவியேற்று அங்கு வந்தார்.

**இவர்கள் எங்கள் முத்தான முதுசொம்கள்**

எமக்கு அவரே ஆங்கிலமும் கற்பித்தார்.

அதிபர் கடமைச் சுமை அதிகமாக இருந்ததால் பாடசாலை நேரங்களில் அவரால் கற்பிக்க முடியவில்லை. எனவே, இரவு வேளைகளில் அவர் ஆங்கிலத்தைத் தனது வீட்டில் வைத்துச் சொல்லித் தந்தார். சில வேளைகளில் இரவு 12 மணி வரை கூட எமக்குப் படிப்பிப்பார்.

*கேள்வி: அன்றைய சூழலில் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவைக்கு நல்ல உதாரணத்தை நீங்கள் கூறியிருந்தீர்கள். பாடசாலைக்கான மாணவர்களது கடமைகள் எவ்வாறிருந்தன?*

*ப:* கரம்பன் சண்முகநாத வித்தியாசாலையை நிறுவியவர் தம்பையா அவர்

இது நடந்தகாலம் 1918 முதல் 1921 வரையான காலப்பகுதியாகும். பாடசாலையின் வேலி அடைப்பது முதல் எல்லாப் பணிகளிலும் மாணவர்கள் ஈடுபட்டனர். தமது ஊர்ப்பள்ளி என்ற பற்று பிள்ளைகளிடத்திலும் பெற்றோரிடத்திலும் இருந்தது.

*கே: வீடு, பாடசாலைக்குப் புறம்பாக உங்களது வாசிப்புக்குத் தீனி போட்ட இடங்கள் வேறேதும் உண்டா?*

*ப:* நான் சிரேஷ்ட தராதர பத்திர வகுப்பில் படிப்பதற்காக ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியில் சேர்ந்தேன். அங்கே விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராக வீ.அரசன் அவர்கள் இருந்தார்கள். அவர் நிறைய வாசிப்பார். எனக்கும் வாசிக்கக்கூடிய நூல்களைப் பற்றிக் கூறி ஊக்கப்படுத்தினார். காரம்பன் சண்முகநாத வித்தியாசாலையில் வ.நவரத்தினம், வோ. சிவபாதசுந்தரம், ஏ.திருநீலகண்டன், முதலானோர் ஊர்காவற்துறை நூலக இயக்கம் என்ற பெயரில் 1000 நூல்களைச் சேர்த்து ஒரு நூலகத்தை ஆரம்பித்தனர். அதுவும் எனது வாசிப்புக்குத் தீனி போட்டது.

அக்காலகட்டத்தில் யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலுக்கு அண்மையில் ஒரு நூலகமிருந்தது. யாழ்ப்பாணம் வரும் வேளைகளில் அங்கு சென்று சஞ்சிகைகள் படிப்பேன். தந்தையார் கடலை வாங்குவதற்கு 5 சதம் தந்தால் நான் கடலை வாங்க மாட்டேன். அந்தப் பணத்தைச் சேர்த்து ஏதாவதொரு புத்தகம் வாங்குவேன். கோவில் திருவிழாக்களிலும் புத்தகக் கடைக்காரர் புத்தகங்களைக் கொண்டு வந்து விற்பார்கள். 10, 15 ரூபா பெறுமதியான புத்தகங்களை லொத்தரில் குலுக்கி விற்பார்கள். 3 சதம் ஒரு ரிக்கற். அப்படி லொத்தரில் காசு செலவழித்தும் புத்தகங்கள் வாங்கியிருக்கிறேன். கன்னாதிட்டி நூலகத்திற்குச் சென்று நூல்களைப் படித்திருக்கிறேன். ஒரு கட்டத்தில் என்னிடம் கணிசமான அளவு நூல்கள் சேர்ந்தன. ஒரு பெட்டிக்குள் அடுக்கி கலண்டரில் இருந்த இலக்கங்களை வெட்டி ஒட்டி ஒரு பதிவேட்டையும் பேணினேன்.

*கே: உங்களிடம் நூல்கள் சேர்ந்த நிலையில் மற்றவர்களுக்கு வாசிக்கக் கொடுத்தீர்களா?*

*ப:* ஆம். நண்பர்களுக்கு வாசிக்கக் கொடுப்பேன். அவர்களிடமிருந்தும் பெற்று வாசிப்பேன். என்னிடமிருந்த நூல்களோடு

## பள்ளிக்கூட வேலிகளை மாணவர்களே அடைத்த காலம் அது
## கடலை வாங்குவதற்குத் தந்த பணத்தில் சஞ்சிகைகள் வாங்கி நூல்நிலையம் நடத்தினோம்

வகுப்பு படிக்கும் போது தடக்கல் இன்றி வாசிப்பேன். ஏழாம் வகுப்புக்கு 'பாண்டவர் பாலலீலை' என்றொரு புனைப்பாட நூல் இருந்தது. நான்காம் வகுப்பு மாணவனான என்னை அதிபர் அழைத்து ஏழாம் வகுப்பு மாணவர்களுக்கு பாண்டவர் பாலலீலையை வாசிக்கச் செய்வித்தார். இந்தச்

**நேர்காணல்: எஸ்.ஸ்ரீகுமரன்**

சம்பவம் வாசிப்பின் பால் மேலும் ஆர்வத்தை அளித்தது. மாணிக்கம் அவர்கள் பதுளைக்கு மாற்றம் பெற்றுச் சென்ற பின்னர் கிறீஸ்தவ மதத்தைத் தழுவிக் கொண்ட அவரது தமையனான அன்ட்ரூ என்பவர் சிறிது காலம் அதிபராக இருந்தார். பின்னர் பொன்னுத்துரைப் பண்டிதர் அதிபரானார். யாழ். பல்கலைக்கழக துணைவேந்தராக இருந்த பொ.பாலசுந்தரம் பிள்ளையின் தந்தையாரே அவராவார்.

1938 இல் யாழ்ப்பாணம் சேணியர் தெரு சன்மார்க்க போதனா துவிபாஷா பாட

களாவார். அவர் பின்னர் மகாதேவ சுவாமிகள் என்ற பெயருடன் துறவு பூண்டு, சமாதியடைந்து விட்டார். அவர் பாடசாலைக்குப் பிடியரிசி சேர்ப்பித்தார். இதற்கென பனையோலையால் குட்டான்கள் இழைக்கப்பட்டு ஊரிலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் விநியோகிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு வீட்டிலும் அங்குள்ள உறுப்பினர்களுக்கு மேலதிகமாக ஒருவர் உள்ளாரென்று கருதி, அதாவது மேலுமொரு பிள்ளை உள்ளதென்று கருதி ஒவ்வொரு நாளும் சமைக்கும் போது அரிசியினைக் குட்டானுள் போட்டு வைப்பார்கள். மாதத்தில் ஒரு முறை மாணவர்கள் வீடு வீடாகச் சென்று பிடியரிசி சேர்த்து வருவார்கள்.

ஊர்காவற்றுறை நாடாளுமன்ற உறுப்பினராயிருந்த நவரத்தினம், வைத்திய கலாநிதி வ. ஏகாம்பரம், ஏ.திருநீலகண்டன் ஆகியோர் அப்போது இப்பணியில் ஈடுபட்டனர். மாதாந்தம் சேரும் பிடியரிசியை விற்று வரும் பணத்தில் தான் ஆசிரியர்களுக்கான சம்பளம் வழங்கப்பட்டது.

ஒரு நூலகத்தை ஆரம்பித்தாலென்ன என்ற எண்ணம் ஏற்பட்டது. நண்பர்கள் சிலரையும் இணைத்து 'நாரந்தனை இளைஞர் சங்கம்' என்ற பெயரில் ஒரு சனசமூக நிலையத்தை ஆரம்பித்தோம். உள்ளூர் பத்திரிகை, சஞ்சிகைகளையும் வாங்கி வைத்தோம். அப்போது இந்தியாவிலிருந்து சந்தா மூலம் நேரடியாகப் புத்தகங்களை வாங்க முடிந்தது. ஒரு வருடத்துக்குள்ளேயே ஆனந்தவிகடன், கல்கி, கிராம ஊழியன் உள்ளிட்ட 23 சஞ்சிகைகளைத் தபால் மூலம் பெற்று, வாசிக்க வைத்தோம்.

சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்பில் படிக்கும் போதே இச்சங்கத்தை அமைத்துத் தீவிரமாகச் செயற்பட்டோம். இந்த நிலையில் பரீட்சையில் சித்தியடையத் தவறினேன். வாசிகசாலை வேலையால் தான் சித்தி பெறத் தவறி விட்டதாகப் பெற்றோரின் கண்டிப்புக்கும் ஆளானேன். பல இலக்கிய கர்த்தாக்களுடன் தொடர்பு கொள்ள நாரந்தனை இளைஞர் சங்கம் வழியேற்படுத்தித் தந்தது. (வளரும்)



# பழைமையென்று ஒதுக்காமல் தரத்தையும் கலைநயத்தையும் இனங்காண இளைய சந்ததி முன்வரவேண்டும்

பொழுதுபோக்குகள் மனதுக்கு மகிழ்வையூட்டுவதோடு பயனுள்ள செயற்பாடுகளையும் நிகழ்த்த வல்லவை. மனிதர்களின் ரசனை வேறுபாட்டைப் பொறுத்து அவர்களுக்கிடையேயான பொழுதுபோக்கு முறைகளும் மாறுபட்டே காணப்படும். அவற்றுள் தனித்துவமாகத் தெரியும் பொழுதுபோக்கு முயற்சிகள் பிறரின் பாராட்டுதல்களையும், ஆச்சரியப் பார்வைகளையும் பெறத்தவறுவதேயில்லை. வட்டுக்கோட்டை, மூளாய் வீதியைச் சேர்ந்த கந்தையா கதிரவேலையாஎன்ற 74வயது முதியவரின்பொழுதுபோக்கு 'கிராமபோனில்' இசைத்தட்டுக்களை சுழலவிட்டு பாடல்களைக் கேட்டு மகிழ்வது. அத்தோடு 'பெண்டுலம்' ரக கடிகாரங்களையும் திருத்துவதில் இவர் கெட்டிக்காரர். வயதால் முதிர்ந்தாலும் மனதாலும் உடலாலும் இன்றைக்கும் இளைஞனாகத் துடிப்போடு செயற்படும் இவரை உதயன் வாசகர்களுக்காக நாம் கண்ட நேர்காணல் இது.

*கேள்வி:* இன்றைய இளைஞர்களுக்கு கிறாமபோன் என்பது ஒரு வினோதமான பொருள். இளையதலைமுறையினரில் பலர் கிறாமபோன் கருவியைப் பார்த்தேயறியார். இந்நிலையில் இன்றளவும் கிறாமபோன் கருவியை இயங்கக்கூடிய நிலையை உங்களால் எப்படி பேணமுடிகின்றது?

*பதில்:* அடிப்படையில் நான் ஒரு மெக்கானிக். [illegible] ஆச்சரியமளிக்கக்கூடிய பொருள்கள் மீது எனக்கு இயல்பாகவே ஒருவித விருப்பிருந்தது. எனவே தன்னுடைய ஒலியின் மூலம் கேட்போரையெல்லாம் கவர்ந்திழுக்கும் கிறாமபோன் கருவிமீது ஒருவித மோகம் எனக்கு ஏற்பட்டதில் எவ்வித ஆச்சரியமுமில்லை. கிறாமபோன் எமது பகுதியில் புழக்கத்தில் இருந்த காலப்பகுதியிலேயே அக்கருவிமீது பித்துப்பிடித்தவன் போலிருந்தேன். புதிய இசைத்தட்டுக்கள் வெளியானதும் அவற்றைத் தேடிப்பிடித்து வாங்குவேன். இசைத்தட்டுக்களை நாங்கள் 'றெக்கோட்' என்று அழைத்தோம். இதுதவிர விதம்விதமான

**நேர்காணல் ஔண்யன்**

கிறாமபோன் கருவிகளை ஆச்சரியத்தோடு பார்ப்பேன். கிறாமபோன் கருவிபற்றிய விளம் [illegible] விருப்பத்தோடு படிப்பேன். [illegible] கிறாமபோன் கருவி சிக்கலான பொறிமுறையைக் கொண்டதல்ல. அதன் உதிரிப்பாகங்களின் செயற்பாட்டை சரிவர அறிந்துகொண்டாலே அதனை திருத்தும் முறையையும் இயல்பாகவே உணரமுடியும். எனவேதான் இன்றளவும் நன்றாக இயங்கக்கூடிய வகையில் என்னிடமுள்ள கிறாமபோன் கருவி இசையைப் பரப்பி வருகின்றது.

*கே:* கிறாமபோன் கருவி இயங்கும் விதம் பற்றி ஓரளவுக்கு விளக்கமுடியுமா?

*ப:* கிறாமபோன் கருவி ஒலியைப் பரப்பும் தன்மை கொண்டது. அதில் றெக்கோட்டைப் பொருத்தும் பகுதி வட்டவடிவமாகக் காணப்படும். அதிலே சரிவர றெக்கோட்டை வைத்துவிட்டு அதன்மீது ஊசியொன்றை இணைத்துள்ள கருவியை பொருத்த வேண்டும். அக்கருவியின்மேல் ஒலிபெருக்கியொன்று காணப்படும். இதன்பின்னர் றெக்கோட்டைச் சுழலச் செய்வதற்கான விசையினை உண்டு பண்ண சாவியொன்றின் மூலம் 'வைன்' (ஆர்முடுகல்) கொடுக்கவேண்டும்.

(20 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## Jaffna College Institute of Technology
Vaddukoddai, Jaffna

**புதிய பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கவும்**

**Computer Diploma Courses** (1 Year Full Time)
- Diploma in Computer Programming & Date Processing
- Diploma in Civil Draughtsmanship

**Certificate Course**
- Auto CAD (Includes 3D Drawing) (3 Months Part Time)

**Computer Certificate Courses**
HTML (2months Part time)
Maya (3Months Part time)

அரச "Tertiary and Vocational Education Commission" ஆல் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நெறிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலதிக விவரங்களுக்கு:
Director, Jaffna College Institute of Technology,
Vaddukoddai, Jaffna, Sri Lanka.
Tel No: 060 2213139/ 021 2228275

JCIT JCIT

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## காசிநாதர் பிரசாத்

தோற்றம்: 24*11*1983
மறைவு: 24*06*2008

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (13.07.2009) திங்கட்கிழமை எமது இல்லத்தில் மு.ப 10 மணியளவில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கரணவாய் மத்தி,
கரவெட்டி. (86932) குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



## க.கதிரவேற்பிள்ளை

பருத்தித்துறை, புலோலி தெற்கு, பல்லப்பையை பிறப்பிடமாகக் கொண்டவரும் இலங்கை தபால் திணைக்கள தலைமையக பிரதம லிகிதராகப் பணியாற்றிய கணபதிப்பிள்ளை கதிரவேற்பிள்ளை 08-07-2009 அன்று கனடா ரொறன்ரோவில் காலமாகிவிட்டார்.

அன்னார் இராசேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சிவகாமி தம்பதிகளின் அன்புமகனும் காலஞ்சென்ற புற்றளை வித்தியாலயம் முன்னாள் தலைமை ஆசிரியர் சிதம்பரப்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற பொன்னம்மா வேலாயுதம், நல்லையா (ஆசிரியர்) ஆகியோரின் அன்புத்தம்பியும் மனோகரன் (கனடா), பிரபாகரன் (கனடா), காலஞ்சென்ற பாமதி, சுதாகரன்(கொழும்பு) மற்றும் கருணாகரன்(கனடா), மாலதி (லண்டன்), வானதி(கனடா), பாரதி (கனடா) ஆகியோரின் அன்பு தந்தையும் மகேந்திரராஜா, பிரியங்கா, ராஜினி, சுமதி, ஜெயானந்தன், பிரதீப், நரேஸ் ஆகியோரின் அன்பு மாமனும், சியாமளா, சங்கர், சுகாசினி, அஜந்தா, துர்க்கா, சிந்துஜா, ஜெயந்தன், ஆதவன், துளசி, ஜனனி, பிரியா, சூரியா, சந்துரு ஆகியோரின் அன்புப் பேரனும் பரமேஸ்வரி, பாலகோபாலன், சிவகணேசன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12-07-2009) ஞாயிற்றுக் கிழமை கனடா ரொறன்ரோவில் தகனம் செய்யப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.

தகவல்:
சுதாகரன் (மகன்), தெகிவளை. 0777 638 489
இராசேஸ்வரி 001 905 6861472,
மனோகரன் 001 416 7244233 (கனடா).

## HND - மருத்துவ டிப்ளோமா

FPEE English Coures

தாதியம்
எம்எல்ரி
மருந்தகம்
உடற்கூறுசிகிச்சை
எக்ஸ்-றே தொழில்நுட்பம்

PATHE HAND கற்கைநெறிகள் ஆங்கிலத்தில் நடத்தப்படுகின்றன. உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்டிருப்பது. இரண்டாம் ஆண்டு பட்டப் படிப்புக்கும் இது உத்தரவாதமளிக்கின்றது.

ஐக்கிய ராஜ்யம், மலேஷியா, இந்தியா, பெலாரஸ், அவுஸ்திரேலிய நாடுகளில் பட்டம் பெறலாம்

PATHE ACADEMY

## மணமக்கள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 28 வயது, ரேவதி நட்சத்திரம், M.Sc. in Economics, German Citizen அழகிய பெண்ணிற்கு மணமகன் தேவை. செவ்வாய்க் குற்றம் இல்லை. மூன்று சுற்று கிரக பாவம் 35. இது ஒரு திருமண சேவை (www. thaalee. com) Profile Number 5475
போன்: 2520619

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 26 வயது, பூசம் நட்சத்திரம், MBBS - UK, London Citizen அழகிய பெண்ணிற்கு மணமகன் தேவை. செவ்வாய்க் குற்றம் இல்லை. மூன்று சுற்று கிரகபாவம் 39. இது ஒரு திருமண சேவை (www. thaalee.com) Profile Number 5743, போன்: 2523127

யாழ். இந்து கௌரவ குடும்பம், 35 வயது, பரணி நட்சத்திரம், NVQ Leval -2, Trading Manager, UK PR மணமகனுக்கு மணப்பெண் தேவை. 7இல் செவ்வாய் உள்ளது. மூன்று சுற்று கிரக பாவம் 72. இது ஒரு திருமண சேவை (www. thaalee. com) Profile Number 5787, போன்: 2520619

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 32 வயது, சதய நட்சத்திரம் B.Sc, M.BA, USA Citizen மணமகனுக்கு மணப்பெண் தேவை. செவ்வாய்க் குற்றம் இல்லை. மூன்று சுற்று கிரக பாவம் - 33. இது ஒருதிருமணசேவை (www. thaalee. com) Profile Number 5055, போன்: 2520619

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 29 வயது, பூரட்டாதி நட்சத்திரம் System Engineer, Canada Citizen மணமகனுக்கு மணப்பெண் தேவை. 7இல் செவ்வாய் உள்ளது. மூன்று சுற்று கிரக பாவம் - 85. இது ஒருதிருமணசேவை (www. thaalee. com) Profile Number 3662, போன்: 2523127

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 33 வயது, சித்திரை நட்சத்திரம் Supervisor ஆக இருக்கும் Canada Citizen மணமகனுக்கு மணப்பெண் தேவை. 12இல் செவ்வாய் உள்ளது. சீதனம் தேவையில்லை, மூன்று சுற்று கிரக பாவம் - 40. இது ஒரு திருமண சேவை (www. thaalee. com) Profile Number 5506, போன்: 2523127

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 38 வயது, திருவாதிரை நட்சத்திரம் Bachelors Of Science Canada Citizen மணமகனுக்கு மணப்பெண் தேவை. செவ்வாய்க் குற்றம் இல்லை. மூன்று சுற்று கிரக பாவம் - 36. இது ஒருதிருமணசேவை (www. thaalee. com) Profile Number 4001, போன்: 2520619

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 33 வயது, ஆயிலிய நட்சத்திரம் Software Developer ஆக இருக்கும் Canada Citizen மணமகனுக்கு மணப்பெண் தேவை. 1இல் செவ்வாய் உள்ளது. மூன்று சுற்று கிரக பாவம் - 34. இது ஒரு திருமண சேவை (www. thaalee. com) Profile Number 5378, போன்: 2520619

## நெற்காணிகளின் விவரம் சேகரிப்பு

வேலணை, ஜூலை 12

வேலணை, சரவணைப் பகுதிகளுக்கு உட்பட்ட விவசாய சம்மேளனங்கள் இப்பகுதிக்குட்பட்ட நெற்காணிகளின் விவரங்களை திரட்ட உள்ளன.

நெற்காணிகளின் உரிமையாளர்கள் எங்கிருந்தாலும் உடனடியாக விவரங்களை சம்பந்தப்பட்ட விவசாய சம்மேளனங்களிடம் பதிந்து கொள்ளுமாறு [illegible]

(203-160)

## பழைமையென்று ஒதுக்காமல்....

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

அதன் பின்னர் ஊசியை வைத்ததும் றெக் கோட் சுழல ஆரம்பிக்கும். றெக்கோட்டிலுள்ள ஒலிப் பதிவுத் தடங்களில் சுற்றும் ஊசியின் அதிர்வு ஒலிவடிவமாக மாற்றம் பெற்று ஒலி பெருக்கியினூடாக இன்னிசைப் பாடலாக வெளிப்படும். ஒரு றெக்கோட்டின் ஒரு பக்கத்தில் ஒரு பாடல் மட்டுமே பதிவு செய்யப்படும். சிலவேளை க ளில் பாடலின் நீளம் அதிகரித்தால் றெக்கோட்டின் இரண்டு பக்கங்களிலும் ஒரு பாடலே இருக்கும். இதனால் ஒரு படத்தில் வருகின்ற பாடல்கள் அத்தனையையும் கேட்பதற்கு நாலைந்து றெக்கோட்டுகளை வாங்கவேண்டும். அந்தக் காலத்தில் என் கை யில் புழங்கும் காசுகளை றெக்கோட் வாங்கவே அதிகம் செல வழித்திருக்கிறேன்.

*கே:* வானொலி, தொலைக்காட்சி என்பவற்றின் வருகையோடு கிறாமபோனின் பாவனை மெல்லக் குறைந்து, ஏறக்குறைய கடந்த 25 வருடங்களாக முற்றாகவே மறைந்து விட்டது. இந்நிலையில் கிறாமபோனுக்கான உதிரிப்பாகங்களை எவ்விதம் பெற்றுக் கொள்கிறீர்கள்.

*ப:* கிறாமபோனின் உதிரிப்பாகங்கள் இலகுவில் பழுதடையக் கூடியவையல்ல. ஆயினும் பாடல்களைக் கேட்பதற்கு மிக முக்கியமான ஊசி அதிகளவில் தேவைப்படும். ஏனெனில் ஒரு ஊசியை வைத்து ஒரு றெக்கோட்டை மாத்திரமே கேட்கமுடியும். அத்துடன் ஊசியின் ஆயுள் முடிந்து விடும். கிறாமபோனின் சகாப்தம் முடிந்து விட்ட சூழலில் எவரும் புதிதாக இதற்குரிய ஊசிகளை தயாரிப்ப தில்லை. ஆகவே முன் னைய காலங்களில் தயாரிக்கப்பட்டு எஞ்சியுள்ள ஊசிகளையே தேடிப்பிடித்து வாங்கிப் பயன்படுத்தி வருகிறேன். எனினும் எனக்கு அண்மையில் கிடைத்த ஒரு தகவலின்படி இங்கிலாந்தில் கிறாமபோன் தயாரிக்கும் நிறுவனமொன்றில் இன்னமும் ஊசிகள் விற்கப்பட்டு வருகின்றன. அத்தோடு இந்த ஊசிகள் ஒவ்வொன்றின் மூலமும் 30 றெக்கோட்களைக் கேட்க முடியுமென்றும் கூறுகிறார்கள். இது தவிர கிறாமபோனைப் பராம ரிப்பதில் எவ்வித சிரமங்களும் இல்லை.

*கே:* கிறாமபோன் கேட்பது தவிர உங்களுடைய பிரதான தொழிலாக பெண்டுலம் கடிகாரங்களைத் திருத்துவதைக் கொண்டுள்ளீர் கள். அதுபற்றிக் கூறமுடியுமா?

*ப:* நவீனத்துவத்தின் போக்கு விரவியுள்ள இக்காலத்தில் பழமையான பொருள் களை ஒதுக்கும்போக்கே காணப்படுகின் றது. இதனால் ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்து வீடுகளின் ஆடம்பரச் சின்னமாகவும் கௌர வத்தின் குறியீடாகவும் விளங்கிய பெண்டுலம் கடிகாரங்கள் ஒதுக்கப்பட்டு பற்றறியில் இயங்கும் நவீன கடிகாரங்கள் அந்த இடத்தைப் பிடித்துவிட்டன. எனினும் தரமும் அழகும் வாய்ந்த பெண்டுலம் கடிகாரங் களை இன்றும் ஒருசிலர் ஆசையோடு பயன் படுத்தியே வருகிறார்கள். ஆயினும் அத் தகைய கடிகாரங்கள் பழுதடைந்தால் அதனைத் திருத்துபவர்கள் வெகு குறைவு. இந்நிலையில் என்னால் மிகச் சிறப்பாக பெண்டு லம் கடிகாரங்களை திருத்த முடியும் என்பதால் பல இடங்களிலிருந்தும் இத்தகைய கடிகாரங்களைத் திருத்துவதற்கு என்னை நாடி பலர் வந்துகொண்டிருக்கிறார்கள்.

*கே:* காலையில் பெண்டுலம் கடிகாரம் திருத்துதல் மாலையில் கிறாமபோனில் பாடல்களைக் கேட்டு ரசித்தல் என்று மிக பயனுள்ள முறையில் வாழ்க்கையை நகர்த்திச் செல்கிறீர்கள். இன்றைக்கும் உடலாலும் மனதாலும் இளமையாக இருக்கும் உங்களைப்போல எமது இளைய சமுதாயமும் மாற என்ன செய்யலாம்?

*ப:* எப்போதும் மனதுக்குப் பிடித்தமான வற்றைச் செய்துவந்தால் எவ்வித சிக்கல்களுமின்றி இயல்பான வகையில் வாழ்க்கையை அதனோட்டத்தில் கொண்டுசெல்ல முடியும். எனக்குப் பிடித்தமானவற்றை மட்டுமே நான் சீராகச் செய்து வருவதால் இன்றைக்கும் துடிப்போடு இயங்க முடிகிறது. மேலும் பழைமையென்று எதையும் ஒதுக்காமல் அதிலுள்ள தரத்தையும் கலை நயத்தையும் இனம்காண எமது இளைய சந்ததி முன்வரவேண்டும். இன்றைக்கு இறுவட்டு முதல் நவீன இலத்திரனியல் சாத னங்களூடாக இசையை ரசிக்க முடிகிறது. ஆயினும் அவற்றினூடாக வெளிவரும் இசையை விடவும் கிறாமபோனூடாக பரவும் இசை ஆயிரம் மடங்கு மேலானது; துல்லியமானது; கேட்போர் மனங்களை மயக்கவல்லது. *

## மரண அறிவித்தல்

### தம்பிமுத்து கந்தசாமி (வன்னியசிங்கம்)



கடந்த 05.07.2009 ஞாயிற்றுக்கிழமை காலஞ்சென்ற அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.07.2009) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் காந்தாளம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி. (86922)
தகவல்:
தனலட்சுமி (மனைவி).

## உயர் கல்வி

## இந்தியா, பங்களாதேஷ், சிங்கப்பூர் மற்றும் யு.கேயில்

★ மருந்தியல் ★ பொறியியல்
★ முகாமைத்துவம் ★ வாழ்வியல் விஞ்ஞானம்

PhD, MSc, MBA, MBBS, Advance Diploma, Diploma, Para Medical, Pre-University

O/L, A/L மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்
இலகுவான கட்டணத்திட்டம்/ கடன் வசதிகளும் உண்டு

Inquires: Institute Of Vocational Studies (Pvt) Ltd.
No. 476, Kandy Road, Dalugama, Kelaniya, Sri Lanka.
Tel: 0777444500 / 0773401290 / 5757276 / 4925640 / 2910323
E-mail: ivsltd@hotmail.com Web: www.ivstudies.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ர்கள் என்ன சொல்கிறார்கள்?
# வர்களது பதில்கள் இங்கே......

| | | | | |
|---|---|---|---|---|
| 6)வடக்கில் பல்வேறு கைத்தொழில் க நிலையங்கள் நிறுவுவது பற் பேச்சு அடிபடுகிறது. வடக்கில் ற்சாலைகள் நிறுவப்படும் பட் தமிழர்களின் பிரதேசம் பாதிக் க் கூடிய வாய்ப்பு உள்ளது சிலர் கருத்துக் கூறுகிறார்கள். றி என்ன கூறுகிறீர்கள்? *(ணம்: சீமெந்துத் தொழிற்சாலை)* | (07)யுத்தம் முடிந்து விட்டது. ஆனால், வலி. வடக்கு மக்கள் இன்ன மும் மீளக்குடியமர்த் தப்படவில்லை. வலி. வடக்கு மக்கள் தமது பூர் வீகப் பிரதேசத்திற்கு மீண்டும்செல்லும்வாய்ப்பு உருவாகுமா? | (08)தமிழ்ப் பிரதே சங்களில் சமூகவிரோ தச் செயல்கள் அதிகரித் துக் காணப்படுகின்றன. இவற்றை நிறுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றீர் கள்? | (09)இலங்கையில் அகிம்சைப் போராட்டம் தோல்வியடைந்த நிலை யிலேயே ஆயுதப் போராட்டம் தோற் றம் பெற்றது. இன்று ஆயுதப் போராட் டமும் தோல்வியைத் தழுவியுள்ளது. இந்த நிலையில் சிங்கள அரசு தமி ழர்களுக்கு ஒரு நியாயபூர்வமான தீர்வை முன்வைக்கும் என நம்புகிறீர் களா? | (10)இலங்கைத் தமிழ் அரசியல் தலைமைத்துவம் வெற்றிடமாகக் காணப்படு வதாக உள்நாட்டிலும் சர்வ தேச மட்டத்திலும் கருத்து நிலவுகிறது. இந்த வெற்றி டத்தை நிரப்ப உங்களால் முடியுமா? எவ்வாறு என விளக்குவீர்களா? |

சனத்தொகையைக் கொண்ட இனத்தைச் சேர்ந்தவர் இந்தியாவின் பிரதமராக வந்துள்ளார். இப்படியான ஒரு நிலை வந்ததால் ஜனாதிபதியின் கூற்றை ஏற்றுக் கொள்ளலாம்.

இப்போதைய சூழலில் இது பொருத்தமற்றது.

பதில் (04): பொருந்தாது. ஒரு காலமும் பொருந்தாது. தலைவரை மக்கள் தான் தெரிவுசெய்ய வேண்டும். மக்கள் தலைவரைத் தெரிவுசெய்தால் தலைவர் சொல்வதை மக்கள் கேட்பர்.

மட்டக்களப்பில் நிர்வாகம் மாறியுள்ளதேயொழிய நிலைமை மாறவில்லை. சிறுபான்மை, பெரும்பான்மை என்ற நிலைமாறாத வரை இது சரி வராது.

பதில் (05): பெரும் பயங்கரமான ஒரு நிலைமையை அரசாண்டும் உருவாக்குகிறது.யுத்தம் முடிந்தால் படை யினர் வீட்டுக்கு அனுப்பப்படவேண்டும். சிறந்த தொழில் நுட்ப வல்லுநர்கள் படையில் உள்ளனர். இவர்கள் அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடுத்தப்படவேண்டும்.

பலவிதமான இராணுவத்தை நாம் கண்டுள்ளோம். இரவில் வந்து அழைத்துச் சுடும் இராணுவம், மக்கள் மீது மனிதாபிமானத்துடன் நடந்துகொள்ளும் இராணுவமெனப் பல இராணுவத்தை நாம் கண்டுள்ளோம். இனி வரும் காலத்தில் வரும் இராணுவம் எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை நாம் இப்போது கூறமுடியாது. இன்று நிலைமை மாறிவருகிறது. பயங்கரவாதம் அழிக்கப்பட்டதற்குப் பொது மக்களின் தியாகங்களும் காரணம். அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் போன்றவர்களின் தியாகமும் காரணம். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களிடையே அன்று இருந்தநிலை மாறிவருகிறது. எனவே இது சுதந்திரநாடு என நாம் பெருமைப்பட முடியாது.

பதில் (06): இது திருமணம் நிச்சயமாக முன்னர் மாப் பிள்ளை தயார் என்ற கதை போலத் தான்.

யாழ்.குடாநாடு சிறிய பிரதேசம். 'பிர்லா' நிறுவனத்துக்கு சிமெந்து ஆலை வழங்கப்பட்டால், குடாநாடு பராக்கிரம சமுத்திரம் போன்ற ஒரு பெரிய உப்புக்குளமாக மாறிவிடும். வெளிவிவகார அமைச்சர் ரோகிதபோகொல்லாகம ஐ.தே.க. ஆட்சியில் கைத்தொழிலமைச்சராக இருந்தபோது ராம்கோ நிறுவனத் தலைவர், ரோகித போகொல்லாகம ஆகியோருடன் சென்று காங்கேசன் சிமெந்து ஆலையைப் பார்வை யிட்டேன், அப்போது ராம்கோ நிறுவனத் தலைவர் தெரிவித்த அபிப்பிராயம் இது.

பதில் (07): தமது மண்ணைத் தெய்வமாக மதித்த மக்கள் இன்று வெயிலுக்குள்போட்டு வறட்டி எடுக்கப்படுகின்றனர். மக்கள் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பிச்செல்லும்போது அவர்கள் விட்டுவிட்டு வந்தவை அப்படியே இருக்க வேண்டும்.

பதில் (08): சமூக விரோதச் செயல்களுடன் மனித உரிமை மீறல்களும் அதிகரித்துள்ளன. எனது தலைமை சிறந்த தலைமை என்று நான் கூறவில்லை. நான் ஒரு காலத்தில் புலிகளை ஆதரித்தவன், அவர்களின் போக்குப் பிடிக்காமையால் மாற்றிக் கொண்டேன்.

துப்பாக்கி வைத்திருப்பவர்களை மக்கள் அடக்க வேண் டும். அடக்க முடியும். நான் எடுத்த நிலைப்பாடு நேர்மை யானவழி, சரியான வழி, நேர்மையும் திறமையும் இணைய வேண்டும். சகல விதமான மனித உரிமை மீறல்களையும் தடுப்பதற்கு 300, 400 தலைவர்கள் தேவை.

பதில் (09): இந்தப் போராட்டம் முடிவடைந்த உடனேயே நாம் அகிம்சை வழியில் தொடர்ந்தும் போராடுவோம் என எச்சரித்தேன். 13 ஆவது திருத்தச்சட்டத்தையே அமுல்படுத்த விடாமல் தடுக்கும் சகபாடிகளைக் கொண்டுள்ள அரசு எமக்கு என்ன தரப்போகிறது. நாம் சாத்வீகமான முறையில் போராட வேண்டும்.

பதில் (10): நிச்சயமாக வெற்றிடம் தான். அந்த வெற்றி டத்தை நிரப்புவதற்குத் தற்காலிகத் தலைவனாக என்னைத் தெரிவு செய்யுங்கள். அப்போதுதான் அடுத்த பொதுத் தேர் தலில் நாம் எமது இலக்கை அடைய முடியும். இளைய தலை முறைத் தலைவர்களை உருவாக்கி அவர்களிடம் நான் தலைமைத்துவத்தைக் கையளிப்பேன்.

************






தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்
**என்.சிறிகாந்தா** சொல்கிறார்

பதில் (01): தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்று பட வேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் தான் 2001ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இன்னமும் வெளியே நின்று கொண்டிருக்கும் ஒரு சில தமிழ்க் கட்சிகளைத் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் கொண்டு வருவதில் எமக்கு எந்தவித தடையும் கிடையாது. ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்பிலும் பதவியில் இருந்து வந்த அரசாங்கங்கள் தொடர்பிலும் இந்த ஒரு சில தமிழ்க் கட்சிகளுடன் எமக்கு மாறுபாடான நிலைப்பாடு இருந்தமை யால் ஒற்றுமை சாத்தியமாகவில்லை. இப்போது கூட இந்தக் கட்சிகள் தமிழ் மக்களுக்கான அரசியல் விடிவு தொடர்பாக எம்முடன் ஓர் இணக்கப்பாட்டிற்கு வரமுடியும்.

இப்போது புலிகள் பற்றிய பிரச்சினை இல்லை. யுத்தம் முடிந்தாலும் யுத்தத்தின் விளைவுகள் எம்மக்களை வாட்டி வதைக்கின்றன. யுத்தத்திற்கு வழிவகுத்த இனப்பிரச்சினை தொடர்ந்து எரிந்து கொண்டி ருக்கிறது. இந்தப் பிரச்சினைகளுக்கு வெகு விரைவாகத் தீர்வு காணவேண்டும்.

அதே நேரத்தில் நாடாளுமன்றத்தில் இடம் கிடைக்காத தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும் சரணாகதி அரசியலையே தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கின்றன. இந்தக் கட்சிகளிலொன்றின் தலைவர் இடைக்கிடை கொஞ்சம் சத்தம் போடுகிறார் அவ்வளவு தான்.

இக் கட்சிகள் அனைத்தும் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு தமிழ் மக்கள் சார்பில் துணிந்து குரல் கொடுக்கத் தயாரென்றால் ஒற்றுமை நிச்சயம் சாத்தியம். முதலில் பணிந்து போகும் மனப்பான்மை மாறவேண்டும். எந்த நிலை யிலும் சுயமரியாதையுள்ள தமிழ்மக்கள் பணிந்து போகமாட் டார்கள் என்பதை இககட்சிகள் உணர்ந்து கொள்ள வேண் டும். அதேவேளை தமிழ்மக்களின் நலன் கருதி ஒரு பரந்த அடிப் படையில் எந்தத் தனிப்பட்ட விடயத்தையும் விட்டுக் கொடுப் பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக உள்ளது.

பதில் (02): இது பழைய குருடி கதவைத் திறவடி என்ற கதை தான். 13வது திருத்தச் சட்டம் என்பது இலங்கை அரசு மாகாண சபை திட்டத்தை அறிமுகப்படுத்திய போது உருவாக்கப்பட்டது. ஆனால் இது வெற்றியளிக்கவில்லை. ஏனெனில் இது ஒரு அரை குறைச்சமையல். எமது மக்களுக்கு அவர்கள் வாழையடி வாழையாக வாழ்ந்து வரும் பிரதேசத்தில் பூரண சுயாட்சி வேண்டும். எனவே தீர்வுத் திட்டம் 13ஆவது திருத்தச்சட்டத்திற்கு அப்பால் செல்வதாக அமையவேண்டும்.

பதில் (03): இலங்கைத்தீவில் வாழும் சகல மக்களும் நாட்டுப்பற்றுள்ளவர்கள் என்றுதான் நாம் கருதுகிறோம். ஒரு சில கும்பல்களும், சுயநலவாதிகளும், அதிகார ஆசைமிக்க சில நவீன அரசியல்வாதிகளும் இதற்கு விதிவிலக்காக இருக்கலாம். எனினும் இக்கட்டத்தில் இலங்கையின் தேசியப் பிரச்சினையான இனப் பிரச்சினையை அணுக முடியாது. வரலாற்று ரீதியாக இங்கு இரு மொழிகள் பேசப்படுகின்றன. பல்வேறு மதங்கள் பின்பற்றப்பட்டு வருகின்றன. இனத்துக்கினம் தனியான கலாசாரங்கள் உள்ளன. இருந்தாலும் இந்த வேற்றுமைகளிலும் ஒற்றுமை காணக் கூடியளவுக்கு இலங்கை மக்கள் வாழ்வில் இலங்கையர் என்ற எண்ணமே இழையோடி நிற்கிறது. ஆகவே பல்லின பல்கலாசார பாரம்பரியங்களைக் கொண்ட நாடுகளில் ஒன்றாகவே இலங்கை இருந்து வருகிறது என்ற உண்மையை எவரும் எந்த விதத்திலும் மறுத்துரைக்கவோ, மழுப்பவோ முடியாது. இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப் பதற்கு முதற்படியாக இந்த உண்மையை ஏற்றுக்கொள்வதற் குப் பொறுப்புள்ள அரசியல்வாதிகள் அனைவரும் முன் வர வேண்டும்.

பதில் (04): உங்களது பணத்தை அல்லது பொருளைக் கத்தி முனையில் பறிக்க முயன்றால் நீங்கள் என்ன செய்வீர் கள்? ஒரு பெண்ணின் கையை ஒருவன் பலவந்தமாகப் பிடித்து இழுத்தால் அவள் என்ன செய்வாள்? உங்களைக் கொல்ல ஒரு வர் முயன்றால் என்ன செய்வீர்கள்? இந்தச் சந்தர்ப்பங் களில் எல்லாம் எதிர்ப்பதைத் தவிர வேறு வழியில்லை. சரணாகதி என்ற பேச்சுக்கே இடமிருக்க முடியாது. சுதந்திரத் திற்குப் பின் கடந்த 60 வருடங்களில் பதவியிலிருந்த சகல அரசுகளும் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி வந்துள்ளன. எமது உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன. எமது மக்கள் மீது வன்முறை ஏவி விடப்பட்டுள்ளது. கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு போன்ற பலாத்கார அடக்குமுறைக்கு எம்மக்கள் ஆளாக்கப்பட்டு வந்துள்ளனர், உயிருக்கு மதிப் பில்லை. எமது வரலாறு திரிக்கப்பட்டு, எமது வாழ்வுரிமை மறுக்கப்படும்போது எதிர்த்து நின்று செயற்படவும் எம்மை நாமே நிலை நிறுத்தவும் வேண்டும். அதனை அரசியல் ரீதியா கச் செய்ய முடியும். அதற்கு எம்மக்களின் ஒற்றுமை தேவை.

பதில் (05): போர் முடிந்துவிட்டது. புலிகள் இயக்கம் அழிந்து விட்டது. இன்னும் எதற்காகப் புதிதாக படைக்கு ஆள்சேர்ப்பு? இங்கே தான் விடயமிருக்கிறது. விவரம் தெரிந்த எவருக்கும் நாம் இதை விளக்கிக்கூற வேண்டியதில்லை. ஆயுத முனை யில் தமிழ்மக்களை தொடர்ந்தும் அடக்கியாள்வதற்காகவே படை வலிமையை மேலும் பெருக்க வேண்டுமென ஆட்சியதிகாரத்திலுள்ளவர்கள் நினைக்கின்றனர். ஆனால் இது எங்களில் சிலருக்கு இன்னும் புரியவில்லை.

பதில் (06): சிமெந்து ஆலைக்கருகே உள்ள பகுதியில் சுண்ணக்கல் எடுப்பதற்காக நிலம் தோண்டப்பட்ட படியால படிப்படியாக கடல்நீர் புகுந்து குடாநாட்டின் புவியியல் தன்மை மாறுபடுகின்றது. 1970லிருந்தே இப் பிரச்சினை பற்றி குரல் எழுப்பப்பட்டு வந்துள்ளது. கண் மூடித்தனமான கைத்தொழில் மயப்படுத்தல் சமூகத்திற்குத் தீங்கு விளைவிக்கும் ஐரோப் பாக் கண்டம் இன்று அதனை அனுபவிக்கத் தொடங்கி விட்டது.

பதில் (08): இதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு. சட்ட ரீதியாக ஆயுதம் வைத்திருப்போரைத் தவிர ஏனையோரிடம் உள்ள ஆயுதங்கள் களையப்பட வேண்டும். இன்று சில இடங்களில் வீதிகளில் அடாவடிக்கோஷ்டிகள் தலைவிரித்தாடுகின்றன. இவர்களனைவரும் ஒடுக்கப்பட வேண்டும். சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டால் இப்பிரச்சினைகள் தீர்ந்து விடும்.

பதில் (09): அகிம்சைப் போராட்டம் தோற்றது என்று நான் ஒருபோதும் சொல்லமாட்டேன். எம்மக்கள் மீது தொடர்ச் சியாக ஏவி விடப்பட்ட அரச பயங்கரவாதத்தின் விளைவாக அப்போது கருக்கொண்டிருந்த ஆயுதப் போராட்டம் மெல்ல விரிவடைந்து எழுச்சி பெற்றது. ஆனால் ஆயுதப் போராட்டத் தில் ஏற்பட்ட விரிசல்கள், தவிர்த்திருக்கப்பட வேண்டிய தப்புகள் தவறுகள் என்பன ஆயுதப் போரையே உடைத்து உருக்குலைத்து விட்டன. ஆனால் அகிம்சைப் போர், ஆயுதப் போர் இரண்டுக்கும் காரணமான இனப் பிரச்சினை தீர்க்கப் படாத பிரச்சினையாக இன்றும் தொடர்ந்து கொண்டிருக் கிறது. நீதியான உரிய தீர்வை அரசு முன் வைத்தால் பிரச் சினை தீர்ந்து விடும். அதற்கு அரசு தயாரா? ஜனாதிபதி தயாரா? இதுதான் இப்போதுள்ள கேள்வி.

பதில் (10): அப்படிச் சொல்பவர்கள் எந்த உலகத்திலிருந்து பேசுகிறார்களோ தெரியவில்லை. பிரபாகரனும் புலிகளும் ஆயுத வழியில் செயற்பட்டதை அனைவரும் அறிவர். ஆனால், ஜனநாயகத் தலைமைத்துவமும் இருக்கத்தான் செய்கிறது. 2001 இலும், 2004 இலும் நடைபெற்ற தேர்தல் களில் அமோக வெற்றியீட்டிய தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு ஜனநாயகத் தலைமையா? இல்லையா? பிரபாவுடன் எல்லாம் முடிந்து விட்டதாகச் சிலர் நினைக்கிறார்கள் அல்லது தப்புக்கணக்குப் போடுகிறார்கள். ஆனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எந்தச் சவாலையும் எதிர்கொள்ளும்.

*****************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள் தேவை

வெங்கடேஸ்வரா சைக்கிள் கடைக்கு கணக்காளர், விற்பனையாளர், சிட்டை எழுதுநர் உடன் தேவை.

*தொடர்பு:* **வெங்கடேஸ்வரா**
*இல: 125A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
T.P: 021 222 8306

(சி/559477)

## கண்ணீர் அஞ்சலி



இலங்கை வங்கி சுன்னாகம் மேற்தரக் கிளை முகாமையாளர் திரு.எஸ்.பி.அரசகுமார் அவர்களின்அன்புச் சகோதரர்

**சின்னத்துரை டொமினிக் அரசேந்திரன் (ஜோய்)**

அவர்களின் மறைவால் துயரடைந்துள்ள அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந் தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு எமது கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கை யாக்குகின்றோம்.

*யாழ்.வீதி,*
*மானிப்பாய்.*

சுந்தர்சன் உரிமையாளரும்,ஊழியர்களும். (8697)

## கண்ணீர் அஞ்சலி



*எமது பாடசாலையின் சங்கீத ஆசிரியை திருமதி நா. சுகிர்தலிங்கம் அவர்களின் அன்புத் தந்தை*

**வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம்**

அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,மாணவர்கள்,**
**யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
**தவமணி சண்முகம்பிள்ளை**
திதி:12.07.2009 அபரபக்க பஞ்சமி

மலர்வு:02-10-1930
உதிர்வு:12-06-2009

**எம்மைக் கண்ணில் நீர்சொரிய வைத்து விண்ணை உறைவிடமாய் ஆக்கிக் கொண்டீர் உம் இழப்பால் வாடும் நாம் உமது ஆத்மா சாந்திபெற அரன் பாதம் பணிகின்றோம்.**

இன்று (12.07.2009) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் இடம் பெறவுள்ள அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறவுள்ள மதியபோசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்போடு வேண்டிக் கொள்கிறோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். (சி/559497) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

'பண்ணிசைச் செல்வர்' வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

(முன்னாள் கணக்காளர், S.T.A. றசாக் நகைமாளிகை)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கொட்டடி, யாழ்ப் பாணத்தையும் கெனடி வீதி, திருநெல் வேலியையும் வதிவிடமாகக் கொண்ட தி.வே. பாலசுப்பிரமணியம் நேற்று முன்தினம் (10.07.2009) வெள்ளிக்கிழமை சிவபதம டைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.07.2009) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
**பா.பத்மநாதன்** *(மகன்),*
**கு.சரவணநாதன்** *(மருமகன்).*

*கெனடி லேன், முடமாவடி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*

### திருமதி சிவக்கொழுந்து பாலேஸ்வரி



திருநெல்வேலி கிழக்கு, கெனடி லேனைப் பிறப்பிடமாகவும் தேவாலய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொ ழுந்து பாலேஸ்வரி நேற்றுமுன் தினம் (10.07.2009) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்றவர் களான வல்லிபுரம்-இராசம்மா தம்பதிய ரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிவக் கொழுந்து (முத்தண்ணை)யின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசரத்தினம்(O/L.D.O)மற்றும் ஞானேஸ்வரி, புவனேஸ்வரி, சந்தானலட்சுமி ஆகியோரின் சகோதரியும் பாமதி, ஸ்ரீகாந்தா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் பாலச்சந்திரன், சிவாசினியின் மாமியும் பாதுஷன் (இந்தியா), பாரதன் (இந்தியா), சிவதர்சன், பபீசன், ஜெரூஷன், ஜெனீஷன், ஜெசிக்கா ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (12.07.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'அன்னை இல்லம்',
தேவாலய வீதி, திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (சி/559507)

*தகவல்:*
**வ.பாலச்சந்திரன் (மருமகன்)**
**சுகந்தினி யாழ்.விடுதி**

## வீடு வாடகைக்கு

கச்சேரிக்கு அருகில் 80, கண்டி வீதியில் அமைந்துள்ள 2000 சதுர அடிக்கு மேல் வசதி யான வீடு நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு: **021-222-2710** என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (சி/559357)

## உடன் தேவை

*நல்ல நிலையிலுள்ள 49 CC மொடல் மோட்டார் சைக்கிள் உடன் தேவை.*
*( பெண்களின் பாவனைக்கு)*
தொடர்பு. T.P: 0771393640

## இந்தியாவில் படியுங்கள் @

**பிரிந்தாவன் கல்லூரி**

B.Sc
B.B.M.
B.C.A.
B.Com.

பெங்களூர்
பல்கலைக்கழகத்துடன்
இணைந்தது

**2 A/L சித்தியுடன் இணைக**

**ஜூலையில் பாடங்கள் ஆரம்பம்**

மேலதிக விவரங்களுக்கான
தொடர்பு: *0777 317043*

வண். சிவன் சனசமூக நிலையம்
நடத்தும்
*சிவன் பாலர் பாடசாலையின்*

**வருடாந்த விளையாட்டு விழா - 2009**

இடம்:
வைத்தீஸ்வராக் கல்லூரி மைதானம்

காலம்: இன்று(12.07.2009)
ஞாயிற்றுக்கிழமை
பி.ப. ஒரு மணி

தலைவர்:
திரு.ச.இந்திரகுமார் அவர்கள்

பிரதம விருந்தினர்:
திரு.பா.தீபன் அவர்கள்
*(திட்ட அலுவலர், லீட்ஸ் நிறுவனம், யாழ்ப்பாணம்).*

அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

வண். சிவன் சனசமூக நிலையத்தினரும், சிவன் பாலர் பாடசாலை ஆசிரியர்களும், பாலர்களும்.

(சி/559508)

**விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:**

**ஜெகன் களஞ்சியம்**
477, கே.கே.எஸ். வீதி.

**உமா களஞ்சியம்**
378, கே.கே.எஸ். வீதி.

**சுதா நகைத்தொழிலகம்**
80, சிவன் கோயில் வடக்கு.

**சசிரேகா ரேடிங்**
கல்வியங்காடு.

**இராசசி அழகுமாடம்**
கல்வியங்காடு

**லிங்கம் உலோகத் தொழிலகம்**
449, கே.கே.எஸ். வீதி.

**இராமன் சிற்பாலயம்**
306, கே.கே.எஸ். வீதி.

### கலந்துரையாடல் ஒத்திவைப்பு

கோப்பாய், ஜூலை 12

கோப்பாய் கல் விக்கோட்ட தரம் 11 வகுப்புக்கள் நடைபெறும் பாட சாலை அதிபர்கள் மற்றும் தரம் 11 இல் கணிதம் கற்பிக் கும் ஆசிரியர்களுக் கான கலந்துரை யாடல் நாளை திங் கட்கிழமை நடை பெறமாட்டாது.

எதிர்வரும் புதன் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கோப் பாய் கிறிஸ்தவ கல் லூரியில் இந்தக் கலந்துரையாடல் நடைபெறும். என கோப்பாய் கோட் டக் கல்விப் பணிப் பாளர் அறிவித்துள் ளார். (2847)

## கடை வாடகைக்கு

*யாழ்ப்பாணம் முனீஸ்வரன் வீதியல் அமைந் துள்ள கடைகள் வாடகைக்கு விடப்படும்.*
தொடர்பு: **க.சிறி**
144,இராமநாதன்வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 222 7416

## வீடு விற்பனைக்கு

ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளியில் 1½ பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:
S.S.நாதன், 16/3,
விதானையார் வீதி,
சுண்டுக்குளி.
0776146434

## விற்பனைக்கு

202 XXXX
தொடர் இலக்க முடைய ஆட்டோ, Splender + மோட் டார் சைக்கிள் என்பன விற்பனைக்குண்டு.
*தொடர்புகளுக்கு:*
077 1819357
0776141328

## திருமண சேவை

மணமக்களே! www.thaalee.com என்கிற Website இல் பல்லாயிரக் கணக்கான மண மக்களுடைய முழுமையான விவரங்கள், ஜாதகங்கள், புகைப் படங்கள் உள்ளன. நீங் களாகவே உங்களுக்குப் பொருத்தமானவர்க ளைத் தெரிவு செய்து கொண்டு எம்மை நாடி னால் நாங்கள் ஆவன செய்வோம். உங்களு டைய விவரங்களையும்நீங்களாகவே பதிவு செய்து கொள்ள முடியும். மேலதிக விவரங்களுக்கு தொ.பே.: 2523127, 2520619. Address: 45/ 1, மாதம்பிட்டிய வீதி, கொழும்பு - 15.

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.இந்துக்கல்லூரி சூழலில் சகல வசதிக ளும் உடைய வீடு வாடகைக்குத் தேவை.
*தொடர்பு:* 0714220005, 0772487653.

## வாடகைக்கு விடப்படும்

நிறுவனங்களுக்கும், ஆண்களுக்குமான வீடு, அறைகள் Brown Road, முதலாம் ஒழுங் கையில் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 9578244

## தொழிலாளர்கள் தேவை

எமது ஸ்தாபனத்தில் ,வேலை செய் வதற்கு கூலித் தொழிலாளர்கள் தேவை. உடன் நேரில் வரவும்.

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,**
368 B, முஸ்லிம் கல்லூரி வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

## தேவை

**பிள்ளையார் இன் 'A' தரம் உல்லாச விடுதி**
('A' Grade Hotel Approved by the Ceylon Tourist Board)

1. Room Boys
2. Cooks (Western Dishes)
3. Receptionist with Computer / Accounts, Knowledge.

மேற்கூறிய பதவிகளுக்கு யாழ். மாநகர சபை எல்லைக் குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. 13.07.2009 காலை 9 மணிக்கு உங்களுடைய சுயவிவரங்களுடன் நேரில் வரவும்.

(86945)

Pillaiyar INN
31, Manipay Road, Jaffna.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி ஜெயந்திமாலா சிவரத்தினராசா**
திதி:பஞ்சமி (12.07.2009)

தோற்றம்:16-07-1959 மறைவு:26-06-2005

அம்மா அன்பூட்டி எமை வளர்த்தாய்-இன்று உன்னையிழந்து ஆதரவின்றித் தவிக்கின்றோம் தாயே!

உன் நினைவுகளுடன்......
**கணவர், பிள்ளைகள்.**

கைதடி மேற்கு,
கைதடி.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி சிவலிங்கநாதன் கங்காதேவி**

தோற்றம்: 22.10.1951



மறைவு: 23.06.2008

அம்மா!......
ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை எம்மிதயம்
தேடுகின்றோம் உம்மையிங்கே
வாடுகின்றோம் உம்நினைவில்
அன்புக் கணவரும்
ஆசைப் புதல்வர்களும் உனைக்
கண்டு மகிழ்ந்திட
ஒரு முறை வாராயோ!

19,சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## வைத்திய அதிகாரிகள் பற்றாக்குறை

இனப்பிரச்சினை, அதனால் காட்டப்பட்ட பாரபட்சம், ஒதுக்கல், அவற்றைத் தொடர்ந்து மோசமாக வெடித்த யுத்தம், அதன் விளைவாக எதிர்கொள்ள நேர்ந்த பேரழிவுகள் என்று சொல்லமுடியாத துன்பதுயரங்களை எதிர்கொண்டு வேதனையின் விளிம்பில் துவண்டு கிடக்கின்றது, வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகம். அதன் ஒவ்வொரு திக்கிலும் ஒவ்வொரு விதமான அவலங்கள், அனர்த்தங்கள்.

கல்வியிலும், சீரிலும் சிறப்புற்று விளங்கிய யாழ். குடாநாடும்கூட இன்று இந்த வேதனைகளின் தழும்புகளை சுமப்பதில் விதிவிலக்காகி விடவில்லை.

ஒரு காலத்தில் இலங்கையில் வருடம்தோறும் மருத்துவக் கல்விக்கு மிக உச்ச எண்ணிக்கையான மாணவர்களை - எல்லோரும் மூக்கில் விரலை வைத்து ஆச்சரியப் படத்தக்க வகையில் - அனுப்பி வந்த யாழ். குடாநாடு இன்று போதிய - தகுதியும், தகைமையும்பெற்ற - வைத்தியர்கள் இன்றித் துவண்டு கிடக்கும் பரிதாப நிலைமை.

யாழ்.குடாநாட்டின் வைத்திய சேவை நிலைமை குறித்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் புள்ளிவிவரங்களுடன் வெளியிடும் தகவல்கள், உலகம் முழுவதும் வாழும் - தங்களைப் படித்த சமூகம் என்று கருதிக்கொள்ளும் - குடாநாட்டுப் பரம்பரையினரை அதிர்ச்சிக்குள் மட்டுமல்ல, வெட்கத்துக்குள்ளும் ஆழ்த்தும் விதமாக அமைந்திருக்கின்றன.

லண்டனில் மட்டும் ஆயிரத்து ஐந்நூறுக்கும் அதிகமான இலங்கைத் தமிழ் டாக்டர்கள் உள்ளனர் என்று சில புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. கணிசமான எண்ணிக்கையான இலங்கைத் தமிழ் டாக்டர்களுக்கு அங்கு இன்னும் உரிய மருத்துவ நியமனம் கிடைக்கவில்லை என்றும், அத்தேசத்தில் மருத்துவப் பணியாற்றுவதற்கான அடிப்படைத் தகுதிகாண் பரீட்சைக்குத் தோற்றி சித்திபெற வேண்டியவர்களாகப் பலர் காத்திருக்கின்றனர் என்றும் தகவல். இதனால் இலங்கையில் மருத்துவத் தொழில்புரியக்கூடிய வசதியும், தகுதியும் உடையடாக்டர்கள் அங்கு போய் வருமானத்துக்காகப் பிற தொழில்களைச் செய்யும் கட்டாயமும் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

உள்ளூர், உள்நாட்டு டாக்டர்கள், இலங்கையில் கல்வி கற்று தகைமை மற்றும் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டதும் - இறகு முளைத்து - தாங்கள் சுபீட்சம் தேடி வெளிநாடு பறந்து விட இங்கோ மருத்துவ சேவை சீரழியும் பரிதாபம்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 37 வைத்தியசாலைகளையும் இயங்கவைக்கக் குறைந்தது 110 வைத்திய அதிகாரிகளும், 58 பதிவு செய்யப்பட்ட வைத்திய உத்தியோகத்தர்களும் தேவை. ஆனால் குடாநாட்டில் பணியில் இருப்பவர் களோ ஆக 15 வைத்திய அதிகாரிகளும் 19 பதிவு செய் யப்பட்ட வைத்திய உத்தியோகத்தர்களும் மட்டும் தான்.

அதாவது, தேவையான வைத்திய அதிகாரிகளில் ஆக 14 வீதத்தினரையும் பதிவு வைத்திய உத்தியோகத்தர்களில் வெறும் கால் பங்கினரையும் (சுமார் 25 வீதத்தினரையும்) வைத்துக்கொண்டுதான் குடாநாட்டின் மருத்துவ சேவையைக் கொண்டிழுக்கவேண்டியிருக்கின்றது என்பதை சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கேதீஸ்வரன் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இவ்வளவு ஆளணிப் பற்றாக்குறைகளுக்கு மத்தியிலும் யாழ்.குடாநாட்டில் வைத்திய சேவைகளை ஸ்தம்பிக்க விடாமல் - நெடுந்தீவு, அனலைதீவு, புங்குடுதீவு, அம்பன் போன்ற தூரப் பிரதேச வைத்தியசாலைகளைக் கூட மூடிவிட அனுமதிக்காமல் - திடசங்கற்பத்தோடும், உறுதியோடும் அச்சேவையை வழங்கி வரும் சுகாதார சேவைகள் பணிப்பாளரும் அவருடன் சேர்ந்து அருந்தொண்டாற்றும் டாக்டர்களும், உதவி வைத்திய அதிகாரிகளும், ஏனைய மருத்துவ ஊழியர்களும் நன்றியோடும் பெருமையோடும் விதந்து பாராட்டப்பட வேண்டியவர்கள்.

பணி ஓய்வுபெற்றவர்களை மீளப் பணிக்கு அழைத்தும், வைத்தியசாலைகளில் நோயாளர் சேவையை காலை, மாலையாகவோ நாள் ஒழுங்கிலோ மாற்றியும் வைத்தியசாலைகளை மூடிவிடாமல் தொடர்ந்து இயங்கச் செய்வதற்கு அவர்கள் எடுக்கும் அயராத முயற்சிகள், குடாநாட்டு சமூகத்தினால் புரிந்துகொள்ளத்தக்கவை. சேவைகளை நிறுத்திவிடாது, மட்டுப்படுத்தல்களோடேனும் தொடர்வதற்காக விடாப்பிடியாக அவர்கள் எடுத்துவரும் எத்தனத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதே நமது கடமையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு யாழ்.குடாநாட்டில் வைத்திய அதிகாரிகளுக்கு ஆளணிப் பற்றாக்குறை நிலவும் மோசமான நிலையில்தான் புதிய வைத்திய அதிகாரிகள் நியமன விடயங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் புறக்கணிக்கப்பட்டமை தொடர்பான செய்தியும் நாரசமாய் வந்து விழுகின்றது.

மேலதிக கல்விக்காகவும், உயர் பயிற்சிகளுக்காகவும், தமது சொந்த வாழ்க்கைச் சுபீட்சத்துக்காகவும், தமது தாயக மண்ணை விட்டுப் பிரியும் டாக்டர்கள் தங்கள் சேவையின் உயர் பண்பியல்பு கருதியும், அதன் அத்தியாவசிய தேவையைக் கணக்கில் எடுத் தும், தமது தாயக மண்ணில் மாற்று ஒழுங்கு அடிப்படையி லேனும் சில காலத்துக்குப் பணியாற்றத் திரும் புவார்க ளாயின் இந்த மருத்துவ சேவை ஓரளவுக்கேனும் திருப்தி நிலைக்குத் திரும்ப வாய்ப்பு ஏற்படும்.

மேற்குலகு எங்கும் இலங்கைத் தமிழ் டாக்டர்களின் சேவை கோலோச்சிக்கொண்டிருக்க இங்கு தாயக மண்ணில் அச்சேவை சேடம் இழுப்பது நமது இனத்துக்கே அழகல்ல. சிந்திப்பீர்களா புலம்பெயர்ந்த நமது இரத்த உறவுகளான டாக்டர்களே....?

## தென்பகுதிக்கு கடல் உணவுகளை அனுப்பும் சேவையை அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா ஆரம்பித்து வைத்தார்

நல்லூர்,ஜூலை12

யாழ்ப்பாணத்தில் இருந்து கடல் உணவுகளைத் தென்பகுதிக்கு ஏ-9 தரைப் பாதையூடாக அனுப்பி வைக்கும் சேவையை கடற்றொழில் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இது தொடர்பான வைபவம் நேற்றுக் காலை 8 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்னால் இடம் பெற்றது.

கடலுணவுகளை ஏற்றிய வாகனங்கள் யாழ்.வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக நேற்றுக்காலை தரித்து நின்றன.

காலை 8 மணியளவில் அவ்விடத்துக்குச் சென்ற அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா வாகனங்களை இயக்கி வைத்துச் சேவையை ஆரம்பித்து வைத்தார்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தேசியக் கொடியை அசைத்து அவற்றை அனுப்பி வைத்தார்.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த வைபவத்தின் போது இரண்டு 'கூலர்' வாகனங்களில் 262 பெட்டிகளில் 4 ஆயிரத்து 454 கிலோ கடல் உணவுகள் தென் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இவற்றில் நண்டு, இறால், கணவாய் என்பவற்றுடன் கடல் அட்டையும் அனுப்பி வைக்கப்பட்டது.

(50-111-224)



அமைச்சர் மீன் பெட்டிகளை பார்வையிடுவதையும் கூலர் வாகனத்தின் கதவுகளை மூடுவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: லக்ஸ்மன்)

## 'வடக்கின் வசந்தம்' அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எட்டு இடங்களில் அகழ்வாராய்ச்சிப் பணிகள்

கொழும்பு,ஜூலை12

180 நாள் துரிதப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தின் அகழ்வாராய்ச்சித் திணைக்களம் முன்னெடுத்துள்ள விசேட நடவடிக்கையின் அடிப்படையில் வடமாகாணத்தில் எட்டு இடங்கள் அகழ்வாராய்ச்சிக்கெனத் தெரிவாகியுள்ளன.

வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் முன்னெடுக்கப்படும் மிகப்பெரிய வேலைதிட்டம் இதுவென அகழ்வாராய்ச்சித்துறைப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி செனரத் திஸ்ஸநாயக்க தெரிவித்துள்ளார்

வடக்கிலுள்ள பெரும்பாலான அகழ்வாராய்ச்சிக்குரிய இடங்கள் சேதப்படுத்தப்படாமல் உள்ளன. ஆனால் யாழ்ப்பாணம் கோட்டை மற்றும் நிலாவெளி கத்தோலிக்க தேவாலயம் (டச்சு காலத்துக்குரியது) போன்ற முக்கிய இடங்கள் மோதல் நடவடிக்கைகளின்போது சேதமாக்கப்பட்டுள்ளன. இந்த அகழ்வுக் குரிய இடங்களை மீளவும் பழைய நிலையில் பேணவும் அவற்றின் அகத்தூய்வு மதிப்பினை தொடர்ந்து வைத்திருக்கவும் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவிருப்பதாகப் பணிப்பாளர் கலாநிதி திஸ்ஸநாயக்க தெரிவித்தார்.

''உறும அறுன'' திட்டத்தின்கீழ் 10ஆயிரம் வரலாற்று மற்றும் கலாசார இடங்கள் பேணப்படும் என்று அவர் கூறினார்.

வடபகுதியிலுள்ள இடங்களுக்கு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இப்பகுதிகளில் அகழ்வு ஆய்வுகளையும் ஆராய்ச்சிகளையும் துரிதப்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் இவையாகும் என்றார் அவர்.

இந்த ஆய்வு வேலைகளை மேற்கொள்வதற்கு விசேடமாகப் பயிற்சி பெற்ற அலுவலர்களும் அகழ்வுகளை மேற்கொள்வதற்கு திறமைபெற்ற பணியாளர்களும் தமது திணைக்களத்திற் குத் தேவைப்படுவதாகக் கூறிய கலாநிதி திஸ்ஸநாயக்க, இவைகளுக்கான நிதி ஆதாரங்களுக்கு முழுக்கவும் திறைச்சேரியையே நம்பியிருப்பதால் குறிப்பிட்ட சில தெரிவுசெய்யப்பட்ட நிலையங்களில் மட்டுமே அகழ்வாராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது - என்றார். (ப)

## நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழா 27 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பம்

நல்லூர்,ஜூலை12



வரலாற்றுச்சிறப்பு மிக்க கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன்ஆரம்பமாகவுள்ளது.

அடுத்த மாதம் 22 ஆம் திகதி சனிக்கிழமை வைரவர் உற்சவத்துடன் திருவிழா நிறைவடையும்.

விசேட தினங்களின் விவரம் வருமாறு:-

எதிர்வரும் 27 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றம் , அடுத்த மாதம் 5 ஆம் திகதி மாலை 5 மணிக்கு மஞ்சம், 14 ஆம் திகதி மாலை 5 மணிக்கு கார்த்திகைத் திருவிழா, 15 ஆம் திகதி காலை 7 மணிக்கு சந்தான கோபாலர் உற்சவம் அன்று மாலை 5 மணிக்கு கைலாச வாகனம் என்பன இடம்பெறும்.

16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு கஜவல்லி மகாவல்லி உற்சவம் அன்று மாலை 5 மணிக்கு வேல் விமானம், 17 ஆம் திகதி காலை 7 மணிக்குத் தெண்டாயுதபாணி உற்சவம் அன்று மாலை 5 மணிக்கு ஒரு முகத் திருவிழா என்பன இடம்பெறும்.

18ஆம் திகதி மாலை 5 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 19ஆம் திகதி காலை 7 மணிக்குத் தேர்த்திருவிழாவும் இடம்பெறும்.

20ஆம் திகதி காலை 7 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் 21ஆம் திகதி மாலை 5 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும். 22ஆம் திகதி வைரவர் சாந்தி இடம்பெறும்.

(203-111)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 29 | 13.07.2009 |
| | திங்கட்கிழமை |
| திதி: | ஷஷ்டி |
| | மு.இ. 11.22 வரை |
| நட்சத்திரம்: | பூரட்டாதி |
| | பி.ப. 12.26 வரை |
| சுபநேரம்: | 11.59 - 01.29 |
| ராகுகாலம்: | 07.29 - 08.59 |

## வெளிவாரி முடிவுகள் வெளியிடப்பட்டன

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, வெளிவாரிப்பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகினால் நடத்தப்பட்ட கலை முதற் தேர்வுப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

மாணவர்கள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் வெளிவாரிப்பிரிவுடன் தொடர்பு கொண்டு தமது பரீட்சைப் பெறுபேறுகளை அறிந்து கொள்ளலாம் என்பதுடன், மீள்பரீட்சார்த்திகள் உடனடியாகவே மீள் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும் என்று இணைப்பாளர் க.சிவராஜா அறிவித்துள்ளார். (1)

## நீர் இறைக்கும் இயந்திரத்தைக் கண்டுபிடித்த வாரித்தம்பி ஆறுமுகம் காப்புரிமையையும் பெற்றார்

*1920ஆம் ஆண்டு ஜூலை பதினைந்தாம் திகதி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வாரித்தம்பி ஆறுமுகம் என்பவர் நீரிறைக்கும் இயந்திரமொன்றைக் கண்டுபிடித்தார்.*

*இவரது நீரிறைக்கும் இயந்திரம் மூலம் அதிகளவு நீரை (Large Volumes of water) இறைக்க முடிந்தது. வாரித்தம்பி ஆறுமுகம் தான் கண்டுபிடித்த நீரிறைக்கும் இயந்திரத்தை அப்போது வடமாகாண பொறியியலாளராக இருந்த பிறைஸிடம் (W.P.Price) கையளித்தார். நீரிறைக்கும் இயந்திரம் கையளிக்கப்பட்டபோது பொது வேலைத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் கல்டிகொற்றும் உடனிருந்தார். (Public works Deputy Director A.E.Caldicott) வீரகத்தி ஆறுமுகம் தனது நீரிறைக்கும் இயந்திரத்திற்கு காப்புரிமைக்கும் (Patent) விண்ணப்பித்திருந்தார். இவருக்கு காப்புரிமையும் வழங்கப்பட்டது. இவரது நீரிறைக்கும் இயந்திரம் என்னமாதிரியான பொறிமுறை மூலம் இயக்கப்பட்டது என்று தெரியவில்லை. இவரது கண்டுபிடிப்புப் பற்றிய பதிவு வாரித்தம்பி ஆறுமுகம் என ஓர் இடத்திலும் வீரகத்தி ஆறுமுகம் என இன்னோரிடத்திலும் பதியப்பட்டுள்ளது.*

இன்றும் நினைவில் கொள்ள....
அன்றைய ஞாபகம் இங்கே....!

தாண்டவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளவுள்ள வளர்ச்சிப் பணிகள் குறித்த திட்ட அறிக்கையை தங்களிடம் சமர்ப்பிக்கும்

## உள்நாட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்த ஒரு நாட்டிற்கும் இலங்கை ஒரு போதும் அடிபணியப் போவதில்லை.

கடந்த காலத்தைப் பற்றி ஒரு தடவை கூட பேசக் கூடாது. ஏனெனில் அது அர்த்த மற்றது. யுத்தத்துக்கு ஆதரவு வழங்கியது போல் பொதுமக்கள் நாட்டின் அபிவிருத்திக்கும் ஆதரவினையும் பங்களிப்பையும் செய்யவேண்டும்.

சர்வதேச நாடுகளின் தேவையற்ற அறிக்கைகள்

இலங்கைக்கென்று ஒருவரலாறு உள் ளது. எனவே உள்நாட்டு பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளும் உரிமையும் தகுதியும் இலங்கை அரசாங்கத்துக்கு உள்ளது. தற் போது சர்வதேச நாடுகள் சில வடக்கி லுள்ள நலன்புரி முகாம்களை சுட்டிக் காட்டி தேவையற்றவாறு அறிக்கைகளை வெளியிடுகின்றன.

இலங்கை சுயாதீனமான நாடு. எனவே எந்த ஒரு சர்வதேச நாட்டுக்கும் அடிபணிய வேண்டிய தேவையில்லை. சீனா, இந் தியா, ரஷ்யா போன்ற நாடுகள் தலைதூக்கும் காலப் பகுதிலேயே இலங்கையும் உள்ளது. எனவே இலங்கையை கட்டியெழுப் பவே உள்நாட்டில் செயற்பாடுகள் நடைபெறவேண்டும். எங்களை அடிமைப் படுத்தும் நோக்கம் எந்த ஒரு சர்வதேசத் துக்கும் வரக் கூடாது - என்றார். (அ-1)

## உலக வங்கி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தென்னிந்திய திருச்சபையின் பேராயர் எஸ். தியாகராஜாவும் அவரது தூதுக்குழு வினரும் ஜனாதிபதியை நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை சந் தித்துப் பேசினர்.

பேராயர் எஸ். தியாகராஜா, அவரது செயலாளர் அருட்திரு எஸ்.ராஜ்குமார், பாணந் துறை திருச்சபையைச் சேர்ந்த அருட்திரு. சிறிலால் கருணரத்ன ஆகியோர் கொண்ட குழு ஜனாதிபதியை அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் சந்தித்து சுமார் ஒன்றரை மணி நேரம் கலந்துரையாடியது.

ஏ-9 பாதை ஊடான போக்குவரத்து, இடம் பெயர்ந்த மக்களின் மீள் குடியமர்வு, யாழ். மாவட்டத்தில் பாதுகாப்பு அனுமதி பெறுவதில் உள்ள தாமதங்கள் ஆகிய தொடர்பாக பேராயர் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறினார்.

ஜனாதிபதி அப்போது தெரிவித்தவை வருமாறு:

* ஏ-9 பாதை ஊடான பொது மக்கள் போக்குவரத்தை ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன. ஓரிரு தினங்களில் அந்தச் சேவை ஆரம்பிக்கப்படும்.
* ஏ-9 பாதையை அகலாமாக்கி நான்கு வழித் தடங்கள் கொண்ட நெடுஞ்சாலை யாக அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஏ-9 வீதியை நவீனமயப்படுத்தி அமைப்பதற்கான உதவியை வழங்க உலக வங்கி அதிகாரிகள் அங்கு போய் நேரடியாக மதிப்பீடுகளை செய்துள்ளனர்.

* கண்ணி வெடிகளை அகற்றும் குழுக்கள் வன்னிக்கு சென்று விட்டன. அவை முழு வீச்சில் கண்ணி வெடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ளன.
* இடம்பெயர்ந்துள்ள மக்கள் கட்டம் கட்டமாக மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. ஜனவரியில் இடம் பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் னர் கணிசமான எண்ணிக்கையுள்ள மக்கள் மீளக்குடியமர்த்தப் பட்டுவிடுவார்கள்.
* குடாநாட்டில் இருந்து வெளியே செல்வதற்கான பாதுகாப்பு அனுமதி பெறும் நடைமுறைகளைத் தளர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். (அ-1)


தகவல் தொழில் நுட்பத்தில் நீங்களும்
BIT
விஞ்ஞானமாணி தகவல் தொழில்நுட்பம்
Bachelor of Information Technology
University of Colombo School of Computing
விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது
Closing Date 14.07.2009
(A/L) எத்துறை சார்ந்த மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்
DIT⇨HDIT⇨BIT
Further More
• MCS offers to BIT student computer engineering Course. You also achieve MCP & MCTS Professional membership from MICROSOFT
• MCS offers COMTIA A+ module totally free
• MCS offers ICDL (Computer Driving License)
• MCS offers CISCO-CCNA Course fees free
• E learning facilities also available
BIT பட்டமளிப்பில் சிறப்பு விருது பெற்ற நிறுவனம்
விண்ணப்பபடிவங்களிற்கும் பதிவுகளுக்கும்
MCS, 324, Palaly Road, Jaffna.
Supported by UNDP/JRRP


படியும் அவர் கேட்டுக் கொண்டார்.

விரைவாக நிதியுதவி வழங்க முன்வந் துள்ள சீன வங்கிக்கு, அமைச்சர் ரோஹித போகொல்லாகம நன்றி தெரிவித்துக் கொண்டார்.

சீன வங்கியின் நிதியுதவியுடன் இலங் கையின் தெற்குப் பகுதியில் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-1)

## அகதிமுகாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பலி ஒப்புக்கொடுத்து, அங்குள்ள மக்களின் குறைநிறைகளை விசாரித்து அவர்களின் பல்வேறு அடிப்படைத் தேவைகளையும் நிறைவேற்ற முயற்சித்து வருகிறார்.

அத்துடன் மறைமாவட்டக் குழுக்க ளும் யாழ். மறை மாவட்டக் குழுக்களும் ஞாயிறு மற்றும் ஏனைய தினங்களில் இந்த நலன்புரி நிலையங்களுக்குச் சென்று திருப்பலி ஒப்புக்கொடுத்து வரு கின்றனர். (அ-1)

## எண்ணிக்கையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமைகள் மற்றும் இடர்முகா மைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி நீல் புஹூனேயை அழைத்து நேர டியாக இந்தக் கோரிக்கையை தாம் விடுக்க உள்ளதாக அமைச்சர் மேலும் கூறினார்.

களமுனையில் நோயாளர்களுக்கு சிகிச்சை அளித்து கடைசி நேரத்தில் அங் கிருந்து வெளியேறிய டாக்டர்கள் உயிரிழப்புகள் மற்றும் காயமுற்றோர் தொடர்பாக வெளியிட்டுள்ள எண்ணிக்கையை ஏற்று ஐ.நா. தனது எண்ணிக்கையை மீளாய்வு செய்யவேண்டும் என்று கேட்கவுள்ளேன் என்றும் அமைச்சர் கூறினார்.

அதேவேளை -

நலன்புரி நிலையங்கள் தொடர்பாக சர்வதேச சமூகம் தெரிவித்துவரும் குற்றச் சாட்டுக்கள் குறித்துநேரில் ஆராய்வற்காக அமைச்சர் மஹிந்த சமரசிங்க வவுனியா நலன்புரி நிலையத்துக்கு இன்று விஜயம் மேற்கொள்கிறார். (அ-1)

## வணங்காமண்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்னையில் வைத்து இறக்கப்பட்டு 'கொலராடோ' கப்பல் மூலம் அனுப்பப் பட்ட இந்த உதவிப் பொருள்களை, இலங் கைச் செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பேற்றிருந்தது.

செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் இலங்கை அரசு அதிகாரிகளின் அனுச ரணையுடன் இந்த உதவிப் பொருள்களை இன்று வழங்கவிருக்கின்றனர்.

இதேவேளை, சென்னையில் இருந்து பொருள்களை ஏற்றிவந்த [illegible]க்குரிய துறைமுகக் கட்டணங்களை வழங்குவது [illegible] ஏற்பட்டதாகவும் -

கடைசி நேரத்தி[illegible] கட்டணத்தை செலுத்த இந்திய செஞ்[illegible]வைச் சங்கம் இணங்கியதையடுத்து பொருள்களை கொழும்புத் துறைமுகத்தில் இறக்குவ தற்கு அனுமதி வழங்கப்பட்டது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

## அனைத்துக்கட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியிடம் தீர்வு யோசனையின் இறுதி வடிவம் கையளிக்கப்படுவதற்கு முன்பாக அந்த யோசனைகள் தெரிவுக்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளாத கட்சிகளுக்கு சமர்ப்பிக்கப் படும் என்றும் அவர் கூறினார்.

அனைத்துக்கட்சி தெரிவுக்குழுவுக் கான நிதி உதவிகள் அரசாங்க சமாதான செயலகத்தின் மூலமே வழங்கப்பட்டு வந்தன. எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் சமாதான செயலகத்தை மூடுவதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளதால் இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனைகள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக இறுதி செய்யப்படும் எனவும் அவர் கூறி யுள்ளார்.

அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புக் கான அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழு அமைக் கப்பட்டுள்ள நிலையில் சிலர் தமது தலைமையிலான அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழு ரத்துச் செய்யப்பட்டு விட்டதாக தெரிவித்த போதிலும் இந்தக் குழுக்கள் இரண்டு தனித் தனியான விட யங்களைக் கையாளுகின்றன. ஜனாதிபதி சர்வகட்சி அரசியல் குழு கலைக் கப்பட்டு விட்டதாக இது வரை அறிவிக்க வில்லை எனவும் திஸ்ஸ விதாரண கூறினார்.


A/L 2009
பொருளியல் கருத்தரங்கு
S.வரதராஜன் B.A (HONS)
நாளை ஆரம்பம் - 13.07.2009
முன்னர் அறிவிக்கப்பட்டநேர அட்டவணைப்படி நடைபெறும்.
பொருளியல் கல்லூரி,
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.


## புதிதாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ள விமானங்கள் சேவையில் ஈடுபடுத்தப் படும். தினமும் 3 சேவைகளை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளோம். 14 பேர் பயணம் செய்யும் விமானங்களும் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

இப்போது கொழும்பு - யாழ். இரட்டை வழிப் பயணத்துக்கு அறவிடப்படும் 28 ஆயிரம் ரூபாவுக்கு மிகவும் குறைவாகவே எமது கட்டணம் அமையும்.

விமானப் பயணச் சீட்டு விற்பனை செய்யும் அலுவலகம் ஒன்று யாழ். நகரில் விரைவில் திறக்கப்படும் - என்றும் அவர் மேலும் தெரித்தார். (அ-1)

## 'ராடர்'கள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் தரைப்படை அதிகாரிகள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

மன்னார் பகுதியில் 35 அடி நீளப் படகு களில் கடற்றொழில் மேற்கொள்ள அனு மதி வழங்கப்பட்டுள்ளது. அதே போன்று யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களும் 35 அடி நீளப் படகுகளில் ஆழ்கடலில் மீன் பிடிக்க அனுமதிக்க வேண்டும் என்று கடற்றொழிலாளர்கள் கோரிக்கை முன் வைத்தனர்.

இந்தக் கோரிக்கை தொடர்பாக கருத்து வெளியிட்ட தீவுப்பகுதி கடற்படை அதிகாரி டி.எம்.பி. நிற்ரிவ தெரிவித்தவை வருமாறு:-

* கடற்றொழிலுக்கு அனுமதி வழங் கிய போது, எதிர்காலத்தில் கட்டம் கட் டமாக அனுமதிகள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப் பட்டது.
* சிறிய வள்ளங்களில் சென்று ஆழ் கடலில் மீன்பிடிக்க இப்போது அனுமதிக் கப்பட்டுள்ளது.
* 35 அடி நீளமான படகுகளில் சென்று மீன்பிடித்துக்கொண்டிருக் கும் போது ஏதாவது அபாயம் ஏற்பட்டால் உடன் உதவி வழங்க படகுகளுடன் எமக்கு தொடர்பு இருக்க வேண்டும்.

அதற்கு வசதியாக, கடற்படை முகாம்களில் 'ராடர்'கள் வசதி செய்ய வேண்டியுள்ளது. பாதுகாப்பு அமைச்சுடன்தொடர்பு கொண்டு 'ராடர்' கருவிகளை பொருத்திய பின்னர் இரவு நேர ஆழ்கடல் மீன்பிடிக்கு அனுமதி வழங்கப்படும். அப்போது 35 அடி நீளப் படகில்சென்று தொழில் செய்யலாம்.

ஆழ்கடல் மீன்பிடிக் கும் போது எமது பிரதேச மீனவர்கள் எமது கண்காணிப்பில் இருக்க வேண்டும். இல்லையேல் இந்திய மீனவர்களின் தாக்குதலுக்கு உள்ளாகும் அபாயம் நிலை உள்ளது என்றும் அவர் சொன்னார்.

கடற்றொழில் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா கருத்து வெளியிடுகையில் -

இந்தியப் படகுகளின் தொழில் முயற்சிககளை தடுக்கும் வகையில் எமது 'றோலர்' படகுகளை ஆழ்கடல் செல்ல அனுமதித்தால் எமது வளங்களை நாமே பெறலாம். இதனால் இந்திய மீனவர்களின் வருகையும் குறையும்.

எனினும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு குந்தகம் ஏற்படாத வகையில் எமது நடவடிக்கைகள் அமைய வேண்டும் - என்றார்.

மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்குக் குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. இக்குழு மூலம் பிரச்சினை கள் ஆராயப்பட்டு விரைவில் முடிவுகள் அறிவிக்கப்படும் - என்றும் அமைச்சர் தெரிவித்தார். (1-111)

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும் 'இசற்' புள்ளி அடிப்படையில்தான் இந்த அனுமதி வழங்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

மேற்படி விடயம் தொடர்பாக ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க சபையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டு உரையாற்றினார். அதற்குப் பதிலளித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் இந்த வருடம் ஜனவரி மாதம் வெளியிடப்பட்டன. அதேபோல் மாவட்ட மட்டத்திலான வெட்டுப்புள்ளிகளும் வெளியிடப்பட்டன.

ஆனால், இந்தப் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் அல்லது அகில இலங்கை மட்டத்தில் பெறப்படும் புள்ளிகளை அடிப்படையாக வைத்து பல்கலைக்கழக அனுமதி வழங்கப் படுவதில்லை. 'இசற்' புள்ளிகளை அடிப்படையாக வைத்துத்தான் பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படுகிறது.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுக்கு 4 மாதங்களும் 4 நாள்களுமே எடுத்துக் கொள்ளப்பட்டன. மதிப்பீட்டின்படி வெளியிடப் பட்ட பெறுபேறுகளில் திருப்தியடையாததால் இரண்டாவது தடவை மதிப்பீடு இடம்பெற்றது. அதன்பின் வெளியிடப்பட்ட பெறுபேறுகளில் 1.28 வீத மாற்றம் ஏற்பட்டிருந்தது - என்றார். (அ-சி)


Diploma in Computerized Accounting (With Manual Accounting) INDIVIDUAL Classes Speed Batches
#MYOB #Quick Book Pro #Accpack #Tally
புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன, பதிவுகளை நேரில் மேற்கொள்ளவும்
324, Palaly Road, Jaffna. *Supported by UNDP/JRRP*

கட்டடம் தேவை
நெல்லியடி, மானிப்பாய் பகுதிகளில் நகர மத்தியில் அமைந்த 1000 தொடக்கம் 3000 சதுர அடி வரையான பரப்பளவுடன் கூடிய கட்டடம் குத்தகைக்குத் தேவைப்படுகின்றது.
விண்ணப்பதாரர்கள் தமது கோரிக்கைகளை உரிய ஆவணங்களுடன் 10 நாள்களுக்குள் அனுப்பி வைக்கும்படி வேண்டிக் கொள்ளப்படுகிறீர்கள்.
GENERAL MANAGER / CHIEF EXECUTIVE OFFICER,
SEYLAN BANK PLC ,-HEAD OFFICE
CEYLINCO SEYLAN TOWERS
NO - 90, GALLE ROAD, COLOMBO -03.

விரைவு! பாதுகாப்பு! நம்பகத்தன்மை!
குறைந்த கட்டணத்திலான உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவைகள்
FedEx Express
வாடிக்கையாளரின் நலன் கருதி
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்பு பொருட்கள், உணவுப்பொருட்கள், உடுப்புகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
திருமுருகன் கொம்னெற்
259, கே. கே. எஸ்வீதி, யாழ்ப்பாணம்.
T.P 2227835
இல. 46, அடியபாதம் வீதி, திருநெல்வேலி
TCN Express
2B, Nelson Place,
Colombo 06.
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.


எம் நினைவில் வாழும்
அமரர் மணியம் கணபதிப்பிள்ளை அவர்களின்
இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 27 ★ 08 ★ 1951



உதிர்வு 12 ★ 07 ★ 2007

நீங்கள் குடும்பத்துக்கோர் உற்ற தலைவனுமாய்
உற்றார்க்கு உண்மை உறவினருமாய்
மற்றோர்க்கு நல்ல நண்பனுமாய்
மாணவர்க்கோர் சிறந்த அதிபருமாய்
இவ்வுலக வாழ்க்கை மறந்து விண்ணுலகம் சென்றதேனோ?
பிரிந்தும்-பிரியாமலும் எங்களுடன் வாழும்-நீங்கள்

உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றென்றும் எம் பிரார்த்தனைகள்.

"சாந்தி", நெல்லண்டை, பருத்தித்துறை.

உங்கள் பிரிவால் வாடும்: மணியம் கணபதிப்பிள்ளை ஞாபகார்த்த நிதியம்.

www.nellandai.com.

(86915)


LAVA HOSPITAL
75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333
ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வு கூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
Basic Body Checkup
'அடிப்படை உடற் பரிசோதனைகள்'
★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=

அடுத்த பிரிவு ஆரம்பம்
AAT, HNDA, Bcom. BBA பூர்த்தி செய்து பாடவிலக்கு பெற விண்ணப்பித்தவர்களும், புதிதாக விண்ணப்பிப்போரும் 14.07.2009 க்கு முன் உடன் தொடர்பு கொள்ளவும்.
CIMA
விபரங்களுக்கு நேரில்
MCS 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
Supported By UNDP/JRRP


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.07.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org